மனமும்
அதன் விளக்கமும்

பெ. தூரன்

மனமும் அதன் விளக்கமும்

(உளவியல் நூல்)

பெ. தூரன்

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59, பிராட்வே · சென்னை-1.

உரிமை பதிவு

திருத்தி விரிவாக்கிய பதிப்பு : மார்ச், 1968

விலை ரூ. 1-75

சுதந்திர நிலைய வெளியீடு

MARUTHY PRESS, 83, Peters Road, Madras-14.

பொருள் அடக்கம்

மனம் எனும் மாயை	...	5
மனமே பொய்யா?	...	11
மாயக் குரங்கு	...	16
மறை மனம்	...	20
மாறுபட்ட கருத்துகள்	...	25
மூன்று பிரிவுகள்	...	29
நினைவும் கற்பனையும்	...	31
கனவு	...	36
கனவும் மனமும்	...	43
கனவின் பொருள்	...	48
பகற் கனவு	...	56
கிலி	...	62
கற்றுக் கொடுத்தது யார்?	...	67
உள்ளக் கிளர்ச்சி	...	72
ஓட்டம் முன்னதா, பயம் முன்னதா?	...	77
மன வசியம்	...	81
இன நனவிலி மனம்	...	87
மன நலம்	...	93
நமக்குப் பெருமை	...	100

சமர்ப்பணம்

என் அன்பு மாணவன்

நடராஜனுக்கு

மனமும் அதன் விளக்கமும்

மனமெனும் மாயம்

மனம் என்பதென்ன? அது எங்கே இருக்கிறது? கை, கால், கண், இதயம் என்றால் உடம்பில் உள்ள உறுப்புகள் என்று உடனே தெரிகிறது. அவைகளுக்கு வடிவம் உண்டு. பருமன் உண்டு. ஆதலால் அவைகளை எளிதில் அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் மனம் என்பது எது? அதற்கு வடிவம் உண்டா? பருமன் உண்டா? தொட்டுப் பார்த்து அறிந்துகொள்ள முடியுமா? இவ்வாறு எண்ணிப் பார்த்தால் ஒன்றும் விளங்குவதில்லை. இவ்வாறு எண்ணுவதற்கு அந்த மனமே காரணமாக இருக்கிறதென்று தோன்றுகிறது. ஆனால் அது என்ன என்று மட்டும் எளிதில் அறிந்துகொள்ள முடிகிறதில்லை. மனத்திற்கு உருவமில்லை; கன பரிமாணமும் இல்லை. மனம் என்பது தசை, நரம்பு முதலியவைகளால் ஆக்கப்பட்டதன்று. அது சடப்பொருள் அன்று; அது சூக்குமப் பொருள். சடப்பொருள் என்றால் அது உடம்பைச் சேர்ந்த ஓர் உறுப்பாகிவிடும்; எளிதாக அதை அறிந்துகொள்ளவும் முடியும்.

சிலர் மூளைதான் மனம் என்று தவறாகக் கருதுகிறார்கள். மூளை என்பது உடம்போடு சேர்ந்த ஒரு பருப்பொருளான உறுப்பு. அது மனம் அல்ல,

சூக்குமப் பொருளாக மனம் இருக்கிறதென்று மட்டும் நமக்குப் புலனாகிறது. அந்த மனந்தான் ஆசைகள், எண்ணங்கள், நோக்கங்கள், நம்பிக்கைகள் முதலியவற்றிற்கு இடமாயிருக்கிறதென்று தெரிகிறது. அம் மனத்திற்கும் உடம்பிற்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறதென்றும் தெரிகிறது. மனம் உடம்பைப் பாதிக்கின்றது; உடம்பு மனத்தைப் பாதிக்கின்றது. பயம் ஏற்படும்போது உடல் நடுங்குகிறது; கோபம் வரும்போது முகம் சிவக்கிறது; துக்கமுண்டாகும் போது கண்ணீர் வருகிறது. பயம், கோபம், துக்கம் முதலிய உணர்ச்சிகள் மனத்தில் உண்டாகின்றன. அவற்றால் உடல் பாதிக்கப்படுவதை நாம் காண்கிறோம். குடி வெறியனுடைய கண்ணிலே மாட்டிற்கு நான்கு கொம்புகள் இருப்பதாகத் தோன்றுகின்றன. கஞ்சாக் குடித்தவனுக்குப் புதுஉலகமே தோன்றுகிறது. இரவிலே வயிறு புடைக்கத் தின்றவனுக்குப் பலவிதமான கனவுகள் தோன்றுகின்றன. இவைகளெல்லாம் உடல் மனத்தைப் பாதிப்பதற்குச் சான்றுகள்.

இங்கே ஒரு ஐயம் தோன்றலாம். சூக்குமமான ஒன்று சடப் பொருளை எவ்வாறு பாதிக்க முடியும் என்ற கேள்வி பிறக்கலாம். கோடரி பாய்ந்தால் மரம் வெட்டுப்படுகிறது. ஒரு பருப் பொருள் மற்றொரு பருப் பொருளைப் பாதிக்கின்றது. இதை அறிந்து கொள்வது எளிது. ஆனால் மனம் எப்படி உடம்பைப் பாதிக்கிறது என்பதுதான் விளங்குவதில்லை.

மனத்தைப்பற்றி அறிந்துகொள்ள இரு வழிகள் சொல்லப்படுகின்றன. ஒன்று சிந்தனை செய்து பார்த்தல்; மற்றொன்று கவனித்தல். நடத்தையையே பிரதானமாகக்கொண்டு மனத்தைப்பற்றி அறிந்து கொள்ள முயலும் ஒரு சாரார் இருக்கின்றனர். அவர்

களுக்கு நடத்தைக் கொள்கையர் (Behaviourists) என்று பெயர். அவர்கள் மேலே கூறிய முதல் வழியைத் தவறானதென்று கண்டிக்கிறார்கள். மனந்தான் சிந்தனை செய்ய உதவுகிறது என்று சொல்லுகிறோம். அவ்வாறிருக்க அதைக்கொண்டே அதைப்பற்றி எப்படிச் சிந்திப்பது? மனத்தைப்பற்றி அறிய மனத்தையே கருவியாகப் பயன்படுத்தும்போது தவறுகள் நேர்கின்றன. யார் எதை மனத்தில் கொண்டு நோக்குகிறார்களோ அதுதான் அவர்களுக்குத் தோன்றுகிறது. தெருவிலே செருப்புத் தைக்கிறவன் உட்கார்ந்திருக்கிறான். அவனுக்கு நாட்டமெல்லாம் செருப்பின் மேலேதான். தெருவிலே செல்லுகிறவர்களுடைய செருப்புப் பழுதுபட்டிருந்தால் அதுதான் அவன் கண்ணில் படுகிறது; அவர்களுடைய முகம் அவனுக்கு அவ்வளவாகத் தெரிவதில்லை. ஒரு ஓவியன் காட்டு வழியிலே செல்லுகிறான். அவனுக்கு எத்தனையோ அழகிய நிற வேற்றுமைகள் தென்படுகின்றன. விலங்குகளை வேட்டையாடுவதற்காக மலைக்காட்டில் புகுந்தவன் கண்ணில் அத்தனை இயற்கை எழிலும் படுவதில்லை; கறையான் புற்றுகளும் புதர்களும் மான் போலவும், மற்ற விலங்குகள் போலவும் தெரிகின்றன.

ஓர் உளவியல் அறிஞர் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார். வகுப்பிலுள்ள மாணவர்களில் ஒருவன் திடீரென்று எழுந்து கோபமாக ஏதோ வார்த்தை சொன்னான். சுழல் துப்பாக்கியை எடுத்து ஆசிரியரைப் பயமுறுத்தினான். எல்லாரும் திகைத்துப் போனார்கள். ஆனால், அருகிலிருந்த இரு மாணவர்கள் அவன்மேல் பாய்ந்து துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டு அவனை வெளியேற்றினார்கள். ஒழுங்கீனமாக நடந்துகொண்ட அம்மாணவன் மீது வழக்குத் தொடர

வேண்டுமென்று உளவியலறிஞர் மற்ற மாணவர்கள் அனைவரையும் தாங்கள் கண்ட சம்பவத்தைப்பற்றித் தனித் தனியாக உள்ளதுள்ளவாறு எழுதித்தருமாறு கேட்டுக்கொண்டார். அப்படி அவர்கள் எழுதிக் கொடுத்தவற்றையெல்லாம் ஆராய்ந்தபோது முக்கிய மான செய்கைகளைப் பற்றியே மாறுபட்ட குறிப்புகள் காணப்பட்டன. அவர்கள் எழுதினவெல்லாம் ஒரே மாதிரி இருக்கவில்லை. மேலே குறித்த சம்பவம் ஓர் ஆராய்ச்சிக்காகவே நடிக்கப்பட்டது. ஆசிரியருக்கும் மூன்று மாணவர்களுக்கும் தவிர மற்றவர்களுக்கு அது வெறும் நடிப்பு என்று தெரியாது. இயல்புக்குத் தக்க வாறு வெவ்வேறு அம்சங்களே மனத்தில் பதிகின்றன என்பதை மெய்ப்பிக்க இந்தச் சோதனையை அவர்கள் செய்தார்கள்.

இவற்றிலிருந்து மனத்தைக் கொண்டு அதைப் பற்றியே சிந்தித்துப் பார்ப்பதென்பது சரியல்ல வென்று ஏற்படுகிறது. கையைப்பற்றி அறிய மனம் உதவலாம்; வேறு உறுப்புகளைப்பற்றி அறிந்துகொள்ள மனம் உதவலாம்; ஆனால் அது தன்னைப்பற்றியே அறிந்துகொள்ளச் சரியான கருவியாகுமா?

அதனால் இம்முறை சரியானதல்லவென்று நடத் தைக் கொள்கையர் ஒதுக்குகிறார்கள். மனம் எவ்வாறு வெவ்வேறு நிலைகளில் நடந்துகொள்கிறது என்பதைக் கவனித்து அதன் மூலமாக மனத்தைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்று அவர்கள் கருதுகிறார்கள். அதற்காக அவர்கள் மிகப் பல சோதனைகள் செய்திருக் கிறார்கள். ஏதாவது ஒரு நிலைமையை ஏற்படுத்தினால் அந்த நிலைமைக்குத் தக்கவாறு உயிர்ப் பிராணி களிடத்து ஒரு வகையான செயல் நிகழ்கின்றது என்றும், அந்நிகழ்ச்சிக்கு மனம் என்பதொன்று

காரணமாக இருக்கவேண்டியதில்லை என்றும் அவர்கள் தங்கள் ஆராய்ச்சிகளின் மூலம் கூறுகிறார்கள். அவர்கள் செய்த சுவையான சோதனை ஒன்றை இங்கே குறிப்பிடுகிறேன்.

உணவைக் கண்டதும் வாயில் நீர் சுரப்பது சாதாரணமான ஒரு செயல். ஒரு நாயின் முன்னால் உணவை வைக்கும்போதெல்லாம் மணியோசை கேட்கும்படியாகப் பல நாட்கள் தொடர்ந்து செய்தார்கள். உணவைக் கண்டபோதெல்லாம் நாயின் வாயில் நீர் சுரந்து கொண்டிருந்தது. பின்பு ஒருநாள் உணவைக்கொண்டு வராமலேயே மணியோசை மட்டும் கேட்கும்படி செய்தார்கள். அப்பொழுதும் அந்நாயின் வாயில் நீர் சுரக்கலாயிற்று. உணவைக் காணும்பொழுதே மணியோசையைப் பலமுறை அந்நாய் கேட்டிருக்கிறது. அவை இரண்டும் ஒருங்கு தோன்றிய காலத்தில் நிகழ்ந்த வாயில் நீர் சுரக்கும் செயலானது மணியோசையை மட்டும் கேட்டவுடன் உண்டாகத் தொடங்கியது. உணவைக் கண்டதாலும், மணியோசையைக் கேட்டதாலும் ஏற்பட்ட உணர்ச்சிகள் நரம்புகளின் வழியே மூளைக்குச் செல்கின்றன. அவற்றின் பயனாக அங்கிருந்து ஒருவகை உணர்ச்சி தோன்றிச் செயல் நரம்பின் வழியாக வாய்க்குச் சென்று நீர் சுரக்கும்படி செய்கின்றது. இவ்வாறு கண் பார்வைக்கும் செவி உணர்விற்கும் வாயில் நீர் சுரப்பதற்கும் இடையே மாறாத ஒரு தொடர்பு ஏற்பட்டுவிடுகிறது. அதனால் மணியோசை மட்டும் கேட்கிற காலத்திலும் வாயில் நீர் சுரக்கத் தொடங்குகிறது. இந் நிகழ்ச்சிக்குக் காரணமாக மனம் என்பதொன்று இருக்க வேண்டியதில்லை என்று நடத்தைக் கொள்கையர் சொல்லுகிறார்கள். எந்திரத்திலே ஏதாவது ஒரு விசைக்

கருவியை அழுத்தினால் அதன் பயனாக உடனே ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியுண்டாவதுபோல உயிர்ப் பிராணிகளிடத்தும் ஒரு குறிப்பிட்ட நிலைமையில் ஒரு குறிப்பிட்ட செயல் நிகழ்கின்றது என்பது அவர்கள் வாதம். சாதாரண எந்திரத்தின் தன்மையை எளிதாக அறிந்து கொள்ள முடியும். மனித எந்திரம் அதிகச் சிக்கல்களும் நுண்மையும் வாய்ந்ததாகையால் அதன் தன்மையை அவ்வளவு எளிதாக அறிந்துகொள்ள முடிவதில்லை. இதுதான் இரண்டிற்குமுள்ள வேறுபாடு என்கிறார்கள் அவர்கள்.

வாழ்க்கையிலே பல விஷயங்களைப்பற்றி நாம் சிந்திக்கிறோம். சிந்தித்து முடிவுக்கு வந்த பிறகுதான் எதையும் செய்யவேண்டும் என்கிறோம். மனம் என்பதொன்றில்லாவிட்டால் எவ்வாறு யோசனை செய்ய முடியும் என்று ஐயம் உண்டாகலாம். அதற்கும் நடத்தைக் கொள்கையர் விடை கூறுகிறார்கள். சொற்களில்லாமல் சிந்திப்பதென்பது இயலாது. நாம் சிந்திக்கிறோமென்றால் சொற்களின் மூலமாகத்தான் செய்கிறோம். பேசும்போது சொற்களை உச்சரிக்கிறோம். எண்ணும்போது சொற்களை உச்சரிப்பதில்லை. இருந்தாலும் சொற்கள் குரல்வளையிலுள்ள பல தசை நார்களின் நுட்பமான அசைவுகளினால் உருவாகின்றன. ஆதலால் எண்ணுவதென்பதெல்லாம் உச்சரிக்கப் படாத பேச்சுத்தான் என்றும், அதற்கு மனம் தேவையில்லை என்றும் நடத்தைக் கொள்கையர் சாதிக்கிறார்கள்.

அவர்கள் கூற்றை ஒப்புக்கொண்டு மனம் என்பதொன்றில்லை என்று முடிவு கட்டிவிடலாமா என்றால் அதிலும் பல ஐயங்கள் தோன்றுகின்றன. அவற்றைப் பற்றி அடுத்த பகுதியில் ஆராய்வோம்.

மனமே பொய்யா ?

நுணுகி ஆராய்கின்றபோதுதான் பல ஐயங்கள் பிறக்கின்றன. மேற்போக்காகப் பார்க்கின்றபோது எளிதாகத் தோன்றியவை ஆழ்ந்து நோக்கும்போது மயக்கத்தைத் தருகின்றன; பலவகையான முரண்பட்ட கருத்துகளுக்குக் காரணமாகின்றன. மனத்தைப் பற்றிய ஆராய்ச்சியிலும் இதே தொல்லைதான். மனம் என்பது என்ன என்று ஆராயப் புகுந்த சிலர் மனம் என்பதே இல்லை என்று முடிவு கட்டியுள்ளார்கள். இவர்கள் கூறுவதை ஒத்துக்கொள்ள முடியாது என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள்.

நடத்தைக் கொள்கையர் கூறுவதுபோலப் புலன்களின் வழியாக மூளைக்குச் சென்ற புலன் உணர்வு (Sensation)களுக்குத் தக்கவாறு செயல் நிகழ்கின்றதென்றும் அச்செயலுக்குக் காரணமாக மனம் என்பதொன்று தேவையில்லை என்றும் கொள்வதிலேயும் பல ஐயங்கள் கிளம்புகின்றன. புலனுணர்வானது நரம்புகளின் வழியே மூளைக்குச் செல்கின்றது; அதற்குப் பொருத்தமான செயலுணர்வு வேறு சில நரம்புகளின் வழியாக உறுப்புகளுக்குச் செல்கின்றது. புலன் உணர்வைக்கொண்டு செல்லும் நரம்புகளுக்கும் செயல் உணர்வைக்கொண்டு செல்லும் நரம்புகளுக்குமிடையே தொடர்பை மூளையானது எந்திரம்போல உண்டாக்குகிறது என்று சொல்லும்போது எல்லாம் எளிதாகத் தான் காண்கிறது. இதைச் செய்ய மனமே தேவையில்லையென்றும் தோன்றுகிறது. ஆனால் இந்த ஆராய்ச்சி அவ்வளவு எளிதானதல்ல. மனத்தை அவ்

வளவு எளிதாக ஒதுக்கித்தள்ளிவிட முடியாது. புலன் உணர்வால் மட்டும் செயல் நிகழ்கிறதென்றால் புலனுணர்விற்குக் காரணமாக ஏதாவதொன்று முன்னாலிருக்க வேண்டும். எதிர்காலத்திலே தோன்றக்கூடிய ஒன்று இன்று புலன் உணர்விற்குக் காரணமாக இருக்க முடியாது. எதிரில் ஒரு பழம் இருந்தால் அதைப் பற்றிய உணர்வு கண்களின் வழியாக மூளைக்குச் செல்லும். மூளையின் செய்கையால் அப்பழத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற செயல் உணர்வு கைகளுக்கு வரும். அதனால், பழத்தை எடுத்துக் கொள்ளும் செயல் நிகழும். மெய்தான். ஆனால் பழம் எதிரிலே இல்லாவிட்டால் அந்தச் செயல் நிகழ முடியாது.

உயிர்ப் பிராணிகள் இதுபோன்ற புலன் உணர்வின் விளைவாகவே செயல் புரிகிறதில்லை. பின்னால் ஏற்படப் போகும் ஒரு நிலைமையை எண்ணிப் பார்த்தும் அவைகள் செயல் புரிகின்றன. இனப் பெருக்கத்தை எடுத்துக்கொள்வோம். முட்டை இடுவதற்குப் பல நாட்களுக்கு முன்பே காக்கைகள் கூடு கட்டத் தொடங்குகின்றன. குயில்கள் கூடு கட்டாவிடினும், தாமிட்ட முட்டைகளைத் தந்திரமாகக் காக்கைக் கூடுகளிலே சேர்க்கின்றன. இதுபோன்ற செய்கைகள் எல்லாம் புலன் உணர்வால் ஏற்பட்டவையல்ல. இவை இயல்பூக்கமாகச் (Instinct) செய்தவையாகும்.

எதிர்காலத்தில் விளைவனவற்றை எண்ணிப் பார்த்து மனிதன் பல செயல்களைப் புரிகிறான். அவன் பல நூல்களைக் கற்றுத் தேர்ந்து பட்டம் பெற முயல்கிறான். அப்படிப் பட்டம் பெறுவதால் விளையப் போகும் நன்மையை எண்ணியே அவன் பெரு முயற்சி எடுத்துக்கொள்ளுகிறான். பின்னால் வரப்போவதை

முன்னாலேயே எதிர்பார்க்கும் தன்மையானது புலன் உணர்வால் ஏற்படும் செயலாகாது. அவ்வாறு எதிர் பார்க்கக்கூடிய திறமைக்கு மனமே காரணமாக இருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது.

இனிமேல் வரப்போவதை எதிர்பார்த்துச் செயல் புரிவது போலவே இறந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நினைவில் கொண்டு செயல் புரிவதும் மனத்தின் தன்மையாகும். மனம் என்பதொன்றில்லா விட்டால் நினைவு ஆற்றல் எவ்வாறு உண்டாகிற தென்பதை எளிதாக விளக்க முடியாது. நடத்தைக் கொள்கையர் அதற்கும் ஒரு வகையான விளக்கம் கூறு கிறார்கள். ஆனால், அது முற்றிலும் பொருத்தமான தாகத் தோன்றவில்லை.

திடீரென்று ஒரு புலி எதிர்ப்பட்டால் அச்சமெனும் உள்ளக்கிளர்ச்சி (Emotion) உண்டாகிறது. அந்த உள்ளக் கிளர்ச்சிக்கு, எதிரே தோன்றும் புலியே காரணம். நடத்தைக் கொள்கையர் கொள்கைப்படி மனமென்பதொன்றில்லாமலேயே இதை நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் அச்சக் கிளர்ச்சிக்குக் காரண மாக எதிரிலேயொன்றுமில்லாதபோதும் பல சமயங்களில் அச்சம் உண்டாகிறது. சிறந்த பண்டிதர்கள் அடங்கிய சபையிலே அடுத்த வாரம் நான் பேச ஏற்பாடாகியுள் ளது என்று வைத்துக்கொள்வோம்; எனக்கு இப் பொழுதே அச்சம் உண்டாகிறது. கவலை பிறக்கிறது. அந்தச் சபையிலே பண்டிதர்களில்லாமல் இளம் மாண வர்கள் மட்டும் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள் ளுவோம். எனக்கு அச்சக் கிளர்ச்சியே தோன்றுவ தில்லை. மகிழ்ச்சியே பிறக்கிறது. பின்னும் வரப் போகும் இந்த நிலைமை இப்பொழுதே எனக்கு அச்சத் தையோ மகிழ்ச்சியையோ அளிக்கின்றது. மனம்

என்பதொன்றில்லாவிட்டால் இது இயலாதென்று நிச்சயமாகக் கூறலாம்.

மெக்டூகல் (McDougall) என்ற உளவியலறிஞர் மனம் என்பதொன்றுண்டு என்பதை விளக்க ஒரு அழகான சான்று காட்டுகிறார்: ஒருவருக்கு, 'உமது மகன் இறந்துவிட்டான்' என்று தந்தி வருகிறது. உடனே அவர் மூர்ச்சித்து விழுகிறார். பிறகு ஒருவாறு தன் உணர்வு பெற்று எழுந்திருந்தாலும் அவருடைய பிற்கால வாழ்க்கையே மாறுபட்டுவிடுகிறது. ஆனால் அதே வேளையில் அருகிலிருந்து அந்தத் தந்தியைப் படித்த மற்றொருவருக்கு இவ்வித மாறுதல்கள் ஏற்படுவதில்லை. முன்னவரிடம் சிறிதுபரிவு காட்டுவதோடு அவர் உள்ளக் கிளர்ச்சி நின்றுவிடுகிறது. ஒரே தந்தி வேறுவேறான உள்ளக் கிளர்ச்சிக்குக் காரணமாக இருக்கவேண்டுமானால் அத்தந்தியில் கண்டுள்ள சொற்களில் பொருளை வேறுவேறாக அறிந்துகொள்ளக்கூடிய ஒரு ஆற்றல் இருக்கவேண்டும். அந்த ஆற்றலுக்கு நிலைக்களனாக இருப்பதுதான் மனம்.

எதிரிலே ஒரு திரையும் பல வண்ணங்களும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவைகள் ஒரு வகையான உணர்ச்சியை நமக்குத் தருகின்றன. ஆனால் திரையிலே வண்ணங்களை ஏற்றவாறு தீட்டிவிட்ட பிறகு வண்ணங்கள் என்றும் திரை என்றும் தனித்தனி உணர்ச்சி மறைந்து ஒரு அழகிய நங்கையின் உருவம் தென்படுகிறது. அவளுடைய உணர்ச்சிகளும் தோன்றுகின்றன.

முன்பு கண்ட வண்ணங்களே அந்த ஓவியத்தில் இருக்கின்றன. இவ்வாறு வண்ணங்களை ஒருங்கு சேர்த்து ஒரே பொருளாகப் பார்க்கும் ஆற்றல் நமக்

கிருக்கின்றது. அந்த ஆற்றலைப் பற்றி எண்ணும் பொழுது மனம் என்பதொன்று இருக்கவேண்டு மென்று தோன்றுகிறது.

மேலே கூறியவற்றிலிருந்து உடலும் மூளையும் அல்லாமல் சூக்குமமாக மனம் ஒன்று இருக்கிறதென்று தெளிவாகும். மூளைக்கும் மனத்திற்கும் நெருங்கிய தொடர்பிருந்தாலும் மூளை வேறு; மனம் வேறு. மூளைக்கு அடங்காமல் வேலை செய்வது மனம். விமானத்தின் சாரதி எவ்வாறு அதன் எந்திரங்களைத் தன் விருப்பப்படி இயக்குவாஞே அதுபோலவே உடலி லுள்ள உறுப்புகளைப் பெரியதோர் அளவிற்கு மனம் இயக்குகின்றது. மனம் வேகம் நிறைந்தது; ஒன்ருக இணைத்து நோக்க வல்லது; எதிரே உள்ள நிலைமையால் ஏற்பட்ட உணர்விற்கேற்பச் செயல் புரிவதோடு எதிர் காலத்தையும் இறந்த காலத்தையும் எண்ணிச் செயல் புரியக் கூடியது. மனம் கற்பனை செய்யும் ஆற்றலும் வாய்ந்தது. இம்மனமே மனிதனுக்குத் தனிச் சிறப்பை அளிக்கின்றது.

மாயக் குரங்கு

மனம் மிகப் பொல்லாதது என்பதற்கு எடுத்துக் காட்டாக அதன் மாயச் செய்கை ஒன்றை இங்குக் கூற விரும்புகிறேன். ஒருவனுக்கு ஏதாவது ஒன்றின்மேல் விருப்பம் இருக்கும். ஆனால் அவன் அந்த விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்வதைப் பிறர் உணர்ந்தால் அவனைப் பற்றிக் குறைவாக எண்ணுவார்கள். சமூகம் அவனைப் பழிக்கும். இது அவனுக்குத் தெரியும். இருந்தாலும் அந்த ஆசை மட்டும் விடாது. அந்த நிலையிலே அவன் தன்னை அறியாமலேயே தனது செய்கையைப் பிறர் ஆமோதிக்க வேண்டுமென்று அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஏதாவது ஒரு காரணம் கற்பிக்கத் தொடங்குவான். அவனுடைய மனம் இந்த வேலையைச் செய்கிறது. அவன் தெரிந்தே காரணம் கண்டுபிடிக்கலாம். அல்லது அவனறியாமலேயே இந்தக் காரணம் கண்டுபிடிக்கும் வேலை நடக்கும். அவனுக்கே இந்த மர்மம் தெரியாது. மனம் தந்திரமாக இதைச் செய்துவிடும். அவனும் அது சரியான காரணந்தான் என்றும், அதனாலேயே அதை விரும்புவதாகவும் நிச்சயமாக நம்புவான்.

மது அருந்தும் பழக்கமுள்ள ஒருவனை எனக்குத் தெரியும். அவன் கள் குடிப்பதற்குத் தனக்குள்ள ஒரு நோய்தான் காரணம் என்று பிறர் அறியும்படி கூறுவான். கள்ளைக் குடிக்காவிட்டால் வயிற்றுவலி நீங்குவதில்லையாம். எத்தனையோ மருந்துகளையெல்லாம் சாப்பிட்டும் இந்த நோய் குணமடையவில்லை. இறுதியாக இந்த மருந்துதான் குணம் கொடுத்ததாம்.

கள்ளைக் குடித்துக் கொண்டிருந்தால் வயிற்று வலியே அவனுக்கு வருவதில்லை.

குடிகாரனைச் சமூகம் தாழ்வாக மதிக்கும் என்று அவன் அறிந்திருக்கிறான். இருந்தாலும் கள்ளின் மேலுள்ள ஆசைமட்டும் அவனை விடுவதாகக் காணோம். அதனால் அவனுடைய மனம் இது போன்ற ஒரு காரணத்தை அவனறியாமலேயே கற்பித்துக்கொடுத்திருக்கிறது. அந்தக் காரணம் முற்றிலும் சரியென்று அவனே நம்புகிறான்.

இவ்வாறு நிகழ்வதில் அவன் தன் காரணத்தைச் சரியானதென்று நம்புவதோடு இன்னும் ஒரு ஆச்சரியமென்னவென்றால் உடல் நிலையும் பல சமயங்களில் அதற்கேற்றவாறு அமைந்துவிடுகிறது. கள் குடிக்காவிட்டால் வயிற்றுவலி உண்மையாகவே அவனுக்கு வந்துவிடுகிறது.

ஒரு சங்கீத வித்வான் தமது இசையரங்கிற்குக் கூட்டம் வராததற்குக் கீழ்வருமாறு காரணம் சொன்னார். "இன்றைக்குக் குதிரைப் பந்தயமல்லவா? அதனால் எல்லாரும் அங்கே போயிருப்பார்கள்" என்றார் அவர். உண்மையில் அவருடைய இசையரங்கு மக்களுக்குப் பிடிக்கவில்லை என்ற உண்மை அவருக்குத் தெரியும். அதை மறைப்பதற்காக அவர் தெரிந்தே இந்தக் காரணத்தைக் கற்பித்திருக்கிறார்.

இது போன்று அறிந்தோ அறியாமலோ காரணம் கற்பிக்கும் செயலுக்கு அறிவுப் பொருத்தந் தேடல் (Rationalisation) என்று பெயர். ஆனால் மேலே கூறியது போல அறிவுப் பொருந்தத் தேடல் என்பது அவ்வளவு எளிமையானதுமல்ல. அது இன்னும்

சிக்கலானது. மனத்திலே ஆழ்ந்து பதிந்து கிடக்கும் ஏதோ ஒரு உணர்ச்சியாலும் இது ஏற்படலாம். வீட்டின் உட்புறச் சுவரில் ஒட்டுவதற்காக ஒருத்தி சிவப்பு நிறக் காகிதம் வாங்க விரும்பியதை அவள் கணவன் தடை செய்தானும், "சிவப்பு நிறமான சுவர்க் காகிதம் கண்ணுக்குத் தொந்தரவு கொடுக்கிறது" என்று அவன் காரணம் கூறினன். அவன் கூறிய காரணத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தபோது அவன் சிவப்பு நிறத்தை வெறுத்ததற்கு உண்மையான காரணம் தெரிந்தது. சிறு வயதிலே அவன் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த போது ஒரு சமயம் தண்டனை பெறுவதற்காகத் தலைமையாசிரியரின் அறைக்குச் செல்லவேண்டியிருந்தது. அப்போது அந்த அறைக்குச் சிவப்பு நிறச் சுவர்க் காகிதம் ஒட்டியிருந்தது. அந்த நிறம் அவன் சிறு வயதிலே பெற்ற தண்டனையின் வேதனை உணர்ச்சியை மேலோங்கித் தோன்றும்படி செய்ததே அவன் அதை வெறுத்ததற்கு உண்மையான காரணம் என்றும், கண்ணுக்குத் தொந்தரவு கொடுக்கின்றது என்பது அறிவுப் பொருத்தந் தேடல் என்றும் பிராய்டு என்ற உளவியலறிஞர் கூறுகிறார்.

இந்த உணர்ச்சி இதுவரையில் எங்கிருந்தது? அவனுக்கு இதைப்பற்றி நல்ல நினைவுகூட இல்லையே? அவ்வாறிருக்க அந்த உணர்ச்சி எங்கே பதுங்கிக் கிடந்தது? இப்பொழுது அது எப்படி மேலே வந்தது? இவற்றையெல்லாம் தெரிந்துகொள்வதற்கு முதலில் மனத்தின் அமைப்பைப்பற்றி இன்னும் சற்று விரிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

அறிவுப் பொருத்தந் தேடுவதிலே மற்றொரு வகையுமுண்டு.

அண்ணாமலை கணக்குத் தேர்விலே வெற்றிபெற வில்லை. "ஏண்டா இப்படி ஆயிற்று?" என்று கேட்டால், "அது என் குற்றமல்ல. கணக்காசிரியர் சரியாகக் கற்றுக்கொடுக்கவில்லை" என்று அவன் பதில் சொல்லு கிறான். தான் சொல்லுவது சரியான காரணம் என்று கூட அவன் நினைத்துக்கொண்டிருக்கிறான்.

எனக்குத் தெரிந்த இளங் கவிஞர் ஒருவர் தமது பாடல்களைப் பத்திரிகையாசிரியர்கள் ஏற்றுக்கொள் ளாததற்கு அடிக்கடி ஒரு காரணம் சொல்லுவார். "இந்த ஆசிரியர்களுக்கு உண்மையான கவிதையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளத் தெரியவே தெரியாது— எல்லாரும் சுவை உணர்ச்சியே இல்லாதவர்கள்" என்று அவர் சினம்பொங்கப் பேசுவார்.

இவ்வாறு குற்றத்தைப் பிறர்மேல் ஏற்றிச் சொல்லுவதற்கு உளவியலிலே விட்சேபம் என்று பெயர் வழங்குகிறது. விட்சேபத்திற்கும் அறிவுப் பொருத்தம் தேடலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பல சமயங்களிலே இரண்டையும் பிரித்துப் பார்ப்பதுகூட இயலாமற் போகும்.

இந்த இரண்டு தன்மைகளுக்கும் அடிப்படையான காரணம் ஒன்றுதான். தன்னைப்பற்றிப் பிறர் இழி வாகக் கருதக்கூடாது என்ற எண்ணமே இங்கே வேலை செய்கிறது. மனத்தின் மாயச் செயல்களில் இதுவும் ஒன்று. ஆதலால் அந்த மனத்தைப்பற்றி இன்னும் சற்று விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அப் பொழுதுதான் அதன் மாயத்தை நன்கு புரிந்து கொள்ள முடியும். இதை அடுத்த பகுதியில் காண் போம்.

மறை மனம்

இரண்டடுக்கு மாடி வீடு ஒன்று. தரை மட்டத்திலிருக்கிறது ஓரடுக்கு. மற்றொன்று தரை மட்டத்திற்குக் கீழே பூமிக்குள் மறைந்திருக்கிறது. மேலேயுள்ள மாடியில் வசிப்பவர்கள் பொதுவாகப் பண்புள்ள பொறுக்கி எடுத்த கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். கீழ்ப் பகுதியிலே கூட்டம் அதிகம். அதிலுள்ளவர் அனைவரும் காட்டுமிராண்டிகள்; சுயநலக்காரர்கள்; தங்கள் சுகமே பெரிதென மதிப்பவர்கள்; பிறரைப் பற்றிய கவலையே இல்லாதவர்கள்; மானம் மரியாதை என்ற பேச்செல்லாம் அவர்களுக்குப் பொருளற்றது. ஆனால் அவர்கள் வலிமைக்கும் வேகத்திற்கும் பேர் போனவர்கள்; அவர்கள் திடீரென்று மேல்மாடிக்குள் நுழைந்து ஆதிக்கம் செலுத்த முயல்வார்கள்.

இப்படிப்பட்ட ஒரு வீட்டைப் போலத்தான் நமது மனம் இருக்கிறதென்று சிக்மண்ட் பிராய்டு போன்ற உளவியலறிஞர்கள் கருதுகிறார்கள். மனத்தின் ஒரு பெரும் பகுதி மறைந்திருக்கிறதாம். அதில் பதுங்கிக் கொண்டிருக்கிற ஆசைகள், எண்ணங்கள், உணர்ச்சிகள் திடீரென்று மேலே கிளம்பி ஆர்ப்பாட்டம் செய்யுமாம். இவைகளெல்லாம் கட்டுக்கடங்காமல் மேல் வருவதைத் தடுப்பதற்குப் பாராக்காரனைப்போல் ஒரு சக்தி இருக்கிறதாம்.

மேலே சொன்னவாறு மறைந்திருக்கும் மனப் பகுதியைத்தான் மறை மனம், நனவிலி மனம் (Unconscious Mind) என்கிறார்கள். மறை மனம்

என்பது தனியானதொன்று அல்ல என்பதை உணர வேண்டும். மனத்தில் மறைந்து நிற்கும் பகுதிதான் அது. கடலின் விரிந்த மேற்பரப்பை மனம் என்று சொன்னால் அப்பரப்பின்கீழ் ஆழ்ந்து மறைந்து நிற்கும் நீர்ப்பரப்பை மறை மனம் எனலாம். இரண்டும் வேறல்ல; ஒன்றே தான்.

கடலின் ஆழத்திலுள்ள தண்ணீர் சதா மேலே வந்து மேற்பரப்பின் வெப்பத்தை மாற்றுகிறது. அது போலவே மறை மனமும் நமது எண்ணம், செய்கை முதலியவைகளை மாற்ற முயலுகிறது.

மறைமன ஆராய்ச்சியைக் கொண்டு ஒருவனுடைய நடத்தைக்குக் காரணம் கண்டு பிடிக்கிறார்கள். குழந்தைப் பருவத்தில் அடக்கி வைக்கப்பட்ட பல ஆசைகளும் உணர்ச்சிகளும் மறை மனத்தில் பதிந்து பிற்காலத்தில் பல வகையான செய்கைகளுக்குக் காரணமாகின்றன. அவைகளே ஒருவனுடைய தன்மையையும் அமைக்கின்றன. ஆதலினாலேதான் மறைமனத்தைப்பற்றி முதன் முதலில் விரிவான ஆராய்ச்சி செய்த சிக்மண்ட் பிராய்டு என்ற வியன்னா நகரத்து உளவியலறிஞர் குழந்தைப் பருவத்திலேயே ஒருவனுடைய பிற்கால வாழ்க்கை அமைப்பு நிருணயமாகி விடுகிறதென்று சொல்லுகிறார்.

மனப்போக்கு விருப்பம்போல மாறிமாறி அமைவதொன்றல்ல. அது பழைய உணர்ச்சிகளையும் அனுபவங்களையும், இரு கரைகளாக உடைய ஓடை போன்றது. அவற்றிற்கு அடங்கித்தான் அது பொதுவாகச் செல்லுகின்றது. மனத்தின் இரு கூறுகளான வெளிமனமும் மறை மனமும் ஒன்றையொன்று வாழ்க்கை முழுதும்

பாதிக்கின்றன. அதன் பயனாக ஒருவனுடைய நடத்தையும் பண்பும் அமைகின்றன.

மறை மனத்தில் மனித இனத்தின் அனுபவத்தால் வந்த சில உணர்ச்சிகளும் தனி மனிதனுடைய அனுபவத்தால் வந்த சில உணர்ச்சிகளும் இருப்பதாக டாக்டர் யுங் என்ற புகழ் பெற்ற உளவியலறிஞர் கருதுகிறார். முதல் வகையில் இயல்பூக்கங்களும் மனித இனத்துக்கே பொதுவான ஆசைகளும் அடங்கி இருக்கின்றன. விலங்கு முதலிய பிறவிகளுக்கும் பொதுவானவை சிலவும் உண்டு. காதல் உணர்ச்சி இயல்பாக உள்ளது. அதுபோலவே அச்ச உணர்ச்சியும். இவையெல்லாம் பொதுவாக எல்லாருக்கும் ஏற்பட்டவை. இந்த இயல்பூக்கங்களைப் பற்றி வேறு பகுதியில் தனியே ஆராய்வோம்.

இவற்றுடன் பிறப்பிலிருந்து ஏற்பட்ட அனுபவங்களும் உணர்ச்சிகளும் மறை மனத்தில் நின்று ஒவ்வொரு மனிதனையும் தனித்தனிப் பண்புடையனாக அமைக்கின்றது. அவ்வுணர்ச்சிகளைப் பற்றி இன்று நமக்கு நினைவு இராது. என்றாலும் அவையே நம்மை ஆட்டி வைக்கின்றன.

நாம் பல பல எண்ணுகிறோம்; ஆசைப்படுகிறோம். ஆனால் அவற்றையெல்லாம் செயலில் நிறைவேற்றிக் கொள்ள முடிகிறதில்லை. சிலவற்றை நிறைவேற்ற வேண்டிய ஆற்றல் இராது. சிலவற்றை நிறைவேற்றச் சமூகம் இடம் கொடுக்காது. சமூக விதிகள் ஒரு பக்கம்; நீதி நெறிகள் ஒரு பக்கம்; மதம் ஒரு பக்கம்—இவையனைத்தும் சேர்ந்து நமது ஆசைகளையெல்லாம் நிறைவேற்றிக்கொள்ள இடம் தருவதில்லை. அதனால் பல எண்ணங்களையும் ஆசைகளையும் நாம் கைவிடவேண்டி

யிருக்கிறது. சிலவற்றை அடக்கிக்கொள்ள வேண்டி யிருக்கிறது.

இப்படி அடக்கப்பட்ட எண்ணங்களும் ஆசைகளும் மறை மனத்தில் பதிந்து வெவ்வேறு வகைகளில் நமக்கே தெரியாமல் வெளியாகின்றன. விநோதமாக நடந்து கொள்ளுதல், பெயர்களையும் ஊர்களையும் மறந்துவிடுதல், காரணமில்லாமல் அச்சமடைதல் முதலானவைகள் இதனால் ஏற்படுகின்றன.

பிறருடைய குற்றங்களையே எப்பொழுதும் பேசுவது சிலருடைய இயல்பாக இருக்கின்றது. சிலர் மற்றவர்கள் சாதித்த நல்ல செயல்கள் அவ்வளவு பாராட்டிற்கு உரியனவல்ல என்று பேசுவார்கள். சிலர் தாம் மேற்கொண்ட பணிகள் நிறைவேறாதபோது பிறர் மேல் பழி சுமத்துவார்கள். இவைகளெல்லாம் மறை மனக் கோளாறுகள்.

சிலரிடம் ஏதாவது ஒருவகைக் குறைபாடிருக்கலாம். உடல் தோற்றம், அறிவுத் திறமை, ஒழுக்கம் இவை போன்றவற்றில் குறையுள்ளவர்கள் சமூக சேவை போன்ற ஏதாவது ஒரு துறையில் ஈடுபட்டு அதில் உயர்வடைய முயல்வார்கள். காதல் வாழ்க்கை கைகூடாத பலர் இலக்கியம், ஓவியம், இசை, விஞ்ஞானம், மதம் முதலிய துறைகளில் சிறந்தோங்கி யிருக்கிறார்களென்று சிக்மண்ட் பிராய்டு எடுத்துக் காண்பிக்கிறார்.

தானே பெரியவன் என்று நிலைநாட்ட வேண்டும் என ஒவ்வொருவனுக்கும் ஆசையுண்டாகிறது. ஆனால் அந்த ஆசை நிறைவேறாமல் பலருடைய மனத்தில் அடங்கிக் கிடக்கிறது. மறை மனத்தில் அதனால் பல கோளாறுகள் உண்டாகின்றன. பொறாமை, கொடுமை

உணர்வு, தூற்றுதல், வீணுகச் சண்டையிடல், சிடு சிடுப்பு முதலியவை இதன் விளைவாகப் பிறக்கின்றன.

நன்கு படிக்காத மாணவனுக்குத் தேர்வு நாளன்று கொடிய தலைவலி வந்துவிடுகிறது. பொய்த் தலைவலி யல்ல; உண்மையாகவே தலைவலி; அம்மாணவனுக்கே அதன் காரணம் தெரியாது.

மேற்கூறியவையெல்லாம் அந்தப் பொல்லாத மறை மனத்தின் வேலை. இதை நன்கறிந்து கொண்டால் அதனுல் பெரிய நன்மையுண்டாகும். ஆசைகளை அடக்கி நசுக்க முடியாமல் அவற்றை உயர் மடை மாற்றம் செய்து விட்டோமானுல் அப்பொழுது இவை போன்ற விரும்பத் தகாத கோளாறுகள் ஏற்படா ஆசைகள் எல்லாவற்றையும் அடைய முடியாது. சில வற்றை அடைய முயல்வதும் சமூகத்திற்குத் தீங்காக முடியலாம். ஆதலால் அவைகளை வேறு வழியில் திருப் பித் தனக்கும் சமூகத்திற்கும் நன்மையாகச் செய்து கொள்வதே அறிவுடைமையாகும். இவ்வாறு உணர்ச்சி களை வேறு நல்ல வழியில் திருப்புவதற்குத்தான் உயர் மடை மாற்றம் செய்தல் என்று பெயர்.

இதற்கு மறைமனத்தைப் பற்றிய ஆராய்ச்சியும் அறிவும் பெரிதும் உதவி புரிகின்றன.

மறைமனத்தைப் பற்றி மாறுபட்ட பல கருத்து களிருக்கின்றன. அவைகளை அடுத்த பகுதியில் கவனிப்போம்.

மாறுபட்ட கருத்துகள்

உளவியல் என்பது ஒரு தனிப்பட்ட விஞ்ஞானத் துறையாக அண்மையில்தான் பிரிந்து வளர்ந்து வருகிறது. மனத்தின் தன்மைகளைப் பற்றியும் அதன் அமைப்பைப் பற்றியும் ஆராய்ச்சி செய்தவர் பலர். பொதுவாக அவர்கள் எல்லாரும் மனத்தை ஒரே இயல்புள்ள ஒரு முழுப் பொருளாகவே கருதி வந்தார்கள். முதன் முதலில் மனத்தில் வெளி மனம் (நனவு மனம்) மறை மனம் (நனவிலி மனம்) என இரு பகுதிகள் இருப்பதாக சிக்மண்ட் பிராய்டு என்பவரே தமது ஆராய்ச்சியின் பயனாகக் கண்டு கூறினார். அவ்விரண்டும் வேறு வேறாகப் பிரிக்கப்பட்ட இரண்டு பகுதிகள் அல்ல எனினும் அவற்றின் தன்மைகள் வேறுபட்டவை என்பது அவர் கருத்து.

மறைமனத்தில் பதிந்துள்ள எண்ணங்களைப் பற்றியும், அனுபவங்களைப் பற்றியும் அறிந்து, அவைகளின் மூலம் சில நோய்களை ஜோசர் ப்ரூயர் என்ற வியன்னா நகரத்து மருத்துவர் குணப்படுத்தினார். அவர் அறிந்தவற்றை நூல் வடிவமாகத் தொகுத்து வெளியிடும்படி பிராய்டு தூண்டினார். அவ்வாறு அவர் வெளியிட்ட போதிலும் பின்னால் அவர் தொடர்ந்து மறை மனத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யவில்லை. சிக்மண்ட் பிராய்டுதான் தனியாக அதை நடத்தி வந்தார். தொடக்கத்தில் அவருடைய எண்ணங்களுக்கு வன்மையான எதிர்ப்பிருந்தது, ஒருவரும் அவருடன் சேர்ந்து ஒத்துழைக்க முன்வரவில்லை. ஆனால் 1902-ஆம் ஆண்

டிற்குப் பிறகு சிலர் அவரோடு சேர்ந்து ஆராய்ச்சிகள் நடத்த முன் வந்தார்கள்.

மறைமனத்தைப்பற்றி விரிவாக ஆராயத் தொடங்கவே பல புதிய உண்மைகள் வெளியாயின. மறைமன ஆராய்ச்சியே தனிப் பகுதியாகப் பிரியத் தொடங்கியது. பிராய்டு அதற்கு உளப் பகுப்பியல் (Psychoanalysis) எனப் பெயரிட்டார்.

மறை மனத்தைப் பற்றிய உண்மை தெரிந்தது முதல் உளவியலுக்கு ஒரு தனி உயர்வு பிறந்திருக்கிறது. மனிதனுடைய நடத்தைக்கு முக்கிய காரணமாக இருப்பது இம் மறை மனமே என்பது சிலருடைய கருத்து. மனம் ஒரு பனிக்கட்டியாலான குன்று போன்றதென்று அவர்கள் கூறுகிறார்கள். பனிக்கட்டிக் குன்று கடலிலே மிதக்கும்போது அதன் ஒரு சிறு பகுதி மட்டுமே வெளியில் தோன்றும். மற்றப் பகுதியெல்லாம் நீர் மட்டத்திற்கு உள்ளே மறைந்திருக்கும். அது போலவே மனத்தின் ஒரு பகுதிதான் வெளிப்படையாகத் தோன்றி வெளி மனமாக இருக்கிறதென்றும், மற்றப்பகுதி மறைந்து நின்று மறைமனமாக இருக்கிறதென்றும் அவர்கள் விளக்கஞ் செய்கிறார்கள். இப்படி மனத்தின் பெரும் பகுதி மறைந்திருந்தாலும் அப் பகுதிதான் ஆதிக்கம் செலுத்துகிறதாம்.

சிக்மண்ட் பிராய்டும் அவரைப் பின்பற்றுவோரும் கூறுவதாவது:—வெளி மனத்தால் நினைப்பவையெல்லாம் மறைமனத்தால் பாதிக்கப்படுகின்றன; ஆனால் அவை எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதை அறிந்துகொள்வது மிக அரிது.

பிராய்டின் கருத்துகளை எல்லா உளவியலறிஞர்களும் ஏற்றுக்கொள்வதில்லை. உளப் பகுப்பியலார்

களிலும் சிலர் அவற்றை முழுமையாக ஒத்துக்கொள்வ தில்லை. ஆல்பிரடு ஆட்லர், டாக்டர் யுங் என்பவர்கள் அவர்களில் முக்கியமானவர்கள்.

பொதுவாக, சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத உணர்ச்சிகளும், காம இச்சைகளுமே மறைமனத்தில் அழுந்திக் கிடப்பதாக பிராய்டு கூறுகிறார். அவ் வுணர்ச்சிகள் மேலெழுந்து ஆதிக்கம் செலுத்த முயல் கின்றனவென்றும் மனிதன் அவற்றை அடக்க முயல் வதால் மனத்தில் ஒருபோராட்டம் நிகழ்கின்றதென் றும் அதன் விளைவின்படி அவனுடைய தன்மையும் நடத்தையும் அமைகின்றனவென்றும் அவர் விளக்கம் செய்கிறார். ஆட்லர் கூறுவது வேறு. அவர் கூறுவ தாவது:-ஒவ்வொரு மனிதனுக்கும் தான் ஏதாவதொரு துறையில் தலைமைப் பதவி வகிக்கவேண்டுமென்ற ஆர் வம் இருக்கின்றது. அந்த ஆர்வமே அவனுடைய குறை பாடுகளை நீக்கிக்கொள்வதற்கு வேண்டிய ஆற்றலைக் கொடுக்கின்றது. அந்த ஆற்றலின் விளைவாக அவ னுடைய தன்மையும் நடத்தையும் அமைகின்றன. டெமாஸ்தனிஸ் முதலில் திக்குவாயாக இருந்தார். ஆனால் பெரிய பேச்சாளராக வேண்டும் என்று உறுதி யோடு முனைந்து அதில் வெற்றியுமடைந்தார் என்பது யாவரும் அறிந்த உண்மை. இவருடைய வரலாறு ஆட்லரின் கருத்தை மெய்ப்பிக்கத் தக்க சான்றாக இருக்கிறது. மனிதனுக்கு ஓரளவு அதிகாரம் செலுத் தக்கூடிய வாய்ப்பில்லாவிட்டால் அவன் தாழ்மை உணர்ச்சியால் பீடிக்கப்படுகிறான் என்பது ஆட்லரின் கருத்து.

மனிதனுக்குள்ளே விவரிக்க முடியாத ஓர் உயிர் வேகம் இருக்கிறது. அதிலிருந்துதான் பல இயல்புகள்

பிறக்கின்றன என்பது டாக்டர் யுங்கின் எண்ணம். எல்லாத் துறைகளிலும் மனம் விரிவடையாமல் ஏதாவது ஒரு துறையில் மட்டும் அது வளர்வதாலேயே மறை மனக் கோளாறுகள் ஏற்படுவதாக அவர் கருது கிறார். மக்களை இரு வகையாகப் பிரிக்கலாம். உள்ளக் கிளர்ச்சி மிகுந்தவர்கள் ஒரு வகை, சிந்தனை ஆற்றல் மிகுந்தவர்கள் மற்றொரு வகை. உலகத்திலே ஒரு வகையான செயல் புரிய உள்ளக் கிளர்ச்சி மிகுதியாக வேண்டியிருக்கும்; மற்றொரு வகையான செயல் புரியச் சிந்தனை மிகுதியாக வேண்டியிருக்கும். ஆதலால் அவற்றிற்கு ஏற்றவாறு தன்மை அமைந்த மனிதர்கள் அச்செயல்களைச் செய்யவேண்டும். ஆனால் பல சமயங் களில் மனிதன் தன் இயல்புக்கு ஒவ்வாத பணியைச் செய்யவேண்டி நேரிடுகிறது. அப்பொழுதுதான் அவன் மனத்தில் போராட்டம் நேர்ந்து மறைமனக் கோளாறுகள் உண்டாகின்றன. மேலும் மறை மனம் தனிப்பட்ட மனிதனுடைய செய்கைகளால் மட்டும் அமைவதில்லை என்று யுங் கருதுகிறார். வழிவழியாக வந்த பாரம்பரியத்தாலும் மறைமனக் கோளாறுகள் உண்டாகின்றன என்று அவர் சொல்லுகிறார்.

உளப் பகுப்பியலார்களுக்குள்ளே சிறுசிறு கருத்து களில் மாறுபாடுடைய வேறு சிலரும் இருக்கிறார்கள். இப்படிக் கருத்து வேறுபாடுகள் இருப்பினும் உளவியல் ஆராய்ச்சியிலே உளப் பகுப்பியல் ஒரு முக்கியமான முன்னேற்றத்திற்குக் காரணமாக இருக்கிறதென்பதை யாரும் மறுக்கமுடியாது, உளப் பகுப்பியலின் அடிப் படையாகவுள்ள கொள்கைகள் உண்மையானவை யென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

மூன்று பிரிவுகள்

மனம் என்பது ஒரு பொருளல்ல என்று கண்டோம். அது கை கால் போன்ற ஒரு உறுப்பு அல்ல என்றாலும் மனிதனிடத்திலே உள்ள மிகச் சிறப்பு வாய்ந்த ஒரு முக்கிய அம்சம் என்றும் கண்டோம். மனம் என்கிற மாயம் மனிதனுக்குத் தனிச் சிறப்பு அளிக்கிறதென்றும், அதை நனவு மனம் (வெளி மனம்) நனவிலி மனம் (மறை மனம்) என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாமென்றும் கண்டோம்.

மனத்திலே உண்மையில் இவ்விதமான பிரிவுகள் இல்லை. அது தொழிற்படும் வகையை ஒட்டி இப் பிரிவினைகள் கூறப்படுகின்றன. ஆராய்ச்சிக்கு எளிதாக இருக்கும் பொருட்டு இம்மனத்தை இன்னும் சற்று விரிவாக மூன்று பிரிவுகளாகச் செய்யலாம். நனவு மனம், நனவிலி மனம் என்ற இரு பிரிவுகளைப்பற்றி முன்பே அறிவோம். அந்த மூன்றாவது பிரிவு என்ன என்பதை இனிக் கவனிப்போம்.

நமக்கு எப்பொழுதோ ஒருமுறை அறிமுகமானவர் ஒருவர் பல நாட்களுக்குப் பிறகு வருகிறார். அவருடைய பெயர் நினைவிற்கு வருவதில்லை. கொஞ்ச நேரம் சிந்தித்துப் பார்க்கிறோம். பல பெயர்களைச் சொல்லிக்கூடப் பார்க்கிறோம். "மனத்திலே இருக்கிறது; சொல்ல வரமாட்டேனென்கிறது" என்றும் சொல்லத் தோன்றுகிறது. பிறகு திடீரென்று பெயர் நினைவிற்கு வந்துவிடுகிறது. "யார், மாணிக்கமா?

வா, வா, பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது" என்று வரவேற்கத் தொடங்குகிறோம்.

நனவு மனத்திலே அப்பெயர் நின்றிருந்தால் நினைவிற்குக் கொண்டுவர அவ்வளவு நேரமாகாது. ஆனால் அது நனவிலி மனத்திற்குள் அழுந்திவிட்டதாகவும் கூற முடியாது. நனவிலி மனத்தில் அழுந்தியதை அவ்வளவு எளிதில் வெளிக் கொண்டுவர இயலாது. ஆதலால் அது இடையிலே எங்கேயோ இருந்திருக்க வேண்டும்.

நேற்று உண்ட காய்கறிகளின் பெயர்கள் நமது வெளி மனத்தில் பொதுவாக இருப்பதில்லை. நாம் அவற்றை இப்பொழுது நினைத்துக்கொண்டா இருக்கிறோம்? தனிப்பட்ட சிறப்புக் கொண்டவையாக இருந்தால் மட்டும் ஒருவேளை இப்பொழுது அவற்றை நினைத்துக்கொண்டிருப்போம். ஆனால் சாதாரணமாக அந்த நினைவு நனவு மனத்தில் இருப்பதில்லை. ஆனால் கொஞ்சம் நினைத்துப் பார்த்தால் நாம் உண்ட காய்கறிகளின் பெயர்கள் நினைவுக்கு வந்துவிடும்.

இப்படிக் கொஞ்சம் நினைத்ததும் நினைவுக்கு வருபவை எல்லாம் நனவடி மனம் அல்லது இடை மனம் (Subconscious mind) என்னும் பகுதியில் இருப்பதாகக் கூறுவார்கள். நனவு மனத்தை ஒட்டியதுபோலவே உள்ள அடிப்பகுதி இது. அதற்கும் கீழே சூழ்ந்திருப்பது மறை மனம். ஆகவே ஆராய்ச்சியின் பொருட்டு மனமானது நனவு மனம், நனவடி மனம், நனவிலி மனம் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றை மனத்தின் மூன்று நிலைகள் என்றும் கூறலாம். மனம் என்று பொதுவாகக் கூறும்போது நனவு மனத்தையே நாம் குறிப்பிடுகிறோம்.

நினைவும் கற்பனையும்

வாழ்க்கையிலே எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன; எத்தனை எத்தனையோ அனுபவங்கள், புலன் உணர்ச்சிகள் உண்டாகின்றன. அவைகளெல்லாம் மனத்திலே எங்கேயோ பதுங்கிக் கிடக்கின்றன. சிலவற்றை நினைத்த உடனேயே அவை நினைவுக்கு வந்துவிடுகின்றன. சில அவ்வளவு விரைவிலே நினைவுக்கு வருவதில்லை. சில மறந்தே போகின்றன; எவ்வளவு நேரம் முயன்று நினைத்துப் பார்த்தாலும் நினைவுக்கு வருவதேயில்லை.

சென்ற வாரம் செவ்வாய்க்கிழமையன்று உண்ட பொரியல் அல்லது சாம்பார் நினைவில் இருக்கிறதா? அது மறந்தே போகிறது. அப்படி மறந்து போவதும் நல்லதுதான். தேவையற்ற பலவற்றை நினைவில் வைத்திருந்தால் மனத்திற்கு அவை வீண் சுமை தானே?

ஆனால் அந்தச் செவ்வாய்க்கிழமையன்று உண்ட பொரியல் வயிற்றுக் கோளாறு ஏற்பட்டுத் தொல்லை கொடுத்திருந்தால் அந்தப் பொரியலைப்பற்றிய நினைவு அவ்வளவு எளிதாக மறந்துபோவதில்லை. "அப்பா, அந்த பொரியலைச் சாப்பிட்டு என் வயிறே கெட்டுப் போச்சு" என்று பல நாள் சொல்லிக்கொண்டே இருக்கிறோம்.

நமக்குத் துன்பத்தையோ, இன்பத்தையோ அளித்தவை நினைவில் இருக்கின்றன. அவற்றிலுங்

கூடத் துன்பந் தந்தவை கொஞ்சம் விரைவிலே மறந்து போகின்றன. இன்ப நினைவுகள் நன்கு மனத்திலே பதிந்து நிற்கின்றன. துன்பந் தந்தவை நினைவிருந் தாலும் அவை இப்பொழுது கூர்மை மழுங்கி யிருக் கின்றன; அவற்றின் வேகம் வரவரக் குறைந்து போகின்றது.

இளமைப் பருவத்திலே தான் படித்த பள்ளிக் கூடம், கல்லூரி ஆகியவற்றை ஒருவன் பெருமை யோடும் மகிழ்ச்சியோடும் சென்று பார்த்து வரு கின்றான். அங்குப் பெற்ற இன்ப அனுபவங்களெல்லாம் அப்பொழுது நினைவுக்கு வருகின்றன. அங்குப் பட்ட துன்பங்களெல்லாம் மறந்துபோய்விடுகின்றன. நினை விற்கு வந்தாலும், "அப்பா, அந்தக் கணக்கு வாத்தி யாரா! ரொம்பப் பொல்லாதவர். சரியான அடி கொடுப்பார். இருந்தாலும் நல்லவர். அவர் அப்படி யெல்லாம் சொல்லிக் கொடுக்காமலிருந்தால் எனக்குக் கணக்கே வந்திருக்காது" என்றுதான் பொதுவாகச் சொல்லத் தோன்றும்.

சிலபேருக்கு நினைவாற்றல் மிக அதிகமாக இருக் கும். ஒரு தடவை கேட்டதை அப்படியே திருப்பிக் கூறக்கூடியவர்கள் உண்டு. ஏகசந்தக் கிராகிகள் என்போர் ஒருமுறை சொல்வதை அப்படியே திருப்பிக் கூறிவிடுவார்களாம். மாம்பழக் கவிச்சிங்க நாவல ருக்கு வைசூரி கண்டு இளமையிலே கண் குருடாகி விட்டது; ஆனால் அவருடைய நினைவு ஆற்றல் மிகவும் வியக்கத்தக்கது. ஒரு நூல் முழுவதையும் யாராவது ஒருமுறை படித்துக் காட்டினால் உடனே அவர் அதைத் திருப்பிக் கூறிவிடுவாராம்.

சிலருக்கு நினைவு ஆற்றல் மிகக் குறைவாக இருக்கும். வெகு விரைவிலே மறந்துவிடுவார்கள்.

வயதாக ஆக நினைவாற்றல் குறைவதும் உண்டு. ஆனால் நினைவாற்றலே இல்லாதவர்கள் கிடையாது. யாருக்காவது அவருடைய தாயார் மறந்து போகிறதா? அந்த அளவுக்காவது நினைவாற்றல் இருக்கும்.

மனம் மிக மாயமானது என்று சொன்னேனல்லவா? அது சில வேளைகளிலே அதற்குப் பிடிக்காதவற்றை மறந்துவிடும். எப்படியோ அவை நினைவில் வராமல் செய்துவிடும். எனக்கு ஒரு நண்பன் இருக்கிறான். அவனுக்கு மற்றவர் கொடுத்திருக்கிற கடனைப் பற்றி உண்மையாகவே நினைவு வராது; ஆனால் எப்பொழுதாவது அவன் ஒரு எட்டணாச் சில்லறை கொடுத்துவிட்டால் அதை மனத்தில் வைத்துக் கொண்டு கேட்டுக்கொண்டே இருப்பான்!

வாழ்க்கையின் முற்போக்குக்கு நினைவாற்றல் மிகத் தேவை. நாம் அடைந்த அனுபவங்கள் தனித் தனியாக நினைவில் இல்லாமற் போனாலும் அவற்றின் விளைவாக நாம் எதிர்கால வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள வேண்டுமல்லவா? நெருப்பைத் தொட்டால் சுடும் என்று குழந்தைக்கு முதலில் தெரியாது. ஒரு தடவை அல்லது இரண்டு தடவை நெருப்பு அனுபவம் ஏற்பட்ட பிறகாவது மறுபடியும் நெருப்பைத் தொடாமல் இருக்க வேண்டுமல்லவா?

நினைவிலே இரண்டு வகையுண்டு. சொந்த அனுபவத்தைப்பற்றிய நினைவு ஒருவகை. பிறருடைய அனுபவத்தைப் பற்றித் தெரிந்துகொண்டு அதை நினைவில் வைத்திருப்பது ஒருவகை. சிவாஜியினுடைய வீரச் செயல்களைப் பற்றிக் கேட்டிருக்கிறோம்; படித்திருக்கிறோம். அவை நமது சொந்த அனுபவமல்ல. இருந்

தாலும் அவையும் நினைவில் இருக்கின்றனவல்லவா? இந்த இருவகை நினைவும் தேவையானவையே.

வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு ஊக்கமும், உற்சாகமும், ஊட்டமும் அளிப்பவற்றை நினைவில் வைத்திருப்பது எவ்வளவு நன்மை பயக்குமோ அது போலவே அவற்றிற்கு மாறுனவற்றையும், தளர்ச்சியும் தோல்வி மனப்பான்மையும் தருவனவற்றையும் மறந்துவிடுவதும் நன்மை பயக்கும்.

சொந்த அனுபவங்களையும் பிறர் அனுபவங்களையும் நினைவில் கொண்டு அவற்றில் பயனடையக்கூடிய திறமை பெரியதோரளவில் மனிதனுக்குத்தான் உண்டு. விலங்குகள் முதலான மற்ற உயிர்கள் சொந்த அனுபவங்களால் ஓரளவிற்கே பயனடையும்; வேறு ஓர் உயிரின் அனுபவங்களால் அவை பயனடைவதே பெரும்பாலும் இல்லை.

நினைவிற்கும் கற்பனைக்கும் தொடர்பு உண்டு. ஆனல் இரண்டும் வேறு வேறு, நேற்றுப் பூஞ்சோலையிலே கண்ட அழகிய நங்கையை மனக்கண் முன்பு கொண்டு வரலாம். அவளுடைய தோற்றம் தெளிவாக மனக்கண் முன்பு தோன்றுவதற்கு நினைவாற்றல் உதவுகிறது. நாமே ஓர் ஒப்பற்ற அழகுவாய்ந்த நங்கையைக் கற்பனை செய்யலாம். இந்தக் கற்பனை நங்கையை அழகுபடுத்த நமது நினைவாற்றல் உதவுகிறது. பல இடங்களிலே பல வேறு நங்கையரிடத்திலே கண்டு போற்றிய அழகுகளையெல்லாம் நமது நினைவாற்றல் திரட்டி இந்தக் கற்பனை நங்கையை உருவாக்க உதவி செய்கிறது. ஒரு நங்கையின் கண்கள் மிக அழகாக இருக்கும். மற்ருெருத்தியின் இதழ்கள் கோவைப்பழம் போல இருக்கும். நினைவிலிருந்த

இவற்றையெல்லாம் சேர்த்துத் திரட்டி அந்தக் கற்பனை உருவாகிறது.

சில சமயங்களிலே எது கற்பனை, எது நினைவு என்று தெரியாமற் போவதுண்டு. ஒருவன் புதிதாக ஒரு கதை கற்பனை செய்வதாக எண்ணிக்கொண்டிருப்பான். ஆனால் உண்மையில் அவன் எப்பொழுதோ படித்த கதையாகவே அது இருக்கும். அதுபோல நினைவில் சொல்லுவதாக ஒன்றை ஒருவன் சொல்லுவான். ஆனால் அது வெறுங் கற்பனையாகவே இருக்கும்.

நினைவிலே இப்படிப் பல தவறுகள் ஏற்படுவதுண்டு. காலம் செல்லச் செல்ல ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய நுணுக்கமான விவரங்கள் மறைந்து போகின்றன. அந்த இடத்தைக் கற்பனை நிறைவு செய்துவிடுகிறது. ஒரு நிகழ்ச்சியைப் பற்றிப் பிறருக்கு எடுத்துச் சொல்லும்போது சாதாரணமாகத் தம்மையறியாமலேயே சிலவற்றை மிகப்படுத்தியும், சிலவற்றை மேற்போக்காகவும் சொல்லுவதுண்டு. சொல்லுவது எல்லாருடைய கவனத்தையும் கவரவேண்டும் என்ற மறைமுகமான ஆசையே இதற்குக் காரணம். மேலும் நமக்குப் பிடித்தமானவற்றையே மனம் நினைவில் வைத்துக்கொள்ள விரும்புகிறது. அதனாலும் ஒரு நிகழ்ச்சியைப்பற்றி நினைவுபடுத்திக் கூறுவதிலும் தவறு ஏற்படுகிறது.

நினைவாற்றல் மனத்தின் ஒரு சிறப்பு. அது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உதவியாக இருப்பதால் அதன் தன்மையை அறிந்துகொள்வது நல்லது.

கனவு

"நான் கனவு கண்டால் கண்டது கண்டபடியே நடக்கும்" என்று சிலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். "கனவில் காண்பதற்கு நேர்மாறாகத்தான் வாழ்க்கையில் நடக்கும்; பொருளை இழப்பதுபோலக் கனவு கண்டால் பொருள் வருவாய் கிடைக்கும்" என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள்.

"கனவிற்கு ஒரு பொருளும் கிடையாது; அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதே இல்லை" என்று கூறுபவர்களும் உண்டு.

"கவலையே இல்லாமல் ஆழ்ந்து தூங்குகிறவன் கனவு காணமாட்டான்; கவலை நிறைந்தவன்தான் கனவு காண்கிறான்" என்றும் பலர் பேசக் கேட்டிருக்கிறோம்.

உறங்கும்போது கனவு காண்பதென்பது குழந்தைகள் முதற்கொண்டு முதியவர்கள் வரை எல்லாருக்கும் பல சமயங்களில் ஏற்படுகின்ற ஒரு நிகழ்ச்சி. அக் கனவிற்கு ஏதாவது காரணம் உண்டா, பொருளுண்டா அதனால் ஏதாவது பயன் உண்டா என்பனவற்றை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

"ஒரு மனிதனுடைய தன்மையை அறிந்துகொள்வதற்கு அவன் காணும் கனவுகள் பெரிதும் துணைபுரிகின்றன" என்று மறைமனத்தைப் பற்றி விரிவாக ஆராய்ந்த பிராய்டு, ஆட்லர், யுங் என்ற மூவரும் அறுதியிட்டுக் கூறுகிறார்கள். மன நிலையை அறிந்துகொள்

வதற்குக் கனவு ஒரு வழியென்பதை மற்ற உளவியல் அறிஞர்களும் ஒத்துக்கொள்ளுகிருர்கள்.

மனக் கோளாறுகளைத் தெரிந்துகொள்வதன் மூலம் பல நோய்களைக் குணப்படுத்த முடியும் என்று பிராய்டு முதலில் கண்டார். அதன் பயனுகவே மனத்தில் மறை மனம் என்ற ஒரு பகுதியிருக்கிறதென்றும் அவர் உணர்ந்தார். மன நோய்களைப் போக்குவதற்கு மறை மனத்தில் அழுந்திக் கிடக்கும் எண்ணங்களையும் ஆசைகளையும் அறிய வேண்டும். அதற்குப் பிராய்டு முதலில் மனவசிய (Hypnotism) முறையைக் கையாண்டார். அதில் பல குறைபாடுகள் இருப்பதை அனுபவத்தில் தெரிந்து அவர் வேறு முறையொன்றைப் பின்னல் கையாளலானுர். தம்மிடம் சிகிச்சைக்கு வருபவர்களை ஏதாவது ஒரு குறிப்பிட்ட நிலைமையில் அவர்களுக்குத் தோன்றும் எண்ணங்களையெல்லாம் தோன்றியவாறே ஒளிவு மறைவின்றிச் சொல்லும்படி கேட்டார். அவர்கள் காணும் கனவுகளைப் பற்றியும் வெளிப் படையாகச் சொல்லச் சொன்ஞர். மனத்தில் எழுகின்ற இழிந்த எண்ணங்களை எல்லாரும் வெளிப் படையாகக் கூறமாட்டார்கள். மனவசியத்தாலும் அவற்றை அறிந்து கொள்ளுவது அவ்வளவு எளிதல்ல. ஆனுல் கனவுகளின் மூலம் அவற்றை மறைமுகமாகக் கண்டு கொள்ளலாம் என்று பிராய்டுக்குப் புலப் பட்டது. அவர்தாம் முதன் முதலில் கனவுகளைப் பாகுபடுத்தி அவற்றைக் கொண்டு மனநிலையைக் காண முயன்றவர்.

தூங்கி எழுந்தவுடன் பல கனவுகள் மறந்துபோய் விடுகின்றன. சிலவற்றை நாம் நினைவுக்குக் கொண்டு வர முடியுமானுலும் அவை தொடர்பில்லாத விந்தைச் செயல்கள் நிறைந்திருக்கின்றன. அதனுல்தான் கன

வுக்குப் பொருளில்லையெனப் பலர் கருதுகிறார்கள். கனவில் நிகழ்வனவற்றை நிகழ்ந்தவாறே உண்மையென எடுத்துக்கொள்ளக்கூடாது. பல கனவு நிகழ்ச்சிகளுக்குக் குறிப்பிட்ட வேறு பொருள்கள் உண்டு. அவற்றை அறிந்துகொண்டால்தான் கனவுகளைக் கொண்டு ஒருவனுடைய மன நிலையை நன்கு அறிந்து கொள்ள முடியும்.

கனவுக்குப் பொருளிருப்பதாக நினைப்பது குருட்டு நம்பிக்கை என்று சிலர் கூறலாம். அறிவு வளர்ச்சி பெறாத மக்கள்தான் கனவை நம்புவார்களென்றும் அவர்கள் பேசலாம். ஆனால் பாமரர்கள் கனவை நோக்கும் விதம் வேறு; உளவியலறிஞன் அதை நோக்கும் விதம் வேறு. ''விஞ்ஞானப் பார்வையோடு மற்றப் பொருள்களை ஆராய்வதைப் போலவே கனவையும் ஆராயலாம். கனவு என்பது ஒரு அனுபவ உண்மை. இரசாயனத்திலும், உடலியலிலும் உண்மைகளை ஆராய்வதுபோல அதையும் சரிவர ஆராயலாம்'' என்று ஜீ. எச். கிரீன் எழுதுகிறார். ஆதலால் கனவைப்பற்றி உளவியல் முறையில் சோதனை செய்வது அறிவுக்குப் பொருந்தியதொன்றே. அவ்வாறு சோதனை செய்து பிராய்டும் அவரைப் பின்பற்றுவோரும் பல மன நோய்களைப் போக்கியிருக்கிறார்கள்.

மனத்தில் உள்ள எண்ணங்களையெல்லாம் மறைக்காமல் கூறுவதைச் சாதாரணமாக மக்கள் உடைத்துச் சொல்லுவதென்று கூறுவார்கள். நான் உடைத்துப் பேசுகிறேனென்றால் எதையும் ஒளிக்காமல் சொல்லுவதாகப் பொருள். ஏதாவது ஒரு வேளையிலே எழுகின்ற எண்ணங்களையெல்லாம் உடைத்துக் கூறினால் அவற்றின் மூலம் கனவுகளின் உண்மைப் பொருளையும் கனவு காண்பவனின் மன நிலைமையையும் அறிந்துகொள்ள

முடியும். எல்லாராலும் அவ்வாறு அறிந்துகொள்ள முடியும் என்று நான் கூறவில்லை. அதற்கு உளவியல் அறிவு நிறைய வேண்டும்; அனுபவமும் வேண்டும். எந்த நிலைமையை உண்டாக்கினால், அதன் விளைவாக எழும் எண்ணங்களைக் கொண்டு மனநிலையைக் காண முடியும் என்பது அனுபவம் வாய்ந்த ஒருவனுக்குத் தெரியும். வெளிப்படையாக எதையும் ஒளிக்காமல் பேசுவதும் கனவும் ஒன்றுக்கொன்று உதவியாக நின்று ஒருவனுடைய மனநிலையை வெளிப்படுத்துகின்றன. சொல்லுவதில் சிலவற்றை மறைத்திருந்தாலும் கனவு அதைக் குறிப்பாகக் காட்டிவிடும்.

சிக்கலில்லாத எளிய பல கனவுகள் இருக்கின்றன. அவற்றின் குறிப்பைக் கண்டுகொள்ள அனைவராலும் பெரும்பாலும் முடியும்.

நனவில் நிறைவேறாத பல ஆசைகள் கனவிலே நிறைவேறுவதுண்டு. காதல் வயப்பட்ட இளைஞன் தன் காதலியோடு கூடியிருப்பதாகக் கனவு காண்கிறான். வறுமையால் வாடியிருப்பவன் கனவிலே குபேரனைப்போல வாழ்கிறான். அழகான பொம்மை வேண்டுமென விரும்பிய குழந்தை அதைப் பெற்று மகிழ்வதாகக் கனவு காண்கிறது.

வீட்டிலே குற்றேவல் புரிவதற்காக ஒன்பது வயதுப் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் ஒரு நாள் இரவில் எழுந்து உட்கார்ந்துகொண்டு, "என் அக்காள் வந்து வெளியே நிற்கிறாள்; கதவைத் திறந்துவிடுங்கள்" என்று கூறினாள். ஆனால் உண்மையில் யாரும் வரவில்லை. அவள் கண்டது கனவு. தன் அக்காளைப் பிரிந்து வந்து பல நாட்களாகி விட்டபடியால் அவளைப்

பார்க்க வேண்டுமென்ற ஆசையே இவ்வாறு கனவில் நிறைவேறியிருக்கிறது.

பொதுவாகக் கனவு காணும்போது அதில் நடக்கும் நிகழ்ச்சிகளெல்லாம் உண்மையாக வாழ்வில் நடப்பது போலவே உணர்கின்றோம். கனவு காண்பவன் அக் கனவில் தான் அனுபவிக்கும் இன்ப துன்பங்களுக்கேற்றவாறு வாய்விட்டுச் சிரிப்பதும் அழுவதுமுண்டு. குழந்தைகளிடம் இதை அதிகமாகக் காணலாம்.

கண்ணம்மாளுக்கு வயது நான்கு. அவள் ஓரிரவு தூங்கிக் கொண்டிருக்கும்பொழுதே விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டாள். "ஏன் இப்படி அழுகிறாய்?" என்று கேட்டபோது, அவள் எழுந்து நின்று "அக்கா என் புதுப் பொம்மையை எடுத்துக்கொண்டாள்" என்று முறையிட்டாள். உண்மையில் யாரும் அவளுடைய பொம்மையை எடுத்துக்கொள்ளவில்லை. எல்லாரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். தன் பொம்மையை அக்காள் எடுப்பது போல அவள் கனவு கண்டிருக்கிறாள். முதல் நாளில் நடந்த செயலே அவள் கனவில் பிரதிபலித்திருக்கிறது.

எல்லாக் கனவுகளும் ஆசை நிறைவேற்றத்திற்காக உண்டாவதில்லை. இப்படிக் கூறுவதில்தான் பிராய்டுக்கும் மற்றவர்களுக்கும் கனவைப் பொறுத்தவரையில் கருத்து வேறுபாடு உண்டாகிறது. எல்லாக் கனவுகளும் ஆசை நிறைவேற்றங்களே என்று பிராய்டு சாதிக்கிறார். மற்றவர்கள் அவ்வாறு கருதுவதில்லை. மேலே கூறிய குழந்தையின் கனவு ஆசை நிறைவேற்றமல்ல. அதன் உள்ளத்திலிருந்த அச்சத்தின் தோற்றமே அது.

முதல் நாள் நடந்த நிகழ்ச்சிகள் பல தடவைகளில் கனவில் தோன்றுகின்றன. ஒரு நாள் நான் ஒரு சிறந்த நூலைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அதைக் கேட்டுக்கொண்டிருந்த பதினெட்டு வயது இளைஞன் ஒருவனுக்குப் புத்தகத்திலே மிகுந்த பற்றுண்டு. அவன் அந் நூலை ஒரு கடையில் காண்பதுபோலவும் அதை வாங்குவது போலவும் அன்றிரவே கனவு கண்டதாக என்னிடம் மறுநாள் கூறினான். "பெரும்பான்மையான கனவுகள் அண்மையில் உண்டான மனப் போராட்டங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன" என்று ரிவர்ஸ் (W. H. R. Revers) என்பார் கூறுகிறார். பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளை யொட்டிவரும் சில கனவுகளும் உண்டு. எனக்கு எட்டு வயதிருக்கும். என்னைவிட ஒரு வயது இளையவனான என் தோழன் ஒருவனுடன் வீதியிலே விளையாடிக் கொண்டிருந்தேன். இரண்டு மாடுகள் ஒன்றையொன்று எதிர்த்துச் சீறிக்கொண்டு ஓடி வந்தன. நாங்கள் விளையாட்டில் ஈடுபட்டிருந்ததால் அவற்றைக் கவனிக்கவில்லை. ஒரு மாடு மற்றொன்றின் மேல் திடீரென்று பாயவே அது சமாளிக்க முடியாமல் பின்னடைந்தது. இரு மாடுகளும் வந்த வேகத்தில் என் தோழனை அவை காலால் மிதித்துக்கொண்டு சென்றுவிட்டன. அவன் படுகாயமுற்று நினைவிழந்து கிடந்தான். அருகிலே யாருமில்லை. நான் அஞ்சி நடுங்கி அசைவற்று நின்றுவிட்டேன். அது முதற் கொண்டு அடிக்கடி மாடு கொம்புகளால் குத்த வருவது போலவும் தப்பித்துக்கொண்டு ஓடக் கால் வராது நான் தடுமாறுவது போலவும் கனவு காண்கிறேன். இன்றைக்கும் மாட்டைக் கண்டால் எனக்குப் பெரிதும் அச்சம். இதுபோன்று திரும்பித் திரும்பி வரும் கனவு

களுக்குக்கூட அவற்றிற்குக் காரணமாக ஏதாவது நிகழ்ச்சிகள் அண்மையில் நடந்திருக்கக் கூடும். வழியிலே ஒரு மாட்டை நான் பார்த்திருக்கலாம். அது பழைய உணர்ச்சிகளை மனத்திலே மேலுச்குக் கொண்டுவந்திருக்கலாம்.

மேலே எடுத்துக் காட்டப்பட்ட கனவுகளில் சிக்கல் ஒன்றும் இல்லையாதலால் அவற்றை எளிதாக விளக்கிவிடலாம். ஆனால் பொதுவாகப் பல கனவுகள் அவ்வாறிருப்பதில்லை. அவை நம்மைத் திகைக்க வைக்கும்படியாக இருக்கின்றன. நிகழ்ச்சிகளில் ஒன்றுக்கொன்று தொடர்பிருப்பதில்லை. விந்தையான காட்சிகளும் உயிரினங்களும் காணப்படுகின்றன. நடக்க முடியாத நிகழ்ச்சிகளும் நடக்கின்றன. இவற்றிற்கெல்லாம் பொருள் கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதல்ல. ஏன் அவ்வாறு விந்தைக் கனவுகள் ஏற்படுகின்றனவென்பதையும் அவற்றின் குறிப்பு என்னவென்பதையும், அவற்றால் மனநிலையை எவ்வாறு அறிந்துகோள்ள இயலும் என்பதையும் அடுத்த பகுதியில் ஆராய்வோம்.

கனவும் மனமும்

கனவைப் பற்றி மூன்றுவிதமான கருத்துகள் இருக்கின்றன. ஒன்று பாமர மக்களுடையது. அவர்களுக்குக் கனவிலே அறிவுக்குப் பொருந்தாத ஆழ்ந்த நம்பிக்கையுண்டு. தெய்வ வாக்காகவே அதை எடுத்துக் கொள்ளுவார்கள். மதிநுட்பம் வாய்ந்தவர்கள் கூடச் சில வேளைகளில் கனவில் தாம் கண்டவற்றைப் பின்பற்றி வாழ்க்கையில் நடக்கத் தொடங்குவார்கள். கனவு ஒருசில வேளைகளில் மெய்யாவதும் உண்டு. அந்த அனுபவ உண்மையை ஒட்டித்தான் நந்தனாரின் கனவும் திரிசடையின் கனவும் தீட்டப்பட்டிருக்கின்றன. கனவு பலித்ததாகச் சிலர் கூறுவதையும் கேட்டிருக்கிறோம். இந்த நம்பிக்கையே சொப்பன நூல்கள் எழக் காரணம். அவை விஞ்ஞான முறை ஆராய்ச்சிக்குப்பொருந்துமா என்பதைஊன்றி நோக்க வேண்டும். கனவைப் பற்றி மற்றொரு கருத்து விஞ்ஞானிகளில் ஒரு சாரார் கொண்டிருப்பதாகும். கனவுகள் உண்டாவதற்கு உடல் நிலையே காரணம் என்று அவர்கள் கருதுகிறார்கள்- உணவு செரிக்காமை, மலச்சிக்கல் போன்ற கோளாறுகள் மூளையைப் பாதித்து உறக்கத்திலே கனவுகளை உண்டாக்குகின்றனவென்றும் உறங்கிக்கொண்டிருக்கிற ஒருவன்மேல் ஒரு சொட்டுத் தண்ணீர் விட்டால் அவன் மழை பெய்வது போலக் கனவு காண்பான் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இதுபோன்ற சோதனைகள் செய்து கனவுகளையுண்டாக்கியும் இருக்கிறார்கள்; நான் பல சிறுவர்களுடைய கனவுகளை ஆராய்ந்திருக்கிறேன். உறங்கும்போது

சிறுநீர்ப் பையில் சிறுநீர் நிறைந்துவிட்டால் கனவு ஏற்பட்டு முடிவில் அதை வெளிவிடுவது போன்ற நிகழ்ச்சி ஏற்படுவதாகப் பலர் உரைக்கிறார்கள். அதன் காரணமாக உறக்கத்தில் படுக்கையிலேயே சிறுநீர் கழித்துவிடுகின்ற சிறுவர்களுமுண்டு. உறக்கத்தில் சிறுநீர் கழிப்பதற்கு வேறு காரணங்களும் உண்டு.

மூன்றாவது கருத்தும் உளவியலை அடிப்படையாகக் கொண்டது. மன நிலையே கனவுக்குக் காரணமென்றும், உடற் கோளாறால் கனவு தொடங்கினாலும், அதில் தோன்றுகின்ற நிகழ்ச்சிகள் மன நிலையைப் பொறுத்தவையே என்றும் ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். ஒரு துளி நீரைத் தூங்குகிறவன்மேல் தெளித்தால் மழை பெய்வது போலக் கனவு உண்டாகலாம். ஆனால் பலரைக்கொண்டு இச்சோதனையைச் செய்து பார்த்தால் எல்லாரும் ஒரேவிதமாகக் கனவு காணமாட்டார்கள் என்பது தெரியவரும். சிறு தூறல் விழுவதுபோல ஒருவன் கனவு காணலாம்; பெருமழை பெய்வதுபோல மற்றொருவன் காணலாம். இடியும் மின்னலும் சேர்ந்திருப்பதாக வேறொருவன் காணலாம். மேலும், மழை பெய்வதுடன் வேறு பல நிகழ்ச்சிகளையும் அவர்கள் காண்பார்கள். அவைகள் ஒன்றிற்கொன்று மாறுபட்டிருக்கும். அவையெல்லாம் மனநிலையைப் பொறுத்தது என்று உளவியல் அறிஞர்கள் விளக்கம் தருகிறார்கள். சிக்மண்ட் பிராய்டுதான் முதல் முதலில் கனவுகளைப் பாகுபடுத்தி அவற்றின் பொருளை விஞ்ஞான முறையில் அறிய முயன்றவர் என்பதை முன்பே கண்டோம்.

எல்லாக் கனவுகளும் ஆசை நிறைவேற்றத்திற்காக ஏற்படுபவை என்பது பிராய்டின் கொள்கை.

'நனவில் கைகூடாத ஆசைகள் கனவில் கைகூடுவதால் மனத்திற்கு ஆறுதல் கிடைக்கிறது; நல்ல உறக்கமும் ஓய்வும் கிட்டுகின்றன; ஆதலால் கனவே உறக்கத்தைப் பாதுகாக்கிறது என்று அவர் சொல்லுகிருர். "உறக்கத்தைக் கனவு பாதிப்பதில்லை; அதைப் பாதிக்கும் படியான மனச் சுமைகளை நீக்கி நல்ல ஓய்வைக் கொடுக்கக் கனவு முயல்கிறது."

"மறைந்து கிடக்கும் ஆசைகள் கனவில் நிறைவேறுவதால் மனத்தில் அமைதி ஏற்படுகின்றது-ஆனல் பிராய்டு கருதுவதுபோல எல்லாக் கனவுகளும் ஆசை நிறைவேற்றத்திற்காகவே உண்டாகின்றன என்ருல் ஆசை என்பதற்கு மிக விரிந்த பொருள் கொள்வது சரியல்ல" என்று பல உளவியல் அறிஞர்கள் எண்ணுகிருர்கள்.

பொதுவாகக் கனவுகளை ஆராய்வது மிகச் சுவையுடையது. ஒன்பது முதல் பன்னிரண்டு வரை வயதுள்ள சிறுவர்கள் கண்ட சிக்கலில்லாத சில கனவுகளைக் கீழே தருகிறேன்.

கனவு 1. "நான் ஒரு பெரிய அரண்மனைக்குள் நுழைந்துவிட்டேன். அங்கு லட்டு, ஜிலேபி, எல்லாம் இருந்தன. நான் அவற்றை என் வாயில் எடுத்தெடுத்துப் போட்டுக்கொண்டேன். அப்பொழுது ஒரு பெரிய தடி மனிதன் வந்து என்னை அடித்தான். நான் அழுது கொண்டு விழித்துக்கொண்டேன்."

கனவு 2. "என் தகப்பனர் நூறு ரூபாய் கொடுத்து என்னை ஊருக்குப் போகச் சொன்னர். நான் போய்க்கொண்டிருந்தேன். அப்பொழுது ஓர் ஆகாய விமானம் வந்தது. நான் அதில் ஏறிக்கொண்டேன்.

அதில் உள்ளவர்கள் எல்லாரும் வெள்ளைக்காரர்கள். கொஞ்ச தூரம் போனதும் விமானம் கெட்டுவிட்டது. உடனே பாரஷூட் என்னும் குடையைக் கொடுத்தார்கள். நான் அதைப் பிடித்து இறங்கினேன். ஒரு குளத்திற்குள் போய் விழுந்தேன். உடனே விழித்துக் கொண்டேன்.''

கனவு 3. ''நான் பழனிக்கு ரெயிலில் போவதாகக் கனவு கண்டேன். ஒரு ஸ்டேஷனில் இறங்கினேன். அப்பொழுது பயணச் சீட்டுப் பரிசோதகர் வந்து பயணச் சீட்டைக் காட்டும்படி கேட்டார். நான் வாங்கவில்லையென்று கத்தினேன். 'ஏண்டா சத்தம் போடுகிறாய்?' என்று அப்பா கேட்டார். நான் விழித்துப் பார்த்தேன். அப்பொழுது படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தேன்.''

வெவ்வேறு அளவில் ஆசை நிறைவேற்றத்தை இக் கனவுகளில் காணலாம். அதிகாரம் செய்தல், மிரட்டுதல், அடித்தல் முதலிய செயல்களைச் செய்வதைக் கனவில் தோன்றுபவர் பொதுவாகத் தந்தையைக் குறிப்பார். உயரத்திலிருந்து விழுவது போன்ற கனவுகள் மனித பரிணமத்திலே இவன் விலங்கு நிலையிலிருந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவத்தைக் குறிப்பதாகச் சிலர் கூறுகிறார்கள். மரங்களில் வசித்த அவ்விலங்குகள் தூக்கத்தில் தவறிக் கீழே விழுந்ததால் உண்டான ஆழ்ந்த உள்ளக் கிளர்ச்சி என்றும் மறையாமல் மனத்தில் பதிந்துவிட்டதாகவும், அது வழிவழியாக வந்து இன்னும் உறக்கத்திலே கனவாகத் தோன்றுகிறதென்றும் அவர்கள் விளக்குகிறார்கள். உறங்கும்போது கால்களை நீட்டுவதாலோ, அல்லது வேறு உடல் அசைவுகள் ஏற்படுவதாலோ கீழே விழுவதுபோன்ற கனவு பிறக்கலாமென்று உடலியலார் கூறுகிறார்கள். நல்ல

நடத்தையிலிருந்து தவறி நடக்க உதித்துள்ள விருப்பத்தை அக்கனவு காண்பிக்கிறது என்று உளப்பகுப்பியலார் எண்ணுகிறார்கள்.

கனவில் தோன்றும் சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைப்பற்றிப் பொதுவான விளக்கம் சொல்லலாமென்றாலும் அவ்வாறு விளக்கம் சொல்வதற்கு யாதொரு திட்டமான விதியோ சூத்திரமோ கிடையாது. கனவு காண்பவனுடைய தனிப்பட்ட மன நிலைக்கு ஏற்றவாறு அவற்றிற்குப் பொருள் காணவேண்டும். பல கனவுகளை ஆராயும்போது அவை விந்தையாகவும், தொடர்பின்றியும், சிக்கல்கள் மிகுந்தும் இருப்பது தெரிய வரும். அவற்றையெல்லாம் புரிந்துகொள்ளுவதற்கு பிராய்டு ஒரு புதிய முறையைக் கையாண்டார். அதைத்தான் விருப்பக் கருத்தியையுமுறை (Free Association Method) என்கிறார்கள். ஒரு கனவைப் பல பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு பகுதியையும் அக்கனவைக் கண்டவனிடம் கூறும்போது அவன் மனத்தில் ஏற்படும் எண்ணங்களையெல்லாம் ஒளிக்காமல் சொல்லும்படி கேட்கவேண்டும். அப்படிக் கேட்கும்போது அவனைத் தனியாக ஒரு இருண்ட அறையில் படுத்திருக்கும்படி செய்யவேண்டும். அவன் கூறுகின்றவைகளைக் கனவுடன் சேர்த்து ஆராய்ந்தால் அவனுடைய மனநிலையையும் அதில் மறைந்து கிடக்கும் ஆசைகளையும் அறிய முடியும் என்று பிராய்டு சொல்லுகிறார். அவ்வாறு ஆராய்ந்த ஒரு கனவைப் பற்றி அடுத்த பகுதியில் காண்போம்.

கனவின் பொருள்

பல கனவுகள் சிக்கல் நிறைந்திருக்கின்றன; அவற்றில் தோன்றும் நிகழ்ச்சிகள் மேலாகப் பார்க்கும்போது பொருளற்றவைகளாகவும் இருக்கின்றன. கோ. என்பவர் கண்ட ஒரு கனவை இங்கே ஆராய்வோம்.

"ஏதோ ஒரு பெரிய கோயில். அங்கே நானும் என் நண்பர்கள் சி. வே. மா. ஆகிய மூவரும் சேர்ந்து ஒருவனைக் கொலை செய்தோம். அவனுடைய மூக்கை மாத்திரம் அறுத்துச் சந்தனத்தில் வைத்துச் சாமிக்கு வைத்தோம். பிணம் வெளியிலேயே கிடந்தது. சி. தான் மூக்கை அறுத்தவர். கடவுளைத் தொழுவதற்காகப் பலர் ஒரு மோட்டார்க் காரில் வந்தார்கள். உடனே நான் பிணத்தைத் தூக்கிக் கோபுரத்தின் மேல் வீசினேன். இதை எனது ஆசிரியர் ஒருவர் பார்த்துக் கொண்டார்.

"நான் ஓடி வந்துவிட்டேன். வழியில் என் நண்பர் வீ. யைச் சந்தித்து வேறொருவனிடம் சைக்கிள் வாங்கி இருவரும் ஏறிக்கொண்டு ஊருக்குச் சென்றோம். வழியில் சி. தம் அண்ணனிடம் ஒன்றும் நடக்காதது போல் வந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. கொலை செய்துவிட்டு இவர் இவ்வளவு தாராளமாக வெளியில் நடமாடுகிறாரே என்று வியந்தேன்.

"நாங்கள் ஒரு சத்திரத்தில் புகுந்துகொண்டிருந்தோம். ஆனால் சி. வேறு சில நண்பர்களிடம் சாலையில் சென்றுகொண்டிருந்தார்."

கனவுகள் பல இவ்வாறிருப்பினும் பிராய்டு கூறுவது போல் அவற்றை ஆராய்ந்து பொருள் கண்டால் மன நிலையையும் கோளாறுகளையும் அறிந்துகொள்ள முடியும். கனவை ஆராய்வதற்கு விருப்பக் கருத்தியைபு —முறையைக் கையாளுகிறார்கள் என்று முன்பே குறிப்பிட்டேன்.

அம்முறையைப் பின்பற்றி ஆராய்ந்த ஒரு கனவையும் அதன் பயனையும் சோதனை செய்தது போலவே கிழே தருகிறேன்:—

ப. என்ற நண்பர் கண்ட கனவு: "உலாவச் சென்று கொண்டிருந்தேன். ஓரிடத்திலே ஒரு பாம்புப் புற்று இருந்தது. ஒணான் ஒன்று பாம்பைப் பிடித்துத் தின்ன நினைத்து அந்தப் புற்றுக்குள் நுழைந்தது. நான் கொஞ்சம் தொலை போய்விட்டுத் திரும்பி அதே வழியில் வந்தேன். உள்ளே சென்ற ஒணான் வேகமாக வெளியே வந்து குதித்தது. பாம்பு அதைத் துரத்திக் கொண்டு வந்தது. என்னைத் தாண்டித் துரத்திக் கொண்டே போயிற்று. ஒணானைப் பாம்பு தன் வாயில் கவ்விக்கொண்டது."

சோதனை:—இரவு 7½ மணிக்கு விருப்பக் கருத்தியைபு முறையில் சோதனை தொடங்குகிறது. எங்கும் நிசப்தம். அறைக்குள்ளே மங்கிய வெளிச்சம். நண்பர் ஒரு கட்டிலிலே கைகால்களை நீட்டிக்கொண்டு அமைதியாகப் படுத்திருக்கிறார். நான் தலைக்குப் பக்கத்தில் பின்புறமாக அமர்ந்திருக்கிறேன்.

"இப்பொழுது நீங்கள் கண்ட கனவில் சில பகுதிகளைப் பற்றித் தனித் தனியாக உங்களிடம் சொல்லப் போகிறேன். ஒவ்வொன்றையும் கேட்டதும் அதைப் பற்றியே சிந்திக்க வேண்டும். அதன் காரணமாக

மனத்தில் என்ன என்ன தோன்றுகின்றனவோ அவற்றையெல்லாம் அப்படியே சொல்லிக்கொண்டிருங்கள். எதையும் ஒளிக்கக்கூடாது. உம்முடைய அறிவைக்கொண்டு எதையும் ஆராய்ந்து பார்க்கலாகாது. தோன்றியது தோன்றியபடியே கூறவேண்டும். எண்ணங்கள் மிக இழிந்தவைகளாக இருந்தாலும் அவற்றை மறைக்க முயல வேண்டாம். எல்லாவற்றையும் தாராளமாகச் சொல்ல வேண்டும். அவற்றைக் கொண்டுதான் உண்மையைக் காணலாம்" என்று இவ்வாறு கூறிவிட்டுக் கனவின் பகுதிகளை ஒவ்வொன்றாகக் கூறினேன். அவற்றைக் கேட்டு, ப. சொன்ன எண்ணங்களையும் கீழே தருகிறேன்.

கனவின் பகுதி 1. பாம்புப் புற்று:—"எங்கும் பாம்புப் புற்றுகள். அவற்றைப் பார்த்துக்கொண்டே நடக்கிறேன்—சிறு வயதில் பாம்புப் புற்றுக்குப் பூசை செய்வதைப் பார்த்தால்—இரவில் நடக்கும்போது பாம்பிருக்குமோ என்று அஞ்சுதல்—வழியிலே ஒரு பாம்புச் சட்டை—பாம்பிருக்குமோ என மீண்டும் அச்சம்—ஒரு நாள் இரவிலே வீட்டிற்குத் தனியாக வருதல். பாம்பு வீட்டிற்குள்ளே இருந்தால், இருட்டிலே என்ன செய்வது?—தீக்குச்சியைக் கொளுத்திக் கொண்டே உள்ளே செல்லவேண்டும். முன்பு கணக்கராக இருந்தபோது எனது அறையில் ஒரு நாள் சர சர வென்று சப்தம்—வெளியே போய்விடுகிறேன்-திரும்பி வந்து பார்த்தபோது பாம்பு—மற்றவர்கள் வந்து அதை அடிக்கிறார்கள். நிலாவைப் பாம்பு விழுங்குவதாகச் சிறுவயதில் கேட்ட கதை.

கனவின் பகுதி 2. ஓணான் பாம்புப் புற்றில் நுழைதல்:—"ஓணான் அடிக்கடி என் கண்ணில் படுகிறது—

சிறு வயதில் எனது நண்பர்கள் இருவருடன் விளையாடுதல்—அவர்கள் உண்டை வில்லால் ஓணானை அடித்தல்—ஓணானைக் கண்டு பயம்—அடிக்கவேண்டாமென்று நான் கண்டிப்பதுண்டு—ஓணானைப் பார்த்தால் உடம்பு சிலிர்க்கும்—அதன் உருவத்தில் ஒரு அருவருப்பு—அதனால் கடிவுண்டவர்கள் இறந்துவிடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்—நான் கணக்கராக இருந்தபோது ஒருநாள் அறையில் ஒரு ஓணான் புகுந்து கொண்டது—வெளியே துரத்த முடியவில்லை.

கனவின் பகுதி 3. பாம்பு ஓணானைத் துரத்தல்:—"இரவில் செல்லும்போது செடிகளைக் கண்டால் எட்டத் தள்ளிச் செல்வேன்—கனவு கண்ட மறுநாள் ஒரு ஓணான் என் பின்னால் குதித்து ஓடிற்று. அது மேலே விழுந்திருந்தால் கடிக்குமோ என்று ஐயம்—பாம்பு வளைந்து வளைந்து போகும்—நேராக ஓடினால் மனிதன் அதனிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம்."

கனவின் பகுதி 4. பாம்பு ஓணானை வாயில் கவ்வுதல்:—யாரோ இருவர் ஒரு மலைப் பாம்பை ஒரு கம்பில் கட்டித் தூக்கி வந்ததைச் சிறு வயதில் பார்த்த நினைவு—மலை ஏறும்போது பாம்பு வருமோ என்று அஞ்சுதல்—சிறு வயதில் திண்ணையில் படுத்திருந்த போது கூரையில் ஏதோ ஒன்று அசைவதைக் கண்டு தாயைக் கூப்பிடுதல்—பார்த்தால் அது பாம்பு—அதை அடித்தார்கள்—மலைப் பாம்பு ஆடுமாடுகளை விழுங்குதல்—பாம்பின் வாலைப் பிடித்துச் சுற்றி அடித்தால் அது செத்துவிடும். ஓரூர் சென்று வரும்போது இருட்டி விட்டது. வழியில் பாம்பிருக்குமோ என அச்சம். பாம்பு வழியில் படுத்திருந்தது. காலடி ஓசை கேட்டு அது போய்விட்டது. புது வீட்டில் ஏழெட்டுத்

தேளிருந்தன. பாம்பு வந்தால் என்ன செய்வதென்று அஞ்சுதல். சிறு வயதில் தாயுடன் படுத்திருந்தபோது படுக்கையடியில் ஒரு பாம்பு இருந்தது. அதைக் கண்டு தாய் அலறி நடுங்குதல்."

எனது நண்பருக்கு இப்பொழுது திருமணமாகியிருக்கிறது. புது வீட்டில் தனிக் குடித்தனம் நடத்துகிறார். அந்த வீட்டிற்கு எதிராக ஒரு கழனி யிருக்கிறது. பாம்பு அங்கே இருக்கலாமென ஐயம். மேலும் அவர் சில வேளைகளில் இருட்டிய பிறகு காட்டுப் பாதை வழியாக வீட்டிற்கு வரவேண்டி யிருக்கிறது. அதனால் பாம்பைப் பற்றிய அச்சம் உள்ளத்திலே மேலெழுந்திருக்கிறது. சிறு வயதிலே வீட்டுக் கூரையின் மீதும், படுக்கைக்குக் கீழும் பாம்பைக் கண்டதும், கணக்கராக இருந்த காலத்தில் அறைக்குள்ளே பாம்பைக் கண்டதும் பாம்பைப்பற்றிய அச்சத்தை மறை மனத்தில் உண்டாக்கியிருக்கின்றன. இன்று பாம்பைப் பற்றிய எண்ணம் ஏற்படவே பழைய உணர்ச்சியானது மனத்தில் தோன்றியிருக்கிறது.

மேலும் தம் மனத்திலே உண்டாகும் பாம்பைப் பற்றிய அச்சத்திற்காக அவர் தாமே வெறுத்துக் கொள்கிறார். அதனால் சிறு வயதிலிருந்து அருவருத்து வந்த ஒன்றைத் தம்மையே கனவில் காண்கிறார். பாம்பை அடித்து வெற்றி கொள்ள வேண்டுமென்ற ஆசையும் அதில் காண்கிறது. இவ் விளக்கத்தைக் கூறியபோது நண்பர் அதைப் பெரும்பாலும் ஒப்புக் கொண்டார். வேறொரு ஊரில் இருந்த காலத்தில் பாம்புக் கனவே கண்டதில்லையென்றும் கூறினார். சிறு வயதில் ஏற்பட்ட அனுபவம் இதுவரை நினைவிற்கு வந்ததில்லை என்றும் சொல்லி வியப்படைந்தார்.

விருப்பக் கருத்தியையு முறையைக் கையாண்டு நல்ல பலன் கண்டவர் சிக்மண்ட் பிராய்டு; ஆசை நிறைவேற்றத்திற்காகவே கனவுகள் எழுகின்றன வென்று அவர் கூறுகிறார். அவருடைய ஆராய்ச்சி யைப் பெரிதும் போற்றினாலும் ஆட்லரும் யுங்கும் அவர் கூறுவதை முழுமையாக ஏற்றுக்கொள்வதில்லை. "கனவு என்ற வாயிலின் வழியாக மனக் கோட்டைக் குள் நடக்கும் நிகழ்ச்சிகளின் மேற்போக்கான காட்சி நமக்குக் கிடைக்கிறது" என்று ஆட்லர் எழுதுகிறார். "ஒருவனுடைய வாழ்க்கைப் பிரச்சினையையே கனவு காட்டுகிறது" என்பது அவர் கருத்து.

உயர்வடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத் துடன் வாழ்க்கைப் போராட்டம் நிகழ்வதாக ஆட்லர் நம்புகிறார். 'கனவும் அந்நோக்கத்தை அடையும் முயற்சியை ஓவியம்போலத் தீட்டிக் காண்பிக்கிறது.'

யுங் என்பவர் மறை மனத்திற்கு மற்றவர்களைவிட மிக உயர்ந்த இடம் கொடுப்பவர். மனித இனம் அடைந்துள்ள ஆழ்ந்த உள்ளக் கிளர்ச்சிகளெல்லாம் மறை மனத்தில் பதிந்திருக்கின்றன என்பதும் அம் மறை மனத்திலிருந்தே வெளிமனம் வளர்கிற தென்பதும் அவர் கருத்து. ஆகவே அவர், "வாழ்க் கையில் ஏற்படும் தடைகள் குறைபாடுகள் முதலிய வற்றிற்கு மறை மனம் கனவிலே ஈடு செய்ய முயலு கிறது. அவ்வாறு ஈடு செய்வதற்காக உண்டாகும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் புதிர்போல இருக்கின்றன. அவற்றை நிலைமைக்கேற்றவாறு ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும்" என்று கூறுகிறார்.

பிராய்டு, ஆட்லர், யுங் ஆகிய மூவருடைய கருத்துக் களையும் சேர்த்துப் பார்க்கும்போது கனவைப்பற்றி ஒரு பொதுவான விளக்கம் நமக்குக் கிடைக்கும்.

பல கனவுகள் தொடர்பில்லாமல் தாறுமாருகவும் வேடிக்கையாகவும் இருப்பதால் கனவிற்கே பொருளில்லை என்று நாம் தள்ளிவிடக் கூடாது. "கனவு நம்முடைய வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையது; அது குறிப்பாக மன நிலையைக் காட்டுகிற தென்பதை வெகு எளிதில் மெய்ப்பித்துவிடலாம். மறைவாக மனத்துள்ளே வேலை செய்யும் எண்ணங்களை அது காண்பிக்கிறது" என்று மெக்டுகல் என்ற உளவியலறிஞர் எழுதுகிருர்.

கனவுகள் நிகழ்கின்ற காலத்திலேயும் மனம் வேலை செய்துகொண்டிருக்கிறது. ஆனுல் விழிப்பு நிலையிற் போல அது அவ்வளவு கூர்மையாகவும் தீவிரமாகவும் வேலை செய்வதில்லை. தர்க்க முறைப்படியும் நுட்பமாகவும் அப்பொழுது எண்ணங்கள் தோன்றுவதில்லை. இவ்வாறு மனம் தனது முழு ஆற்றலுடன் வேலை செய்யாததால் அந் நிலையிலே மறை மனத்தில் அழுந்திக் கிடக்கும் எண்ணங்களும் ஆசைகளும் கனவாக வெளிப்படுகின்றன. ஆதலினுல்தான் கனவுகளும் தாறுமாருக இருக்கின்றன.

வாழ்க்கையில் நிறைவேருத பல ஆசைகள் கனவில் நிறைவேறுகின்றன என்று கண்டோம். கனவிலே ஒரு சில வேளைகளில் எதிர்காலத்தில் நடைபெறப் போவதும் தோன்றுவதுண்டு. இறந்த கால அனுபவங்களைக் கொண்டிருப்பதோடு ஓரளவிற்கு எதிர்கால அனுபவங்களின் தோற்றத்தைக் காணும் திறமையும் மனத்திற்கு உண்டு. உலகப் போக்கையும் தனி மனிதனுடைய வாழ்க்கைப் போக்கையும் கவனித்தால் அவனுடைய எதிர்காலத்தைப் பற்றிச் சிறிது உணர முடியும். மேலும் மனத்துள் எழுந்துள்ள எண்ணங்களின்படியும் விருப்பங்களின்படியுமே எதிர்காலத்தில்

செயல்களின் போக்கு அமைகின்றன. ஆதலால் அவை கனவில் எப்பொழுதாவது தோன்றுவதில் அற்புதமொன்றுமில்லை. இதைக்கொண்டு எல்லாக் கனவுகளும் மெய்யாகுமென்று எண்ணிவிடக் கூடாது. கனவைப் பற்றிய உண்மையை அறிந்த பின்னும் அவ்வாறு தவருக எண்ணமாட்டோமல்லவா?

ஒவ்வொரு கனவையும் ஆராய்ந்து அதன் பொருளை அறியலாம். அதற்கு முக்கியமாகக் கனவு காண்பவனுடைய ஒத்துழைப்பு வேண்டும். மனத்திற்குள்ளேயே மறைத்து வைத்துள்ள செய்திகளையும் மனத்தில் உதிக்கிற எண்ணங்களையும் வெளிப்படையாகக் கூற அவன் வரவேண்டும். இல்லாவிட்டால் உண்மையை அறிவது பெரும்பாலும் முடியாது. அவ்வாறு வெளிப்படையாகக் கூறிய காலத்திலும் சில வேளைகளில் கனவின் பொருளை அறிய முடியாமற் போகலாம். அல்லது கனவிற்கு வேறு வகையான பொருள் கூறவும் இடமிருக்கலாம். "கனவின் பொருளை முழுமையாக அறிந்துவிட்டதாக யாரும் அறுதியிட்டுச் சொல்ல இயலாது. அதற்குக் கண்ட பொருளானது சரியானதே என்று தோன்றக் கூடியதாக இருக்கின்ற நிலையிலும் அதற்கு வேறு பொருளொன்று இருக்க முடியும்" என்று பிராய்டு கூறுகிருர். ஆட்லரும் யுங்கும் இக் கருத்தை ஒப்புக்கொள்ளுகிருர்கள். ஆதலால் கனவுகளை ஆராயும்போது இவற்றையெல்லாம் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். கனவென்பது பொருளற்ற தோற்றமல்ல. மனநிலையை ஒரு வேடிக்கையான முறையில் தீட்டிக் காண்பிக்கும் நிகழ்ச்சி அது. அவன் உண்மையை ஆராய்ந்து கண்ட பெருமை முக்கியமாக மனப் பகுப்பியலாரையே சாரும்.

பகற் கனவு

உறங்கும்போது காண்பது கனவு. விழித்திருக்கின்ற நிலையிலும் கனவு காண்பதுண்டு. அது பகற் கனவு. பகற் கனவு என்றவுடன் பகலிலே உறங்கும் போது காணும் கனவு என்று கருதிவிடக் கூடாது. நன்ருக விழித்திருக்கும்போதே எழுகின்ற மனக் கோட்டைக்குத்தான் அப்பெயர் வழங்குகிறது. காலம் பகலாகவும் இருக்கலாம். இரவாகவும் இருக்கலாம். உறக்க நிலையிலே தோன்றுவது கனவு; விழிப்பு நிலையிலே தோன்றுவது பகற் கனவு.

கனவு காணுதவர்களே பெரும்பாலும் இருக்க மாட்டார்கள். பகற் கனவு காணுதவர்களும் வெகு அருமை. மக்கள் கூட்டத்தையே இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்துவிடலாம். பகற் கனவு காண்பவர் ஒரு பிரிவு; செயலிலே ஈடுபடுகின்றவர் மற்ெருரு பிரிவு. ஆனுல், பகற் கனவு காண்பவன் செயலிலேயே இறங்கமாட்டான் என்பதில்லை. அதுபோலவே செயல் புரிகின்றவன் பகற் கனவு காணமாட்டான் என்பதில்லை. பகற் கனவில் மிகுதியாகக் காலத்தைச் செலவிடுபவர்கள் ஒரு பகுதி; செயல் புரிவதில் மிகுதியாகக் காலத்தைச் செலவிடுபவர்கள் மற்ெருரு பகுதி.

பகற் கனவு வேறு; சிந்தனை வேறு. பகற் கனவு காண்பவன் தனக்கு விருப்பமானபடியெல்லாம் எண்ணங்களையும் காட்சிகளையும் கற்பித்துக்கொள்ளுகிருன். ஆனுல் சிந்தனை செய்பவன் அப்படியில்லை. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றியோ ஒரு சூழ்நிலையில் எவ்

வாறு தான் நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றியோ அவன் தன் மனத்தை ஊன்றிச் செலுத்தி எண்ணமிடுகிறான். மனம் போன போக்கிலே அவன் செல்லுவதில்லை. அவன் மனத்தை எண்ண உலகில் உறுதியாக நடக்கும்படி அறிவைக்கொண்டு தூண்டுகிறான். பகைவர்களின் கோட்டையைக் கைப்பற்ற வேண்டுமானால் சேனைத் தலைவன் அதற்காக எத்தனை ஆழ்ந்து சிந்தித்துத் திட்டம் போடவேண்டும்! எவ்வாறு தாக்கினால் எளிதில் வெற்றிபெற முடியும் என்றும், அதற்கு எத்தனை பெரிய படை பலம் வேண்டுமென்றும், அவன் நன்கு எண்ணிப் பார்த்து முடிவுகட்ட வேண்டும். பல ஆயிரக்கணக்கான வீரர்களைப் பலி கொடுக்க வேண்டுமானாலும் அதற்கு அவன் தயங்காமல் இருக்கவேண்டும். இங்ஙனம் எண்ணிப் பார்த்து வேண்டுவனவற்றையெல்லாம் முன்னேற்பாடாகச் செய்துகொண்டு போர் தொடங்கினால்தான் அவன் வெற்றி காண முடியும். அவ்வாறில்லாமல் தான் எளிதிலே பகைவர்களை வென்று கோட்டைக்குள் நுழைந்துவிட்டதாகவும், புகழ்மாலை பெற்றுவிட்டதாகவும் அவன் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தால் வெற்றி கிட்டிவிடாது.

செயலிலேயே நாட்டமுள்ளவனும் பகற் கனவு காண்பதுண்டு. ஆனால், அவன் அத்துடன் நின்றுவிடுவதில்லை. அவன் அக்கனவை நனவாக்க முனைகிறான். உறுதியோடு செயலில் ஈடுபடுகிறான். வான வெளியிலே சிறகை விரித்து வெள்ளைக் கொக்கு ஒயிலாகப் பறக்கின்றது. அதைப் பார்த்து மனிதன் தானும் பறப்பதுபோலப் பகற் கனவு காண்கிறான். ஆயிரக்கணக்கானவர்கள் அத்துடன் மன நிறைவு அடைந்துவிடுகிறார்கள். ஒன்றிரண்டு பேர்கள் அதை

வைத்துக் கற்பனைக் கவிதைகள் வரைகிறார்கள். ஒருவன் உண்மையாகவே பறக்க முயலுகிறான். பகற் கனவிலே அவன் அமைத்துக்கொண்ட விமானத்தை உண்மை யாகவே உருவாக்கத் தனது அறிவைப் பயன்படுத்தி ஆழ்ந்து சிந்திக்கிறான். பறப்பதற்கு வேண்டிய விஞ்ஞான உண்மைகளைக் காண முயல்கிறான். பல சோதனைகள் செய்கிறான். அவற்றின் விளைவாக விமானம் நமக்குக் கிடைக்கின்றது.

கனவிற்கும் பகற்கனவிற்கும் பொதுவானவை பல இருக்கின்றன. அவை இரண்டும் கனவு காண்பவனையே நடுநிலையாகக்கொண்டிருப்பவை. வாழ்க்கையில் நிறை வேறாது மனத்தில் மறைந்து கிடக்கும் ஆசைகள் நிறைவேறுவதையே முக்கியமாக இரண்டிலும் காண் கிறோம். சில ஆசைகளும் எண்ணங்களும் இழிந்தவை களாக இருக்கலாம். அவற்றை மனிதன் அறிவினால் அடக்க முயலுகிறான். அதனால் அவை மறை மனத்தில் அழுந்துகின்றன. உறங்குகின்றபோது அறிவின் ஆதிக்கம் சற்றுத் தளர்கின்றது. அந்த வேளையிலே அவைகள் கனவாக வெளியாகின்றன. அதுபோலவே பகற் கனவிலும் அவ்வாசைகள் தோன்றி ஒரு வகை யான மனநிறைவை அளிக்கின்றன.

பகற் கனவைப்பற்றி ஜீ. எச் கிரீன் என்பவர் பின் வருமாறு எழுதியுள்ளார்:

1. நமக்குத் தெரியாமல் மனத்திலே அழுந்தி மறைந்து கிடக்கும் ஆசைகளைப் பகற் கனவு நிறை வேற்றுகின்றது.

2. ஒருவன் தன்னைப் பற்றியே உயர்வாகக் கருது வதை அது குறிக்கின்றது.

3. உலகத்தைப் பற்றி அவன் வெளிப்படை யாகக் கொண்டுள்ள நினைப்பைத் தவிர வேறொரு

நினைப்பிருப்பதையும் அது குறிப்பாகக் காட்டுகிறது.

4. செயலில் வேண்டுமென எழுகின்ற எண்ணத்திற்கும், செயலில் இறங்குவதற்கும் இடையே உண்டாகும் பல முக்கியமான நிகழ்ச்சிகளில் அதுவும் ஒன்றாக இருக்கலாம்.

5. மிக நல்ல முயற்சியோடு திடமாகச் செயலில் ஈடுபட்டிருக்கும் வேளையிலல்லாது மற்ற வேளைகளில் அது ஆதிக்கம் செலுத்தத் தொடங்குகிறது.

பகற் கனவும் சிறு வயது முதற்கொண்டே உண்டாகிறது. சிறு குழந்தைகள் விளையாடுவதை நாம் பார்த்திருக்கிறோம். ஒரு குழந்தை தன்னைத் தாயாகவும், ஏதாவதொரு பொருளைக் குழந்தையாகவும் கற்பனை செய்துகொள்ளுகிறது. தனது தாய் தன்னிடம் எவ்விதம் நடந்து கொள்ளுகிறாளோ அதுபோலவே கற்பனைக் குழந்தையிடம் அது நடக்கின்றது. தாயைப் போலவே பேசுகிறது; கடுஞ்சொல் கூறுகிறது. தண்டனை கொடுக்கிறது. அந்தக் கற்பனைக் குழந்தையிடம் தன்னிடமுள்ள குறும்புகள் எல்லாவற்றையும் இது காண்கிறது. இவ்விதமாகத் தன்னை உயர்த்தியும், தன்னிடமுள்ள குறைகள் அக் கற்பனைக் குழந்தையிடம் இருப்பதாக எண்ணிக்கொண்டும் அது விளையாடி மன நிறைவு பெறுகிறது.

மூன்று வயதாக இருக்கும்போது சுந்தரி அடிக்கடி தனக்கே தனியாக ஒரு சொந்த வீடிருப்பதாகப் பேசுவாள். "என் வீட்டிலே நிறைய மிட்டாய் இருக்கிறது. பெரிய பெட்டி இருக்கிறது" என்று என்ன என்னவோ பெருமையாகச் சொல்லிக்கொள்ளுவாள். ஒருநாள் அவள் தன் வீட்டிலே பெரிய விருந்து நடக்கிறதென்

றும், வடை பாயசம் எல்லாம் ஏராளமாகச் செய்யப் பட்டிருக்கின்றனவென்றும் கூறிவிட்டு எங்களுடன் உணவு கொள்ள மறுத்துவிட்டாள், அது அவளுடைய பகற்கனவைக் குறிக்கின்றது.

"குழந்தைகள் தான் மிகுதியாகப் பகற்கனவு காண்பவர்கள்; அவர்களுடைய பகற்கனவுகளை ஆராய்ந்து பார்த்தால் அவை பெரும்பாலும் வாழ்க்கையில் அடையப்பெருத ஆசைகளை நிறைவேற்றுவனவாக இருக்கும்" என்று மெக்டூகல் எழுதுகிருர்.

பொதுவாகக் கூறினல், பத்தாவது வயதில் துணிகரச் செயல்களைப் பற்றிய பகற்கனவுகள் உண்டாகின்றன. பலருடன் கூடி வீரச் செயல்கள் செய்வது போலவும், அவற்றிலெல்லாம் தானே முக்கியமாக இருப்பது போலவும், தனது தோழர்களுக்குத் தானே தலைவனுக விளங்குவதுபோலவும் காட்சிகள் தோன்றுகின்றன. காளைப் பருவத்திலே பிறக்கும் பகற்கனவுகள் பலதிறத்தனவாகும். அப்பொழுது அதில் காதலுணர்ச்சியும் இயல்பாகவே கலந்திருக்கும்.

இவ்வாருக ஒவ்வொரு பருவத்திலும் அதற்கேற்றவாறு பகற் கனவுகள் உண்டாகின்றன. சிறுவர்களின் பகற் கனவுகள் பொதுவாகக் குற்றமற்றவைகளாக இருக்கும். ஏனெனில் அந்தப் பருவத்தில் அடக்கியொடுக்க வேண்டிய இழிந்த எண்ணங்கள் உண்டாகக் காரணமில்லை.

கனவுகளை ஆராய்வது போலவே பகற்கனவுகளையும் ஆராய்ந்தால் ஒருவனுடைய மன நிலைமையை அறிந்துகொள்ள முடியும். பகற்கனவிலே அவனுடைய ஆசைகளும் எண்ணங்களும் பொதுவாக நேரிடையாகவே வெளிப்படுகின்றன. அந்த வகையில் அவ

னுடைய மன நிலையைக் காண இது கனவைவிடச் சிறப்பாகப் பயன்படும். ஆனால் பகற்கனவை வெளிப்படையாகக் கூறும்படி செய்வதுதான் பெரும்பாலும் இயலாது. அது இழிந்ததாக இருக்குமானால் வெளியில் கூறப் பொதுவாக யாரும் விரும்பமாட்டார்கள்.

கனவின் பொருளை அறிந்துகொள்ளவிருப்பக் கருத்தியைபு முறையைக் கையாளுவதைப் பற்றி முன்பே தெரிந்துகொண்டோம். அந்த ஆராய்ச்சியோடு ஒருவன் காணும் பகற்கனவையும் சேர்த்துநோக்கினால் அவனுடைய மன நிலைமையை நன்றாக உணர முடியும்.

இடி

ஒரு நாள் இரவு எட்டு மணியிருக்கும். புதிதாக வந்த நண்பரொருவரோடு வெளித் திண்ணையிலமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தேன். சந்தித்துப் பல ஆண்டுகளாகிவிட்டபடியால் அவர் குதூகலத்தோடு தமது வாழ்க்கையைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந் தார். அவர் முகத்திலே மகிழ்ச்சி பொங்கிக்கொண் டிருந்தது.

அது கார் காலம். வானத்திற்குப் போர்வையிட் டது போல எங்கும் கருமேகக் கூட்டம். திடீரென்று இடியின் பெருமுழக்கம் கேட்டது. மின்னல் பளிச் சிட்டது. அது வரைக்கும் சிரித்துப் பேசிக்கொண் டிருந்த நண்பர் இடிக் குரலைக் கேட்டு அலறி நடுங்க லானார். இடியோசை கேட்கும் ஒவ்வொரு தடவை யும் அவர் துள்ளியெழுந்தார். மருண்டு மருண்டு அச்சத்தோடு சுற்றுமுற்றும் பார்த்தார். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இடியிடிப்பதைக் கண்டு அவர் இப்படி அஞ்சுவானேன்; கார்காலத்திலே இடியும் மின்னலும் இயல்புதானே என்று நான் உள்ளுக்குள் ளேயே எண்ணிக் கொண்டிருந்தேன்.

"வீட்டிற்குள்ளே போய்விடலாமா?" என்று அந்த நண்பர் விரைவாகக் கேட்டுக்கொண்டே எழுந்து நடந்தார்.

வீட்டிற்குள்ளே சென்று அமர்ந்த பிறகும் அவ ருடைய பேரச்சம் தணியவில்லை. இடிக்குரல் கேட்கும் போதெல்லாம் அவர் திடுக்கிட்டெழுந்தார்.

"கார்காலத்திலே எங்கள் ஊரில் இப்படி இடியிடிப்பதுண்டு. ஆனால் எங்கேயாவது இடி விழுந்ததாகவே காணோம். சும்மா வெறும் உருட்டலும் முழக்கமும்தான்" என்று மெதுவாக நான் கூறினேன்.

என் பேச்சு அவருடைய உள்ளத்திலே அமைதியை உண்டாக்கவில்லை, வீண் அச்சங்கொண்டு அவர் தொல்லைபட்டுக் கொண்டிருந்தார். "எனக்கென்னவோ இடியிடிப்பதைக் கேட்டால் ஒரே பயமாக இருக்கிறது" என்று அவர் நெற்றி வியர்வையைத் துடைத்துக்கொண்டே கூறினார்.

அந்த அச்சத்திற்கு அவரால் ஒரு காரணமும் கூற முடியவில்லை; "என்னவோ அச்சமாக இருக்கிறது" என்று சொல்லிவிட்டுச் சுருண்டு படுத்துக்கொண்டார். விரிப்பை எடுத்துப் போர்த்துக் கொள்ளவும் செய்தார்.

"இப்படி இழுத்துப் போர்த்துக்கொண்டால் இடி விழாதோ?" என்று கேலியாகக் கேட்டேன். அவர் பதில் பேசவேயில்லை.

இவரைப் போல வீண் அச்சங்கொள்கின்றவர்கள் பலருண்டு. சிலருக்குப் பூனையைக் கண்டால் ஒரே நடுக்கம். சிலருக்கு இருட்டைக் கண்டால் ஒரே நடுக்கம்; கோழியைக் கண்டு அலறி ஓடுபவர்களும் உண்டு. ஏன் அவ்வாறு அச்சங் கொள்ளுகிறார்கள் என்று கேட்டால் காரணம் அவர்களுக்கே தெரியாது. சொல்லமுடியாத பேரச்சம் ஏனோ உண்டாகிறது.

சிங்கத்தையோ புலியையோ கண்டால் பொதுவாக அனைவருக்கும் அச்சம் உண்டாகும். அவை கொடியவை என்ற காரணத்தினால் அஞ்சுகிறோம். அதை நாம் புரிந்துகொள்ள முடியும். அது தற்காப்பு உணர்ச்சியால் பிறக்கிறது. ஆனால், கோழியைக் கண்

டாலும் மின்னலைக் கண்டாலும் உண்டாகின்ற அச்சந்தான், விந்தையாக இருக்கிறது. இருட்டிலே தற்காப்புணர்ச்சியினால் ஓரளவு எச்சரிக்கையுடன் செல்ல வேண்டும் என்ற எண்ணம் உண்டாக வேண்டுமே ஒழிய, பேரச்சம் ஏற்பட வேண்டியதில்லை. இருட்டிலே சாதாரணமாகப் பலர் நடமாடுகின்றார்கள். அதனால் தீங்கு ஏற்படுவதில்லை. அவ்வாறு சாதாரணமாக அச்சமடைய வேண்டாதவற்றைக் கண்டு காரணமின்றி ஏற்படும் பேரச்சத்தை ஒரு வகையான கிலி (Phobia) என்று உளவியலறிஞர்கள் கூறுகிறார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன், சிறு வயதில் ஏற்பட்ட ஆழ்ந்த உள்ளக் கிளர்ச்சிதான் இதுபோன்ற கிலிக்குக் காரணமாக இருக்கிறது. அம் மனக்கிளர்ச்சியும், அது எதனால் உண்டானதென்பதும் மறந்து போய்விடும். ஆனால், அதன் விளைவாகத் தோன்றிய கிலிமட்டும் நிலைத்திருக்கும். என்னுடன் கல்லூரியில் படித்த ஒரு மாணவன் காற்று சற்று வேகமாக அடித்தால் கிலியடைவான். அதற்குக் காரணம் அவன் சிறுவனாக இருந்தபொழுது தனது சொந்த ஊராகிய நெல்லூரில் வீசிய பெரும் புயலையும் அதன் காரணமாக விளைந்த உயிர்ச் சேதத்தையும் கண்டு அஞ்சியதே என்று பின்னால் தெரிந்துகொண்டேன். இதுபோலவே ஒவ்வொரு வகையான கிலிக்கும் ஏதாவது காரணமிருக்கும். இயல்பாக எழுகின்ற ஆசைகள் நிறைவேறாமல் போவதாலும், அடிப்படையான உள்ளக் கிளர்ச்சிகளிலே தடுமாற்ற மேற்படுவதாலும் கிலி பிறப்பதுண்டு,

என்னிடம் படித்த மாணவன் ஒருவனுக்குச் சுமார் 12 வயதிருக்கும். அவன் இருட்டறைக்குள் செல்லவே

மாட்டான். அவனைக் கேலி செய்யவேண்டுமெனச் சில மாணவர்கள் ஒரு நாள் சூழ்ச்சி செய்தார்கள். ஓர் அறைக்குள்ளே போய் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துவரும்படி அவனை ஏவினார்கள். அவன் உள்ளே சென்றதும் மின்சார விளக்கைச் சட்டென்று அணைத்து விட்டார்கள். அவன் வீரிட்டு அலறிக்கொண்டு வெளியே ஓடிவந்தான். எல்லாருக்கும் அது விளை யாட்டாக இருந்தாலும் அவனுக்கு அது ஒரு பெரிய கிலியாக இருந்தது. பிறகு அவனை நிதானமாக ஆராய்ந்து பார்த்ததில் குழந்தையாக இருந்தபோது இருட்டறையில் பேயிருப்பதாக யாரோ கூறி அச்ச முறுத்தியதுதான் அந்தக் கிலிக்குக் காரணமென்று தெரியவந்தது.

பிராணிகளைக் கண்டு ஏற்படும் கிலிக்கு சிக்மண்ட் பிராய்டு வேறொரு காரணமும் கூறுகிறார். பெற்றோ ரிடம் குழந்தைகளுக்குண்டாகும் அச்ச உணர்ச்சியா னது விலங்குகளிடம் அக் குழந்தைகளுக்குக் கிலியாக மாறுகிறதாம். "விலங்குகளைக் கண்டு பிறக்கும் கிலி களில் பலவற்றை ஆராய்ந்தபோது அவை பெற்றோ ரிடமுள்ள அச்சத்தால் பிறந்தவை எனத் தெரிய வந்தது" என அவர் கூறுகிறார்.

பொதுவாக நோக்கும்போது நிலைமைக்கும் அனு பவத்திற்கும் ஏற்றவாறு பலவகையான கிலிகள் பிறக் கின்றன. மூடப்பட்டுள்ள இடத்தைக் கண்டு கிலி, திறந்த வெளியில் கிலி, செங்குத்தான இடக் கிலி, நெருப்புக் கிலி, இருட்டுக் கிலி, தூசு பட்டு நோய் பிடிக்கும் எனக் கிலி, பூனைக் கிலி, அச்சத்தைப்பற்றிய கிலி என்பன போன்ற பல கிலிகளால் மக்களில் பலர் வருந்துவதை நாம் காணலாம். பரபரப்பும் மன அதிர்ச்சிகளும் நிறைந்த இக்கால வாழ்க்கையிலே பலர்

பலவகைப்பட்ட கிலிகளால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர்.

அவ்வாறு கிலி பிடித்து இடர்ப்படுவது முட்டாள்தனம் என்று கூறுவதாலும் அக் கிலிக்கு ஒரு காரணமும் இல்லையென்று எடுத்துக் காட்டுவதாலும் அதைப் போக்கிவிட முடியாது. இருட்டறையைக் கண்டு கிலி அடைபவனை அதற்குள்ளேயே வலுக்கட்டாயமாக இருக்கச் செய்து அதில் ஒரு தீங்கும் இல்லையெனக் காண்பித்து அக் கிலியைப் போக்கலாமெனச் சிலர் முயல்கின்றனர். அவ்வாறு செய்வதால் கிலி மறைவதே இல்லை.

அக் கிலியைப் போக்குவதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு. பொதுவாகக் கிலி பிடிப்பதற்கு இளமையில் நடந்த ஏதாவது ஒரு நிகழ்ச்சியோ அனுபவமோ காரணமாக இருக்குமென்று முன்பே கூறினேன். அந் நிகழ்ச்சியையும் நிலைமையையும், அனுபவத்தையும் மறுபடியும் நினைவிற்குக் கொண்டு வரும்படி செய்ய வேண்டும். மறைமனத்திலே அழுந்திக் கிடக்கும் அனுபவம் வாய்ந்த உளவியலறிஞரின் உதவியால் அவற்றை நனவு மனத்திற்குக் கொண்டுவந்து விடலாம். அவ்வாறு கொண்டு வந்து அன்றடைந்த உள்ளக் கிளர்ச்சியைத் திரும்பவும் உணரும்படி செய்து விட்டால் அக் கிலி தானாகவே நீங்கிவிடும். கிலியென்பது காரணமின்றி ஏற்படும் ஒரு பேரச்சம். பொதுவாக அது ஒரு ஆழ்ந்த உள்ளக் கிளர்ச்சியால் உண்டாவது. அதைப் போக்குவதற்கு மனநோய் சிகிச்சை வல்லுனர்களே தகுதி வாய்ந்தவர்கள்.

கற்றுக் கொடுத்தது யார்?

இப்பொழுதுதான் பிறந்த கன்றுக்குட்டி மெதுவாக முயன்று எழுந்து நிற்கிறது. தாய்ப் பசுவின் பால் சுரக்கும் மடியருகே சென்று பால் குடிக்கத் தொடங்குகிறது. மடியிலே வாயை வைத்துப் பால் குடிக்க அதற்கு யார் கற்றுக் கொடுத்தார்கள்?

வாத்துக் குஞ்சு முட்டையினின்றும் வெளி வருகிறது; தண்ணீரைக் கண்டதும் அதில் உடனே இறங்கி நீந்துகிறது. அதற்கு யார் நீந்தக் கற்றுக் கொடுத்தார்கள்?

குளவி ஒன்று பருவம் அடையும்போது கூடு கட்டத் தொடங்குகிறது. அதில் பக்கத்திலே முட்டையிடுகிறது. புழுவொன்றைப் பிடித்து வந்து கூட்டிலே வைக்கிறது. புழுவைத் தன் கொடுக்கால் கொட்டி அது நினைவற்று ஆனால் உயிரோடு கிடக்கும்படி செய்கிறது. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவந்த பிறகு அவற்றிற்கு உணவாகப் பக்கத்திலேயே இப்படிப் புழுவை வைத்துக் கூட்டை மூடிவிட்டு வெளியேபோய் இறந்துவிடுகிறது. அந்தக் குளவிக் குஞ்சுகள் பெரிதாகும்போது அவைகளும் இதே போன்று செய்கின்றன. அவற்றிற்கு யார் கற்றுக் கொடுத்தார்கள்? கற்றுக் கொடுக்கத் தாய்க் குளவிகூட இல்லையே? பிறகு எப்படி அந்தக் குஞ்சுகளும் தாய் செய்ததுபோலவே செயல் புரிகின்றன?

இவ்வாறு கற்றுத் தெரிந்துகொள்ளாத செயல்களைச் செய்யும்படி தூண்டும் பிறவி ஆற்றல் ஒன்றிருக்

கிறது. அதற்குத்தான் இயல்பூக்கம் (Instinct) என்று பெயர் வழங்குகின்றது. உணவு தேடுக்கம், கூடி வாழுக்கம், இடம் பெயருக்கம், கலவியூக்கம் என்றிப் படிப் பலஇயல்பூக்கங்கள் இருப்பதாக மெக்டூகல் போன்ற உளவியலறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். ஒவ்வொரு இயல்பூக்கத்திற்கும் ஏற்றவாறு உள்ளக் கிளர்ச்சிகளும் உண்டு என்று கூறுவர்.

இயல்பூக்கத்தைப்பற்றி மாறுபட்ட கருத்துக் களுண்டு. இயல்பூக்கம் என்பதே இல்லை என்பாரும் உளர். இயல்பூக்கம் இருந்தாலும் பூச்சிகள் பறவைகள் விலங்குகள் முதலியவற்றிடம் அதன் ஆதிக்கத்தைக் காணலாம்; மனிதனிடத்தில் அதற்கு ஆதிக்கமில்லை என்று கூறுகிறவர்களும் இருக்கிறார்கள்.

இயல்பூக்கமே இல்லையென்று மறுக்கிறவர்கள் தமது ஆராய்ச்சிகளினால் இயல்பூக்கச் செயலாக எண்ணிவந்த சில செயல்களின் காரணத்தைக் கண்டு பிடித்து அச்செயல்கள் சாதாரணமான அனுபவத்தால் அல்லது அறிவினால் ஏற்பட்ட நடத்தை என்று கூறு கிறார்கள்.

கும்மென்று இருண்டு கிடக்கும் குகையினுள்ளே வெளவால் தாராளமாகப் பறந்து வட்டமிடுகிறது. நீட்டிக்கொண்டிருக்கும் கரடுமுரடான கற்களின் மேலே அது மோதிக்கொள்வதே இல்லை. ஒருவேளை இருட் டிலே அதற்குக் கண் நன்றாகத் தெரியுமோ என்று சந்தேகித்து அதன் கண்களை மூடிக் கட்டிப் பறக்க விட்டார்கள். அப்பொழுதும் அது எதன் மேலும் மோதிக்கொள்ளாமல் இருண்ட குகைக்குள்ளே தாராளமாக வட்டமிட்டது! இதை இயல்பூக்கச் செயல் என்று முதலில் நம்பிக்கொண்டிருந்தார்கள்.

1940-ஆம் ஆண்டிலே டொனல்டு கிரிப்பின், ராபர்ட் கலம்பாஸ் என்ற இரண்டு உயிரியலறிஞர்கள் இந்த அற்புதச் செயலின் உண்மையைக் கண்டு பிடித்தார்கள். கண்களை மூடிவிட்டாலும் இருட்டறையிலே வெளவால் எதன் மேலும் மோதிக்கொள்ளாமல் பறக்கிறது. ஆனால் அதன் காதுகளை மூடிவிட்டால் கண்கள் திறந்திருந்தாலும் அது இருட்டில் பறக்கும்போது பல இடங்களில் மோதிக்கொள்கிறது! இந்த ஆராய்ச்சியிலிருந்து ஓர் உண்மை தெரிய வந்தது. வெளவாலுக்கு நுட்பமான ஒலியைக் கேட்டு அறிந்துகொள்ளும் ஆற்றல் உண்டு. அதனால் அது பறக்கும்போது உண்டாகும் நுட்ப ஒலிகள் எதிரிலுள்ள தடைகளின் மேல் பட்டுத் திரும்பிப் பிரதிபலித்து வரும்போது அவற்றைச் சற்றுத் தொலைவிலேயே உணர்ந்து தடைகளை விட்டு விலகித் தப்பிச் செல்கின்றது. இங்கே இயல்பூக்கச் செயல் ஒன்றும் இல்லை என்று அவர்கள் கண்டார்கள்.

ஆனால் எல்லா இயல்பூக்கங்களையும் இவ்வாறு ஆராய்ந்து அவற்றிற்குக் காரணங் கூறுவது கடினம். அத்தனை பெரிய ஆராய்ச்சியிலே நாம் ஈடுபட வேண்டியதுமில்லை. இயல்பூக்கங்களைப் பற்றிப் பொதுவாகத் தெரிந்துகொள்வதோடு அவை மனிதனுடைய செயல்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும் தெரிந்துகொண்டால் போதும்.

இயல்பூக்கம் என்பது முன் அனுபவம் இல்லாமல் இயல்பாகவே செய்யப்படும் காரியமாகும். கன்று பாலூட்ட முன்பே கற்றுக்கொள்ளவில்லை. இயல்பூக்கமாகக் கன்று அதைச் செய்கிறது. யாரும் கற்றுக் கொடுக்காமல் குளவி கூடு கட்டி அதில் புழுவை வைத்து முட்டையிடுகின்றது. இவ்வாறு ஒரு ப்ராணியின்

நலத்திற்கும், அதன் இனத்தை அழிந்து போகாமல் பாதுகாப்பதற்கும் இயல்பூக்கச் செயல் உதவுகிறது. ஒரே இனத்தைச் சேர்ந்த எல்லாப் பிராணிகளும் ஒரே வகையான இயல்பூக்கச் செயல்களைக் கொண்டிருக்கின்றன. தூக்கணங்குருவிகளில் ஒன்று கூடு கட்டுவது போலவே மற்றத் தூக்கணங்குருவிகளும் கூடு கட்டுகின்றன. இயல்பூக்கத்தின் மற்றொரு தன்மை என்னவென்றால் அனுபவத்தால் பழக்கத்திற்கு வரும் செயல்களுக்கு அது முதலில் தூண்டுகோலாக இருக்கிறது.

விலங்குகள் இயல்பூக்க நிலையிலே பல செயல்களைச் செய்கின்றன. மனிதனும் குழந்தைப் பருவத்தில் அவ்வாறே செய்கிறான். ஆனால் அவன் முதிர்ச்சியடைய அடைய அறிவாலும் அனுபவத்தாலும் இயல்பூக்கச் செயல்கள் மாறுதலடைகின்றன. மனிதனுடைய சிந்தனையால் மாறுதலடையாத இயல்பூக்கச் செயல்களும் குறைந்துவிடும்.

கலவியூக்கம் மிக வலிமையுடையதுதான். ஆனால் மனிதன் விலங்குபோல நடந்துகொள்ளலாமா? அந்த இயல்பூக்கம் பண்புள்ள மனிதனிடத்தே தொழிற்படும் போது அதிலே ஒரு கட்டுப்பாடு வளர்ந்துள்ளது. அதை அவன் மீறினால் சமூகம் அவனைப் போற்றாது.

இயல்பூக்கங்களை ஒடுக்கி அழிக்க முயல்வது வெற்றி பெறாது. ஆனால் விரும்பத்தகாத இயல்பூக்கங்களை வேறு நல்ல துறைகளில் செல்லும்படியாக மாற்றி விடலாம்.

எப்படி மாற்றுவது? அது முடியுமா? முடியும். போரிடும் இயல்பூக்கம் மனித இனத்துக்கு உண்டு என்பார்கள். அந்த இயல்பூக்கத்தால் மிகுதியாக உந்தப்பட்டு ஒருவன் தனது தோழர்களுடனேயே

சண்டையிடலாம். அதை மாற்றி அவன் தன் நாட்டிற்காகப் போரிடும்படி செய்யலாம். அல்லது மனித இனத்தைப் பீடிக்கும் கொசு போன்றவற்றை ஒழிக்க அவன் முன் வரலாம்.

இவ்வாறு இயல்பூக்கத்தை மாற்றிவிடுவதற்கு உயர்மடை மாற்றம் (Sublimation) என்று பெயர்.

இயல்பூக்கத்தோடு தொடர்புடைய உள்ளக் கிளர்ச்சிகளைப் பற்றி அடுத்த பகுதியில் விவரிக்கும் போது இந்த உயர் மடைமாற்றத்தைப் பற்றி மேலும் ஆராய்வோம்.

உள்ளக் கிளர்ச்சி

மனம் என்பது மாயமாக இருந்தாலும் அதில் எத்தனை எத்தனை குமுறல்கள், கொந்தளிப்புகள், கிளர்ச்சிகள் தோன்றுகின்றன! சினம் பிறக்கிறது, அச்சம் உண்டாகிறது—இப்படி எத்தனை விதமான அனுபவங்கள்! சினம், அச்சம், காதல், காமம், துக்கம், வெறுப்பு முதலியவைகளுக்கு உள்ளக் கிளர்ச்சிகள் என்று பெயர்.

குழந்தை அழுகிறது; அடுத்த விநாடியிலே மகிழ்ச்சியால் சிரிக்கிறது. குழந்தைகள் தங்கள் உள்ளக் கிளர்ச்சிகளை உடனே வெளிப்படுத்திவிடுகின்றன. விரைவிலே அவை மறைந்தும் போகின்றன.

கண்ணம்மா ஓடிவருகிறாள். "அம்மா, அடுத்த வீட்டுக் கிட்டுவுக்கு மிட்டாய் கொடுக்க வேண்டாம்" என்று அவன் மேலே வெறுப்போடு பேசுகிறாள். ஆனால் சிறிது நேரத்திற்குள்ளே இரண்டு பேரும் சேர்ந்து விளையாடத் தொடங்கி விடுகிறார்கள். கண்ணம்மா தன்னிடமிருந்த மிட்டாயை அவனுக்குக் கொடுக்கிறாள். கிட்டுவின் மேல் ஏற்பட்டிருந்த வெறுப்பை அவள் மறந்தே விடுகிறாள்.

இந்தக் குழந்தைகளைப் போல் உலக மக்கள் இருக்கக் கூடாதா என்றுகூடச் சொல்லத் தோன்று கிறது.

ஆனால் மனிதன் தனது உள்ளக் கிளர்ச்சிகள் அனைத்தையும் குழந்தைகளைப்போலத் திடீர் திடீ

றென்று உடனே வெளிப்படுத்தலாமா? சமூக வாழ்க்கையிலே அது முறையாகுமா?

வேகம் வேகமாக ஒருவன் ரெயில் வண்டிக்குள்ளே நுழைகிறுன். செருப்புக் காலால் உனது கால் விரலை நன்ருக மிதித்துவிடுகிறுன். வலி பொறுக்க முடியாமல் உனக்குக் கோபம் பொங்கி வருகிறது. வந்தவன் கன்னத்திலே அறையலாம் என்றுகூடத் தோன்றுகிறது. உடனே அடித்து விடலாமா? அல்லது வாயில் வந்தபடி யெல்லாம் அவனைப் பேசத்தான் செய்யலாமா?

ஒரு நாடு மற்ெெரு நாட்டிற்கு ஏதோ ஒரு தவறு செய்துவிடுகிறது. அதற்காக உடனே போர் தொடுத்து விடலாமா?

காமம் குரோதம் பொருமை இப்படி எத்தனையோ உள்ளக் கிளர்ச்சிகள் இருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் ஆட்சி அதிகாரம் கிடைத்துவிட்டால் சமூக வாழ்க்கையே நிலைகுலைந்து போகும்.

மனிதன் தனது உள்ளக் கிளர்ச்சிகள் பலவற்றைக் கட்டுப்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவன் விலங்குகளைப்போல நடக்க முடியாது. சில விலங்குகள்கூட ஓரளவு தமது உள்ளக் கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்தப் பழகிக் கொள்ளுகின்றன என்று தோன்றுகிறது. மனிதன் அவற்றைவிடத் தாழ்வாக நடக்க முடியாது. அவனுடைய நாகரிகம், அவனுடைய பண்பாடு அவற்றின் பெருமையெல்லாம் அழியாதிருக்க வேண்டுமானுல், சமூக வாழ்க்கை நிலைக்க வேண்டுமானுல் மனிதன் தனது இழிந்த கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும்.

இயல்பூக்கங்களை அடக்கி அழித்துவிட முடியாது என்று கண்டோம். இயல்பூக்கங்களுடன் சேர்ந்து பல உள்ளக் கிளர்ச்சிகள் தோன்றுகின்றன. ஆகவே, உள்ளக் கிளர்ச்சிகளையும் அடியோடு அழித்துவிட முடியாது. அப்படி முயலும்போதுதான் மறைமனக் கோளாறுகள் பல உண்டாகின்றன என்று கூறுகிறார்கள். ஆனல், இழிந்த உள்ளக் கிளர்ச்சிகளையும், இயல்பூக்கங்களையும் வேறு நல்லவகையில் திருப்பிவிட்டு உயர் மடை மாற்றம் செய்யலாம். காம இச்சையை மாற்ற முயலும் ஒருவன் அவன் பக்தனுக இருந்தால் அதைக் கடவுளிடத்தே உயர்ந்த பக்தியாக மாறச் செய்கிருன்; அல்லது பிராணிகளிடத்தே அளவு கடந்த அன்பாக மாற்றி அவற்றின் சேவையிலே ஈடுபடுகிருன். அவன் கலைஞனுக இருந்தால் அழகிய கலைப்படைப்பின் மூலம் அதை மாற்றுகிருன்.

இச்சைகள் நிறைவேருத காலத்தில் இப்படிப் பட்ட மடைமாற்றமும் இல்லாவிட்டால்தான் மனச் கோளாறுகள் ஏற்பட அவை காரணமாகின்றன.

மறிவினையாக மனிதன் சில செயல்களைப் புரிகிருன். மறிவினை (Reflex action) என்பது ஒரு புதிய சொல். ஆனல் அதைப் புரிந்துகொள்வது எளிது.

ரெயிலில் பயணம் செய்யும்போது கரித் தூளொன்று கண்ணிலே விழுகிறது. கண் உடனே மூடிக்கொள்கிறது; கண்ணீர் மளமளவென்று வருகிறது; அப்படி வந்து கண்ணுக்கு ஏற்பட்டுள்ள தொந்தரவைத் தவிர்க்க முயல்கிறது.

கண் மூடுவதும், கண்ணீர் பெருகுவதும் நாம் நினைத்துப் பார்த்துச் செய்த செயல்கள் அல்ல. அவை தாமாகவே நிகழ்கின்றன, அப்படிப்பட்ட செயல்

களுக்குத்தான் மறிவினைகள் என்று பெயர். தும்முதல், குறட்டை விடுதல் போன்ற செயல்களெல்லாம் மறிவினைகளே.

இயல்பூக்கத்தாலும், உள்ளக் கிளர்ச்சியாலும் மனிதன் பல செயல்களில் ஈடுபடுகின்றான். அறிவைக் கொண்டு எண்ணித் துணிந்து பல செயல்கள் புரிகின்றான். பழக்கத்தின் வலிமையால் சில செயல்களைச் சிந்தனையின் தூண்டுதலில்லாது இயல்பாகவே செய்யவும் கற்றுக்கொள்ளுகிறான். "காலையில் படுக்கையிலிருந்து எழுந்தது முதல் இரவில் படுக்கப் போகும் வரை செய்யும் பல செயல்கள் பழக்கத்தின் பயனாக இயல்பாகவே நடைபெறுகின்றன. உண்பது, ஆடை அணிவது, நண்பர்களை வரவேற்றுப் பேசுவது—எல்லாம் பல நாட்களில் ஏற்பட்ட பழக்கத்தினால் மனத்தின் தூண்டுதலில்லாமல் ஒழுங்காக அமைகின்றன" என்று வில்லியம் ஜேம்ஸ் என்ற உளவியலறிஞர் கூறுகிறார்.

பழக்கத்தினால் செய்யும் வினைக்கும் மறிவினைக்கும் வேறுபாடு உண்டு. பழக்கத்தினால் செய்யும் வினையை முதலில் தொடங்கும்போது மனத்தின் தூண்டுதலால் அதன் துணிவுப்படி செய்தோம். பிறகு பல தடவை அவ்வாறே எண்ணிச் செய்ததால் அது இயல்பான பழக்கமாக நாளடைவில் ஆகிவிடுகிறது. அந்த நிலையில் மனத்தின் தூண்டுதல் தேவையில்லையென்றே கூறலாம். இவ்வாறு பல எளிய செயல்களைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்துவிடுவதால் மனத்திற்கு வேறு உயர்ந்த செயல்களைப்பற்றி எண்ணித் துணிய ஒழிவும் ஆற்றலும் கிடைக்கும்.

பழக்கத்தின் வலிமையாலே இயல்பாகவே பல செயல்களைச் செய்துவிடலாம் என்பதனால் பழக்கத்தை

உண்டுபண்ணிக் கொள்வதில் மிகுந்த எச்சரிக்கை வேண்டும். நல்ல பழக்கங்களைத் தொடக்கத்திலிருந்தே ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால் நமது பழக்கங்களே நமக்குத் தீமையாக முடிந்துவிடும்.

ஆகவே, மனிதன் இயல்பூக்கத்தாலும், உள்ளக் கிளர்ச்சியாலும், பழக்கத்தாலும், எண்ணித் துணிவதாலும் மிகப் பல செயல்களைப் புரிகிறான் என்று ஏற்படுகிறது. மறிவினையாகவும் சிலவற்றைச் செய்கிறான். சில செயல்கள் பழக்கத்தின் வலிமையால் மறிவினை போலவே அமைந்துவிடுகின்றன. ஓடும்போது கால் இடறி ஒருவன் கீழே விழுகிறான். அவனுடைய மார்புக் கூடோ, தலையோ தரையில் மோதாதபடி கை முதலில் தரையில் ஊன்றித் தடுத்துக்கொள்ளுகிறது. கையைத் தரையில் ஊன்றி மற்ற உறுப்புக்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கையை நாம் ஊன்றுவதில்லை. இளம் வயதிலிருந்து ஏற்பட்ட பழக்கத்தின் வலிமையால் மறிவினை போலவே இது நடைபெறுகிறது. இதை 'அரை மறிவினை' என்று சிலர் சொல்வார்கள்.

மேலே கூறியவற்றிலிருந்து மனிதனுடைய செயல்களுக்கு அவனுடைய மனம் எந்த அளவுக்குக் காரணமாக இருக்கிறதென்று தெரிகிறது. மறிவினைச் செயல்களைக்கூட மனத்தின் சிந்தனை வலிமையால் ஓரளவு மாற்றியமைக்க முடியும். மனத்தின் வலிமையால் நல்ல பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம். இயல்பூக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் உயர்மடைமாற்றம் பெற்றுச் சிறப்பாக அமையுமாறு செய்யலாம். அவ்வாறு செய்வதால் மனிதனுடைய வாழ்க்கை உயர்வடைகின்றது.

ஒட்டம் முன்னதா, அச்சம் முன்னதா?

உள்ளக் கிளர்ச்சிகள் எத்தனை என்பது பற்றிச் சில ஆண்டுகளுக்கு முன்னுலெல்லாம் பெரிய பெரிய பட்டியல்கள் வெளியிடுவதுண்டு. ஒவ்வொரு கிளர்ச்சியின் தன்மையென்ன, அதனோடு தொடர்புள்ள இயல் பூக்கம் என்ன, அது பிறப்பிலிருந்தே உண்டானதா அல்லது சூழ்நிலையால் தோன்றியதா என்று இப்படியெல்லாம் ஆராய்ச்சிகள் நடைபெறும்.

நடத்தைக் கொள்கை உளவியலைத் தோற்றுவித்த வாட்ஸன் என்பவர் பச்சைக் குழந்தைகளைக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தியதன் பயனாக மனிதனுக்கு அச்சம், இனம், அன்பு என்ற மூன்று உள்ளக் கிளர்ச்சிகள்தான் இயல்பாகவே அமைந்திருக்கின்றன என்று கூறினார். இவர் கூறியதைப் பொதுவாக எல்லாரும் ஆமோதித்தார்கள்.

ஆனால் அண்மையிலே சில உளவியலறிஞர்கள் செய்த ஆராய்ச்சியின் விளைவாக மேலே கூறியவாறு குழந்தைகளின் உள்ளக் கிளர்ச்சிகள் தெளிவாகவும் தனித்தனியாகவும் இருக்கின்றனவா என்பதில் ஐயம் தோன்றி இருக்கிறது.

குழந்தைப் பருவத்திலேயே உள்ளக் கிளர்ச்சிகள் இருக்கின்றன என்பதை மட்டும் நாம் தெரிந்து கொண்டால் போதும். அதற்கு மேற்பட்ட ஆராய்ச்சிகளை உளவியல் அறிஞர்களுக்கு விட்டுவிடலாம்.

உள்ளக் கிளர்ச்சியைப் பற்றி இன்னும் ஒரு வேடிக்கையான விவாதம் உண்டு. உள்ளக் கிளர்ச்சி

முதலில் தோன்றி அதன் விளைவாகச் செயல் நடை பெறுகிறதா அல்லது செயல் நடைபெற்று அதன் விளைவாக உள்ளக் கிளர்ச்சி தோன்றுகிறதா என்பதிலே பெரிய விவாதம் ஏற்பட்டுவிட்டது.

மனத்திலே துயரம் உண்டாகிறது; அதனால் ஒருவன் அழுகிறான் என்று நாம் சொல்லுகிறோம். அது தான் உண்மை என்று நம்பிக்கொண்டிருக்கிறோம். ஆனால் வில்லியம் ஜேம்ஸ் என்ற உளவியலறிஞரும், கார்ல் லாங் என்ற உடலியல் வல்லுநரும் நமது நம்பிக்கைக்கு முற்றிலும் மாறான ஒரு கருத்தைப் புதிதாக வெளியிட்டார்கள். "முதலில் மனிதன் அழுகிறான்; பிறகுதான் துயரம் என்ற உள்ளக் கிளர்ச்சி தோன்று கிறது" என்று அவர்கள் கூறினார்கள். அதாவது உடலிலே மாறுதல்கள் ஏற்பட்ட பிறகே அவற்றிற் கேற்ற உள்ளக் கிளர்ச்சிகள் எழுகின்றன என்று அவர்கள் வாதித்தார்கள்.

இந்தக் கொள்கை உண்மையென்றும் உண்மை யன்று என்றும் நிலைநாட்ட எத்தனையோ சோதனைகள் நடந்திருக்கின்றன.

"நீ முதலில் ஓட்டம் பிடிக்கிறாய்; பிறகுதான் அச்சம் தோன்றுகிறது" என்று கூறினால் சிரிக்கத்தான் தோன்றும். ஆனால் அவ்வளவு எளிதாக இக் கொள் கையை ஒதுக்கித் தள்ளிவிட இதுவரையிலும் முடிய வில்லை.

ஷெரிங்டன், கானன் என்ற இருவர் தாங்கள் செய்த ஆராய்ச்சிகளைக் கொண்டு இக்கொள்கை தவறானது என்று காட்டச் சில ஆண்டுகளுக்கு முன்னே முயன்றார்கள். ஆனால் இவர்களுடைய ஆராய்ச்சிகளைக் கொண்டு இக் கொள்கையை முடிவாக மறுக்க முடி

யாது என்று ஆங்கெல் என்ற மற்ருெரு அறிஞர் தக்க காரணங்களுடன் விளக்கியிருக்கிருர்.

இந்த விவாதத்தின் முடிவு எப்படியாளுலும் உள்ளக் கிளர்ச்சிகளைப் பற்றிப் பொதுவாக நாம் அறிந்துகொள்ள வேண்டிய உண்மைகளை அதுபெரிதும் மாற்றிவிடாது.

நமது உடம்பின் வெவ்வேறு பகுதிகளில் வெவ் வேறு வகையான சுரப்பிகள் (Glands) இருக்கின்றன. வாயில் உமிழ்நீர் சுரப்பது ஒருவகைச் சுரப்பியால் தான். வளர்ச்சிக்கு உதவ ஒருவகைச் சுரப்பி இருக் கிறது. இப்படிப் பல சுரப்பிகள் இருந்து பல வேலை களைச் செய்கின்றன.

சுரப்பிகளிலே நாளமில்லாத சுரப்பிகள் சிலஉண்டு. அவை தம்மிடத்துச் சுரக்கும் சுரப்புப் பொருளை நேராக இரத்தத்தில் கலக்கும்படி செய்கின்றன. அவைகள் உள்ளக் கிளர்ச்சிகளால் உடம்பிலும் செயலி லும் ஏற்படும் மாறுதல்களுக்குக் காரணமாக இருக் கின்றனவென்று கண்டிருக்கிருர்கள். ஆட்ரீனல் என்ற சுரப்பி சிறுநீர்ப் பைக்கு மேலே இருக்கிறது. வலி, அச்சம், சினம் ஆகிய கிளர்ச்சிகளால் அந்தச் சுரப்பி பாதிக்கப்படுகிறது என்றும், செயற்கை முறையிலே அச் சுரப்பி நீரை ஒருவனுடைய இரத்தத்தில் சேரும்படி செய்தால் அச்சத்தால் ஏற்படும் உடல் மாறுபாடு களெல்லாம் உண்டாகிறதென்றும் கானன் என்பார் ஆராய்ந்து கண்டிருக்கிருர். இவ்வாறே மற்றச் சுரப்பி களின் தன்மைகளையும் ஆராய்ந்து கூறியிருக்கிருர்.

சுரப்பிகள் அல்லது மற்ற உடல் உறுப்புகளின் செய்கைகளால் உள்ளக் கிளர்ச்சிகள் தோன்றுவ தாளுலும் அல்லது உள்ளக் கிளர்ச்சிகளால் உறுப்புக் களின் செய்கைகள் மாறுபாடடைவதாளுலும் மனித

னுடைய வாழ்க்கையிலே ஏற்படும் விளைவு ஒன்றுதான். இழிந்த உள்ளக் கிளர்ச்சிகளுக்கு ஆட்பட்ட மனிதன் வீழ்ச்சியடைகிறான். அவற்றிற்கு ஆட்படாமல் அவற்றை உயர் மடைமாற்றம் செய்து கொண்டவன் உயர்வடைகிறான். இந்த உண்மையைத்தான் நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அறிவு, பகுத்தறிவு என்றெல்லாம் நாம் பேசுகிறோம். ஆனால் உள்ளக் கிளர்ச்சிகளே ஒருவனுடைய செயல்களுக்கு முக்கிய காரணமாக இருக்கின்றன. நல்ல பழக்கங்களையும், பற்றுதல்களையும், குறிக்கோள்களையும் உண்டாக்கிக் கொள்வதாலும், மனத்திட்பத்தாலும் ஒருவன் தனது உள்ளக் கிளர்ச்சிகளை நல்வழிப் படுத்திக்கொள்ள முடியுமானால் அவன் மேம்பாடடையலாம். மனச்சான்றும் அறிவும் இம் முயற்சியிலே அவனுக்குத் துணையாக நிற்க வேண்டும்.

மனவசியம்

ஆஸ்திரியா நாட்டின் தலைநகராகிய வியன்னு நகரத்தில் மெஸ்மர் என்ற புகழ்பெற்ற மருத்துவர் ஒருவர் இருந்தார். ஒருநாள் அவர் நோயாளி ஒருவருக்குச் சிகிச்சை அளித்துக்கொண்டிருக்கும்போது ஓர் அதிசயம் நடந்தது. அவர் நோயாளியை உறக்கத்தில் ஆழ்ந்து போகும்படி செய்துவிட்டார். இதைவிட அதிசயமென்னவென்ருல் அந்த உறக்க நிலையிலேயே நோயாளி தமக்கு மருத்துவர் இட்ட கட்டளைகளையெல்லாம் செய்தார்! உறக்க நிலையிலேயே பேசவும் செய்தார்!

டாக்டர் மெஸ்மர் வேறு சில நோயாளிகளையும் இவ்வாறு உறக்க நிலையில் ஆழ்த்த முயன்ருர். அவருக்கு வெற்றியே கிடைத்தது. இவ்வாறு உறங்கச் செய்து அந்த உறக்க நிலையிலேயே உடல் நலத்திற்காக நோயாளிக்கு என்னென்ன செய்யவேண்டும் என்று சொல்லுகிருரோ அவற்றை விழித்த பிறகும் நோயாளிகள் மிக அக்கறையோடு செய்தார்கள். விழித்து எழுந்த உடனேயே நோயாளிகள் தங்களுக்குப் பெரிதும் நன்மை ஏற்பட்டுள்ளதாக உணர்ந்தார்கள். டாக்டர் மெஸ்மர் தம் கைவிரல் நுனிகளின் மூலம் ஏதோ ஒருவகையான காந்த திரவம் போன்ற சக்தி செல்லுவதாகவும் அதனுலேயே நோயாளிகளுக்கு நல்ல பலன் கிடைப்பதாகவும் நம்பினுர். இந்த மன வசியமானது மெஸ்மரிசம் என்று அவர் பெயராலேயே வழங்கலாயிற்று.

அடுத்த நாற்பது ஐம்பது ஆண்டுகளில் இந்த மெஸ்மரிச முறையைப்பற்றி ஐரோப்பிய நாடுகளில் மிக விரிவான ஆராய்ச்சிகள் நடந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையில் பிரிட்டனில் மான்செஸ்டரில் ஜேம்ஸ் பிரெய்டு என்ற ஒரு புகழ்பெற்ற மருத்துவர் இருந்தார். அவர் மெஸ்மரிசத்தைப்பற்றி ஆராய்ந்து டாக்டர் மெஸ்மர் கூறியபடி மனவசியம் செய்பவரிட மிருந்து காந்த சக்தி ஒன்றும் பாய்வதில்லை என்பதை நிரூபித்தார். மன ஆற்றல் மிகுந்த யாரும் வேறொரு வரை உறக்கம் போன்ற ஒரு நிலையில் ஆழ்த்த முடியும் என்றும், அந்த நிலையிலேயே ஏவியவாறு செய்யும்படி தூண்டவும் முடியுமென்றும் அவர் காட்டினர். மன வசியம் செய்து அதன் மூலம் நல்ல பயன்களை உண் டாக்கலாம் என்பதை உணர்ந்துகொண்டால் மன வசியம் செய்வோருடன் மனவசியம் செய்யப்படுப வரும் ஒத்துழைப்பார். இந்த ஒத்துழைப்பு மிகவும் தேவையாகும். மனவசியம் செய்பவருடன் வைத் துள்ள நம்பிக்கையே வசியப்படுத்துவதற்கு அடிப் படையாகும். முழு ஒத்துழைப்புக் கிடைக்காதபோது வசியப்படுத்துவது பெரும்பாலும் இயலாது.

வசியமடைய வேண்டியவரை எளிதில் உறங்கு மாறு செய்ய அதற்கேற்ற அமைதியான சூழ்நிலையை அமைத்து வசியம் செய்பவர் தம்மையோ அல்லது ஏதேனும் ஒரு பளபளப்பான பொருளையோ இமை கொட்டாமல் பார்க்கும்படி செய்வது உறக்கநிலை ஏற் படுவதற்கு முதற்படியாகும். பிறகு முகத்தையும், மார்பையும் மெதுவாக வருடிவிட்டுக்கொண்டே, "உறங்கு; நீ இதோ உறங்கப்போகிருய். உறங்கப் போகிருய். உறங்கியாகிவிட்டது" என்று கூறுவது இரண்டாவது படி. இவற்றின் பயனுக வசியம்

செய்யப்படுபவர் உறங்கிவிடுவார். மீண்டும் விழித்துக்கொள் என்று கூறும் வரையில் இந்த உறக்கநிலை நீடித்திருக்கும். இந்த நிலையிலே மனவசியம் செய்பவர் கட்டளையிட்டவாறெல்லாம் வசியம் செய்யப்படுபவர் செய்வார்; ஆனால் அவரை எதுவேண்டுமானாலும் செய்யும்படி தூண்ட இயலாது. வசியம் செய்யப்படுபவருக்கு விருப்பமில்லாத செயலைச் செய்யும்படி அவரை ஏவ முடியாது. அவருடைய கொள்கைகளுக்கும், ஒழுக்கத்திற்கும் மாறுபட்ட எதையும் வசிய நிலையில் கூடச் செய்ய அவர் உடன்படமாட்டார். ஒருவர் புலால் உண்பதை வெறுப்பவராக இருக்கலாம். அவரைப் புலால் உண்ணும்படி வசிய நிலையிலேகூடச் செய்ய முடியாது. ஆனால் புலால் உணவை இரகசியமாகச் சாப்பிடுபவர் புலாலை உண்ணுமாறு கட்டளை இடப்பட்டால் அவர் அதைச் செய்வார். கொள்கைக்கு மாறான கட்டளை இடப்பட்டால் மனவசியம் உறக்கம் கலைந்துபோகும்.

மனவசியத்திற்கு இப்பொழுது மெஸ்மரிசம் என்ற பெயரைவிட ஹிப்னாட்டிசம் என்ற பெயர்தான் அதிகமாக வழங்குகிறது. ஹிப்னாஸ் என்ற கிரேக்கச் சொல்லிற்கு உறக்கம் என்பது பொருள். அந்தச் சொல்லைக் கொண்டு இம்முறைக்கு ஹிப்னாட்டிசம் என்ற பெயரை டாக்டர் பிரெய்டு கொடுத்தார்.

இந்த மனவசிய நிலையைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். மனம் என்பதில் நனவு மனம், நனவிலி மனம் என்பதாக இரண்டு பகுதிகள் இருப்பதை நாம் முன்பே அறிவோம். நனவு மனத்தைவிட நனவிலி மனம்தான் பெரிதும் ஆற்றல் கொண்டது என்பதையும் நாம் அறிவோம். விழித்திருக்கும் நிலையில் நாம் நனவு மனத்தையே பெரிதும் பயன்படுத்துகிறோம். ஆனால்

நனவிலி மனத்தை நல்ல வழிகளிலே செல்லும்படி செய்து அதையும் பயன்படுத்த முடியுமானால் மிகுதியான நன்மை கிடைக்கும்.

நனவு மனம் எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் தன்மை வாய்ந்தது. ஆனால் நனவிலி மனம் நாம் விழித்திருக்கும்போது வேலை செய்யாமல் இருப்பதோடு, அதற்குச் சீர்தூக்கிப் பார்க்கும் தன்மையும் இல்லை. அதன் ஆதிக்கம் ஓங்காதபடி நனவு மனமே தடுத்து வைத்திருக்கிறதென்பதை நாம் முன்பே தெரிந்துகொண்டிருக்கிறோம். அதனால் ஏதாவது ஒரு கருத்தை ஒருவருக்குக் கூறினால் அவருடைய நனவு மனம் காவற்காரன்போலத் தடையாக நிற்பதனால் அந்தக் கருத்து நனவிலி மனத்திற்கு எளிதில் செல்ல இயலாது. ஆனால் மனவசிய நிலையில் இருக்கும் பொழுது இந்த நிலைமை முற்றிலும் மாறிவிடுகிறது. மனவசிய உறக்கநிலையில் நனவு மனத்தின் ஆதிக்கம் குறைந்துவிடுகிறது. நனவிலி மனம் ஓங்கியெழுந்து மனவசியக்காரரோடு ஒத்துழைக்கத் தொடங்கிவிடுகிறது. ஆதலால் அந்த நிலையில் மனவசியம் செய்பவர் கூறுகின்ற கட்டளைகள் நனவிலி மனத்தை நேராக அடைய முடிகிறது. அதனால் மனவசியம் செய்யப் பட்டவர் மனவசியம் செய்வோருக்குப் பணிந்து அவர் சொல்கின்றபடி செய்கின்றார்.

மனவசிய உறக்கம் என்பதை நாம் உறக்க நிலையில் இருப்பதைப்போன்ற உறக்கமென்று எண்ணி விடக்கூடாது. அது உறக்கமுமில்லை; நினைவிழந்த தன்மையுமன்று. அது பொதுவாக உறக்கம் ஏற்படுவதற்குச் சற்று முன்னால் ஏற்படும் ஒரு நிலைமையைப் போன்றதேயாகும். மனவசிய உறக்க நிலையில் மனவசியம் செய்பவர் ஆணையிட்டால் நடக்கலாம்;

பேசலாம்; விழிப்பு நிலையிலே இருப்பதைப் போலவே வேறு செயல்களையும் செய்யலாம். மனவசிய நிலையிலே ஒருவனுடைய பொறிகளின் ஆற்றல்களைக் குறைக்கவும் கூடும்; கூர்மைப்படுத்தவும் கூடும். அந்த நிலையிலே அவர் உடலில் ஏற்பட்டுள்ள மிகுந்த வலியையும் அவர் உணரமாட்டார். கசப்பான பண்டத்தை மிகவும் இனிப்பானதென்று கூறிக் கொடுத்தால் அப்பண்டம் இனிப்பதாகவே எண்ணி அவர் சுவைத்து உண்பார். அருவருக்கத் தக்க கெட்ட நாற்றத்தையும் நறுமணம் என்று கூறி முகரச் சொன்னுல் அவ்வாறே முகர்ந்து மகிழ்வார்.

மனவசியத்தால் நமது ஐம்புலன்களின் கூர்மையை மிகுதிப்படுத்தலாம். இதற்கும் ஒரு எல்லை உண்டென்ருலும் நோயைக் குணப்படுத்தவும், தவருன எண்ணங்களை நீக்கவும் இது கையாளப்படுவதுண்டு. மனவசிய நிலையில் நோய் குணமாகிவிட்டது என்ற கருத்தைக் கொடுப்பதன் மூலம் நோயைக் குணமாக்கலாம். ஆயினும் நோய்களைக் குணப்படுத்த இதை யாரும் இன்று பெரிதும் பயன்படுத்துவதில்லை. நோய்க்கு அடிப்படையான காரணத்தைக் கண்டுபிடித்து அந்நோயைக் களைய முயல்வதே விஞ்ஞான முறைச் சிகிச்சையாகுமென்பது இன்றைய கருத்தாகும். நரம்புக் கோளாறுகளையும், உறக்கமின்மையையும், திக்கிப் பேசுதலையும் நகத்தைக் கடித்துக்கொண்டே இருத்தலையும், இன்னும் இவை போன்ற பலவற்றையும் குணப்படுத்துதற்கு மேல்நாடுகளில் இம்முறை பயன்பட்டு வருகிறது.

எமிலி கூவே என்னும் பிரான்சு நாட்டு உளவியலார், "ஒருவன் தன்னைத்தானே வசியம் செய்து கொண்டு நோயையும், உள்ளச் சோர்வையும் நீக்கிக் கொள்ளலாம்" என்று காட்டியுள்ளார். இவ்வாறு

தனக்குத்தானே கருத்தேற்றிக்கொள்ளப் பழகிக் கொண்டால் அதனுல் சிறந்த நன்மைகள் விளையும் என்பது அவருடைய எண்ணமாகும்.

மனவசியம் புதிதான முறையல்ல. நமது நாட்டில் யோகிகள் இதைக் கையாளுகிருர்கள். பாரசீக ஞானி களுக்கும் மற்றவர்களுக்கும் இது தெரிந்திருந்தது.

இக்காலத்தில் விளம்பரம் செய்வதில் தேர்ச்சி பெற்றவர்கள் மக்களின் மனத்தை வசியப்படுத்தக் கூடிய அழகிய படங்களோடு ஒரு பொருளை விளம்பரம் செய்து தங்கள் வாணிகத்தைப் பெருக்கிக்கொள் கிருர்கள். பதவியிலிருப்பவர்கள் தங்கள் அதிகாரக் கட்டளைகளால் பிறரைப் பணிந்து நடக்குமாறு செய்து விடுகிருர்கள். இவைபோன்ற பலவும் மனவசியத்தின் பல கிளைகளாகும்.

உளவியல் உண்மைகளை அறிந்துகொள்வதற்கும் மனவசியம் பயன்படுகிறது. மனவசிய உறக்கத்தின் போது நினைவு ஆற்றல் மிகுந்திருப்பதாலும் நனவிலி உளத்தின் ஆதிக்கம் ஓங்குவதாலும் அதிலே அழுந்தி யிருக்கும் எண்ணங்களையும், இச்சைகளையும் அறிந்து கொள்வதற்கு இது ஒரு வழியாகப் பயன்படுகிறது.

இந்த வழியில் ஒருசில குறைபாடுகள் உண்டு. ஆனுல் அதை நாம் தெரிந்துகொள்ள வேண்டுவதில்லை. மனவசியம் என்பது மனத்தின் ஆழத்தில் புதையுண்டு கிடக்கும் இச்சைகளை அறிந்துகொள்ள உதவும் என்பதை அறிந்துகொள்வதே இங்கு முக்கியமாகும்.

இன நனவிலி மனம்

பிராய்டு என்ற உளவியலார் நனவிலி மனத்தைப் பற்றி ஆராய்ந்து உளப் பகுப்பியல் முறையைத் தோற்றுவித்தார் என்று கண்டோம். உளப்பகுப்பியலின் தந்தை அவரே. அவரோடு ஆட்லரும், யுங் என்பவரும் மாணவராகப் பல ஆண்டுகள் வேலை செய்தனர். பிறகு இருவரும் கொள்கை வேறுபாடுகளால் வேறு வேருகப் பிரிந்தனர். ஆட்லரின் பிற்காலக் கருத்தைப் பற்றி முன்பே கூறப்பட்டுள்ளது. இங்கு யுங்கின் கொள்கையைச் சுருக்கமாக ஆராய்வோம்.

நனவிலி மனத்தைப் பிற்காலத்தில் பிராய்டு 'இத்' என்றும், அதில் எழும் ஆற்றலை லிபிடோ (Libido) என்றும் குறிப்பிட்டார். லிபிடோ பாலியல்பு வாய்ந்தது என்றும், மனக் கோளாறுகளெல்லாம் இது ஒழுங்காக அமையாததால் ஏற்படுகின்றன என்றும், இந்தப் பாலியல்பு குழவிப் பருவ முதற்கொண்டே தொடங்குகிறதென்றும் கருதினர். நனவிலி மனம் குழவிப் பருவத்தில் சிறிதாக இருந்தபோதும், வயது ஆக ஆக அக்குழந்தைக்குத் தடைகளும் விதிகளும் பெருகுகின்ற காரணத்திஞல் நனவிலி மனத்தில் பல விதமான இச்சைகளும் ஆர்வங்களும் மிகுதியாகி நனவிலிமனம் விரிவடைகின்றது. அதனுல்தான் நனவிலி மனம் நனவு மனத்தினின்றும் வளர்ந்ததே யாகும் என்று பொதுப்படையாகக் கூறுவதுண்டு.

இக் கருத்தைப் பலநாள் ஆராய்ந்து பிராய்டின் கொள்கையினின்றும் மாறுபட்ட கருத்தை யுங் வெளி

யிட்டார். நனவிலி மனம் முற்றிலும் பாலியல்பு வாய்ந்தது என்பதை இவர் பிற்காலத்தில் ஒப்புக்கொள்ளவில்லை. லிபிடோ என்பது மனிதன் உயிர் வாழவிரும்பும் ஆர்வத்தையே குறிக்கிறது என்று இவர் கருதினார். மேலும் பிராய்டு குறிப்பிட்ட இனம் அல்லது தொகுப்பு நனவிலி மனத்தைப்பற்றி இவர் விரிவாக ஆராய்ந்து பல புதிய கருத்துக்களை வெளியிட்டார். யுங்கின் கொள்கைப்படி நனவிலி மனத்தில் இரண்டு பகுதிகள் உண்டு. சமூகம் ஏற்றுக்கொள்ளாத இச்சைகள் அனுபவங்கள் ஒரு பகுதியில் இருக்கும். மற்றொரு பகுதியில் அவனுடைய மூதாதையர் அனுபவங்களும், அவர்களுடைய இச்சைகளும் மறைந்து கிடக்கும். யுங்கின் மற்றொரு முக்கியமான கருத்து "நனவு மனத்திலிருந்து நனவிலி மனம் தோன்றவில்லை; ஆனால் நனவிலி மனத்திலிருந்தே நனவு மனம் தோன்றுகிறது" என்பதாகும். உடல் அமைப்பு எவ்வாறு ஒருவனுடைய மூதாதையரின் உடலமைப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கிறதோ அதேபோல அவனுடைய மனத்தின் அமைப்பும் மூதாதையரின் மன அமைப்பைப் பொறுத்திருக்கிறதென்று யுங் கூறுகிறார். மனிதன் ஒரு பெரிய வண்டியைப் போன்றவன்; அந்த வண்டி அவனுடைய மூதாதையரை யெல்லாம் சுமந்து செல்கிறது என்று இதை விளக்கிச் சொல்வதுண்டு.

நனவிலி மனத்தைப் பற்றி இவ்வாறு இரண்டு பகுதிகளாகக் கூறும்போது இங்கும் தனித்தனியாக இரண்டு பகுதிகள் இருப்பதில்லையென்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். மனத்தில் நனவு மனம், நனவிலி மனம் என்று தனித்தனிப் பகுதிகள் இல்லை என்று முன்பு அறிந்துகொண்டதைப் போலவே இங்கும் அறிந்துகொள்ள வேண்டும்.

நனவிலி மனத்திலே இரண்டு விதமான ஆற்றல்கள் உண்டு என்றும் யுங் கூறியுள்ளார். அனிமா (Anima) என்று ஒரு ஆற்றலையும், மற்ருெரு ஆற்றலை நிழல் (Shadow) என்றும் அவர் வழங்கினுர். அனிமா ஆற்றலானது ஒருவனுடைய அகத்தையும் அதன் வழியாக அவனுடைய ஆளுமையையும் மேலோங்கச் செய்கிறது. அனிமா ஆற்றல் ஒருவனிடத்தில் திறம்பட வேலை செய்தால் அவனுக்கு எந்தத் துறையில் திறமை இருக்கிறதோ, அந்தத்துறையில் அவன் சிறந்து விளங்குவான். கவிதை, இசை, சிற்பம் முதலான துறைகளில் புகழ்பெற அனிமா ஆற்றல் சிறப்பாக உதவுகிறது. அனிமா ஆற்றலுக்கு மாறுன தன்மைகளை நிழலாற்றல் ஒருவனுடைய ஆளுமையில் தோற்றுவிக்கின்றது. காமுகனும், பிறரை வெறுப்பவனும் இந்த நிழல் ஆற்றலின் ஆதிக்கத்திலே இருப்பவர்கள் என்று கூறலாம்.

ஒருவனுடைய தனிப்பட்ட பிரச்சினைகளை ஆராய்வதோடு யுங் நின்றுவிடுவதில்லை. இந்தப் பிரபஞ்சத்தில் அம்மனிதனுக்கு உரித்தான இடத்தையும் அறிந்துகொள்ளுமாறு செய்ய அவர் முனைந்தார். ஆகையால் மனித மனத்தின் இன்னும் ஆழமான பகுதிக்கு யுங் செல்கிறுர் என்று நாம் கூற முடியும். ஆதலால் அவர் மேல்நாட்டு உளவியலார்களின் திறமையைக் கொண்டிருப்பதோடு பாரத தேசத்து யோகிகளின் உள்ளுணர்வு ஆற்றலையும் கொண்டிருந்தார் எனலாம். வெளி உலகத்திலிருந்து ஒருவனுக்கு ஏற்படும் அனுபவங்களை அவர் தெரிந்துகொள்ள முடிந்ததோடு மனத்திலே ஒலிக்கும் உள் ஒலியையும், மனத்திலே ஒளிவிடும் ஆன்மாவையும் அவர் விளக்கிக் கூற முயன்றுர். அதனுலேயே அவருடைய முறை விஞ்ஞான அடிப்படையாக இல்லை என்று பலர்

கருத இடமளித்தது. ஒருவன் தன் வாழ்க்கையிலே வெற்றி காணுது தோல்வியடைந்த முயற்சிகளுக்கு ஈடு செய்யவே நரம்புக் கோளாறுகளும், கனவுகளும், பொய்க் கற்பனைகளும் தோன்றுகின்றன என்று யுங் கருதினுர். லிபிடோ என்பதை பிராய்டைவிட மிக விரிவான பொருளில் இவர் வழங்கினுர். நரம்புக் கோளாறுகளை வெளியுலக அனுபவங்களின் வாயிலாக மட்டும் இவர் விளக்குவதில்லை. ஒரு மனிதனுடைய தனித்தன்மை வெளியுலக வெற்றி தோல்விகளால் மட்டும் முன்னேற்றமடைவதில்லை என்றும் ஆன்மிக முன்னேற்றமும் அதற்குக் காரணம் என்றும் அவர் எண்ணினுர். மேலைநாட்டு உளவியல் அறிஞர்கள் சடப்பொருளை மட்டும் ஆராய்ந்தார்கள். கீழ்நாட்டு யோகிகள் சடப்பொருளை மாயை என்று விலக்கிவிட்டு ஆன்மாவுக்கே முக்கியத்துவம் கொடுத்தார்கள். ஒருவனுடைய மனம் நல்ல முறையில் அமையவேண்டுமானுல் இந்த இரண்டுமே மிக முக்கியம் என்று யுங் வலியுறுத்துகிருர். "நன்கு பண்பட்டு வளர்ந்த மனிதனெருவனுக்கு நனவு மனம் மிக விரிந்திருக்கவேண்டும். அவனுடைய நனவிலி மனம் மிகமிகச் சுருங்கி இருக்க வேண்டும்" என்று யுங் கூறியுள்ளார்.

ஒரு மனிதன் ஆரோக்கியமான மனத்தோடுகூடி இருக்கவேண்டுமானுல் மதம் மிக முக்கியம் என்றும் யுங் கருதினுர். மதமே ஒருவனுடைய ஆன்மிகத் தேவைகளை நிறைவேற்றுகிறது. மதப் பற்றுடைய வாழ்க்கை குறைந்து வருவதாலேயே மனத்திலே அமைதியின்மையும், மனக்கோளாறுகளும் பெருகி வருகின்றன என்று யுங் அழுத்தமாகக் கூறினுர்.

மனிதன் எதேச்சையாகத் திரிந்து வாழ்வதற்காகப் படைக்கப்பட்டவன். அவன் இப்பொழுது பெரிய

பெரிய நகரங்களில் புதிய சூழ்நிலைகளில் வாழவேண்டி யிருக்கிறது. அவசரமும், பரபரப்பும், வேகமும் மிகுந்த இந்த வாழ்க்கையானது அவனுடைய அமை திக்குப் பாதகமாக நின்று புதிய புதிய மனக்கோளாறு களையும் மனநோய்களையும் விளைவிக்கின்றன. நாட்டுப் புறங்களிடையே வாழும் மக்களிடையேயும், ஆதிவாசி களாக உள்ள மக்களிடையிலேயும் இத்தகைய கோளாறுகள் காணப்படினும் நகரத்தின் நாகரிக வாழ்க்கையில் உள்ளவர்களிடையே காணப்படுதைப் போல அத்தனை மிகுதியாக இக்கோளாறுகளை அவர் களிடையே காண முடியாது.

நரம்புக் கோளாறுகளையும், படபடப்பையும் கட்டுப் படுத்துவதற்கென்று நரம்புகளுக்கு மயக்கத்தை அளிக் கும் பலவகையான மருந்துகள் இக்காலத்தில் தோன்றியுள்ளன. உறக்கத்திற்காக உட்கொள்ளும் மாத்திரைகள் இல்லாவிட்டால் இன்று பலரால் இரவிலே உறங்கவே முடியாது என்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே இந்த நிலைமை மாற வேண்டுமானால் மன அமைதிக்கான வழிகளை நாம் பின்பற்றவேண்டும். தியானம் என்பது மனத்திற்கு மிகப் பெரிய அமைதியளிக்கும் சாதனம் என்று ஞானிகள் பழங்காலத்திலிருந்தே கூறியுள்ளார்கள். இன்று மஹரிஷி மஹேஷ் யோகி என்ற பெரியார் இமயமலைச் சாரலிலே தியான நிலையம் ஒன்றை அமைத்து மக்களுக்குத் தியானத்தின் பெருமையை உணர்த்த முற்பட்டிருக்கின்றார். எளிதாக எல்லாரும் பின்பற்றக்கூடிய தியான முறையை அவர் வகுத்து அதில் மக்களுக்குப் பயிற்சியளித்து வருகிறார். உலகி லுள்ள பலநாட்டு மக்களும் அந்நிலையத்திற்கு வந்து பயிற்சி பெறுகிறார்கள்.

உலகப் புகழ்வாய்ந்த கலைஞர்களும் தங்களுடைய பழைய வாழ்க்கையிலே சலிப்படைந்து இந்தத் தியான நிலையத்தை நாடுகிருர்கள் என்ருல் தியானத்தின் பெருமையை நாம் நன்கு அறிந்து கொள்ளலாம்.

ஆட்லரும், யுங்கும் பிராய்டின் கருத்துகளை முற்றிலும் ஏற்க மறுத்துத் தனித்தனியே பிரிந்து விட்டார்கள் என்பதைக் கண்டோம். பொதுவாகப் பார்க்குமிடத்து பிராய்டின் கருத்தே பெரியதோர் அளவில் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் யுங்கின் கொள்கையானது மேல்நாட்டு உலோகாயுதக் கொள்கைக்கும், கீழ்நாட்டு ஆன்மிகக் கொள்கைக்கும் பாலம் அமைத்து இரண்டையும் பிணைத்து இரண்டும் மனிதனுடைய முழுமையான வாழ்விற்குத் தேவை யானவையே என்று காட்டுவதாக அமைந்துள்ளது.

ஆட்லரின் கொள்கை மிக எளிமையானது; சிக்க லற்றது; எல்லாருக்கும் எளிதில் புரியக் கூடியது. அதனுல் பலர் அதை வரவேற்ருர்கள். அதனுலும் பல நன்மைகள் உண்டாயின. யுங்கின் கொள்கை மதப் பற்றுடையவர்களுக்கு உகந்ததாகப்பட்டது. பொது வாக இக்காலத்தில் இரண்டுமே மனப் பகுப்பியலை மேலும் விளக்க உதவின. யுங்கின் கொள்கை, மனத் தைப் பற்றி அறிய மனத்தின் ஆழத்திற்குள்ளே முழுகிப் பார்க்க உதவி செய்கின்றது என்று கூறலாம்.

மன நலம்

உடலை எவ்வாறு நலமாக வைத்திருக்க வேண்டுமோ அது போலவே மனத்தையும் நலம் குறையாமல் வைத்திருப்பது வாழ்க்கையின் இன்பத்திற்கும், வெற்றிக்கும் அடிப்படையாகும். மனத்தின் பல விந்தைகளை இதுவரையில் சுருக்கமாக அறிந்து கொண்டோம். அம் மனத்தை எவ்வாறு நலம் செழித்து ஓங்கச் செய்யலாம் என்பது பற்றியும் ஓரளவு முன்பே கூறப்பட்டுள்ளது. இப்பகுதியிலே மேலும் சில வழிமுறைகளைப் பற்றி ஆராய்வோம்.

பல வழிகளிலே மனநலம் பாதிக்கப்படலாம். அவற்றை அறுதியிட்டுக் கூறுவது எளிதல்ல. உடல் நலக்குறைவே மனநலத்தைக் கெடுக்கக்கூடியதாக இருக்கலாம். வீட்டுச் சூழ்நிலை, பள்ளி, கோவில், நீதி மன்றம், தொழில் நிலைமை என்று இப்படி மிகப் பலவற்றை நாம் எடுத்துக் கூறலாம். ஆதலால் மனநலமானது, உடலியல், பொருளியல், சமூகவியல், சமயம், அறவியல் முதலான பல துறைகளோடு நெருங்கிய தொடர்புடையதாகும். மேலும் மனநலம் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய வாழ்க்கைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு மாறுபட்டிருக்கும். ஒரு மனிதனுக்கு ஏற்றது மற்றொரு மனிதனுக்கு ஒத்ததாக இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சுருக்கமாகக் கூறினால் ஒவ்வொருவனுக்கும் ஏற்பட்டுள்ள அவனுடைய ஆளுமையின் வளர்ச்சியைப் பொறுத்ததாக மனநலம் இருக்கும்.

பொதுவாகத் துன்பம் நேர்வதால் மனநலம் பாதிக்கப்படும் என்பதை யாவரும் உணர்ந்திருப்பார்கள். துன்பம் எத்தனையோ விதங்களில் நேரலாம். பொருளாதார நெருக்கடி, தொழிலில் பெருந் தோல்வி, உடல் நோய், வேலையில்லாமை, பெருங் குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பு என்றிவ்வாறு எண்ணற்ற விதங்களில் துன்பம் உண்டாகலாம்.

இத்துன்பங்களையெல்லாம் சமாளித்து அமைதியோடும், பொறுமையோடும் வாழ்க்கையை நடத்த அறியாத ஒருவன் மனநலத்தை இழக்கிறான். இடையூறுகளை வெல்ல வேண்டும் எனவும், மனத்திலே சோர்வுக்கும் தோல்வி மனப்பான்மைக்கும் இடங் கொடுக்கக்கூடாது எனவும் ஒருவன் உறுதியாக முனைந்தால் எவ்வளவு துன்பத்தையும் அவன் தாங்கிக் கொள்ளுவதோடு மனம் தெளிவாக இருக்கவும் அவன் வல்லமை பெற்றுவிடுகிறான். தன்னைத்தானே அலசிப் பார்த்துத் தன்னுடைய குறைகளையும் நிறைகளையும் உணர்ந்து, தன்னிடமுள்ள குறைபாடுகளை மெதுவாகக் களைய முயல்வதே மனநலத்திற்கு நல்லமுறையில் அடிகோலுவதாகும். தன்னைத்தானே ஆராய்வது அவ்வளவு எளிதான செயலன்று. இருப்பினும் இதை ஒவ்வொருவனும் பலதடவை செய்து பார்த்து வெற்றி பெற முயலவேண்டும். எதற்கெடுத்தாலும் சிடுசிடுப்பாக இருப்பவன் தனது குறைபாட்டை உணர்ந்து கொண்டால் தனக்கும் நல்லது; மற்றவர்களுக்கும் நன்மையை விளைவிக்கும்.

மனநலத்தை ஒருவன் நன்கு பெறுவதற்கு வாழ்க்கையைப்பற்றித் திட்டமான தத்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும். நாள்தோறும் தோன்றும் வாழ்க்கைச் சிக்கல்களை நல்ல அமைதியான மனப்பாங்கோடு

நோக்கவேண்டும். அவன் வாழ்க்கையில் மனநிறைவு காணவும் முற்படவேண்டும். வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளை எண்ணிப் பார்ப்பதோடு, சமூகத்திலும், தொழிலிலும் தோன்றும் பிரச்சினைகளைத் துணிவுடன் ஏற்றுக்கொள்ள அவன் தயங்கக்கூடாது. மேலும் சமூகத்திலே பற்றுள்ள மனப்பான்மையும், சமூகத்தைப்பற்றிய தெளிந்த அறிவும் மனநலத்தை வளர்க்க உதவும்.

கருத்து முரண்பாடு, மனக்கிளர்ச்சி, பேராசை, மனப்போராட்டம் போன்றவைகளுக்கு ஒருவன் அடிமைப்படாமலிருக்க வேண்டும். சூழ்நிலைக்கேற்ற வாறு நடக்க முடியாவிட்டால் மனக்குழப்பம், மன நோய், தீய எண்ணங்கள், இழிந்த பழக்கங்கள், பகற் கனவு, அச்சம், கவலை, தாழ்வு மனப்பான்மை, சங்கடங்களைத் தட்டிக்கழிக்க முயலுதல், சமூகத்திற்கு மாறுபட்ட நடத்தை, இன்னும் இவைபோன்ற தீய இயல்புகளும் நடத்தைகளும் உண்டாகும். நல்ல பழக்க வழக்கங்களை ஒருவன் இளமையிலிருந்தே கைக் கொள்ளுதல் மிகவும் தேவை. வெறும் அறிவு மட்டும் இருந்தால் போதாது.

வாழ்க்கையில் தெளிவான குறிக்கோள் இருக்க வேண்டும். தனது குறிக்கோளை நிறைவேற்ற முயல் கின்றவனுடைய மனம் சிதறுண்டு அலையாது. அது ஒருநிலைப்பட்டு வளம் மிகுந்து நிற்கும். குறிக்கோ ளுடைய ஒருவன் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பான்.

மனத்திலே கொந்தளிப்பான கிளர்ச்சிகள் தோன் றும்படியாக விடுவது மனநலத்தைக் குலைக்கச் செய்யும். பல வேளைகளிலே மனம் குமுறி எழும்படியான நிலைகள்

ஏற்படலாம். ஆனல் அப்பொழுதெல்லாம் மனக் கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முயலவேண்டும். மனக் கிளர்ச்சியால் ஏற்படும் அதிர்ச்சிகளும் ஏற்படாதவாறு கட்டுப்படுத்த வேண்டும். அவை மனத்தின் நலத்தைக் குலைப்பதோடு உடல் நலத்தையும் கெடுக்கும். பெற்றோர்களும், ஆசிரியர்களும் குழந்தைகளுக்கு இளமையிலிருந்தே இவ்விதமான பழக்கத்தை உண்டாக்குவது இன்றியமையாதது.

மனநலத்தை வளர்ப்பதற்குப் பல வழிகளைக் கூறலாம். சமூகச் சூழ்நிலையோடு இணைந்து நடப்பது, துன்பத்தின் காரணத்தை அறிய முயற்சி செய்தல், மனக்கிளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல், வாழ்க்கையில் ஏற்படும் இடையூறுகளையும், ஏமாற்றங்களையும் நகைச்சுவை உணர்ச்சியோடு களைய முயலுதல், சோம்பலைத் தவிர்த்தல், நாள்தோறும் செய்யும் செயல்களை ஒழுங்காகத் திட்டப்படுத்துதல், கடமைகளையும் பணிகளையும் செய்வதில் பற்றுக்கொள்ளுதல், அவ்வாறு பற்றுக்கொள்வதால் துன்பங்களை மறத்தல், பகற்கனவாலும் பயனற்ற எண்ணங்களாலும் மனநிறைவை அடைய முயலாதிருத்தல், செய்வதைத் திருந்தச் செய்வதில் இன்பங் காணுதல் முதலானவைகள் எல்லாம் நல்ல மனநலத்திற்குச் சிறந்த அடிப்படைகளாகும். மன நலம் சிறந்திருப்பதே ஒருவனுடைய வாழ்க்கையின் வெற்றிக்கு நல்ல அறிகுறியாகும்.

வீட்டிலும், தொழில் செய்யும் இடங்களிலும் சமூகத்திலும் நாம் விரும்பியவாறே எல்லாம் நடைபெறும் என்று எதிர்பார்ப்பது சிறுபிள்ளைத்தனமாகும். அவ்வாறு நடைபெறுவதற்கு வேண்டிய நேர்மையான முயற்சிகளை ஒருவன் கைக்கொள்ளலாம்; ஆனல் அவற்றை விட்டுவிட்டு மனத்தை அலட்டிக்

கொள்வதிலும் பகற்கனவின் மூலம் மன நிறைவு காண்பதிலும் ஒருவன் தன் ஆற்றலை விரயம் செய்வானானால் அது தனக்குத் தானே கேடு விளைவித்துக்கொள்வதாக முடியும். இறுதியில் மனநலம் குலைவதற்கும் அவைகளே வழிகளாக ஏற்பட்டுவிடும். மன உறுதியோடு தன் வாழ்க்கை விவகாரங்களை எண்ணிப் பார்த்துத் திட்டமான முடிவு கண்டு அம் முடிவின்படி செயலாற்ற அவன் முற்பட வேண்டும். அப்படி முற்படும்போதும் பல இடையூறுகளும், இடையிடையே சிறுதோல்விகளும் ஏற்படலாம். இவற்றை எதிர்பார்த்தே ஒருவன் செயலில் இறங்க வேண்டும். இந்த முயற்சியில்தான் நகைச்சுவை ஒருவனுக்குப் பெரிதும் உதவுகின்றது. அத்துடன் அவன் சில நாட்களுக்கு வேறு இடங்களுக்குச் சென்று ஓய்வு பெறுவதும் மனநலத்திற்கு உகந்ததாகும். நண்பர்கள், அக்கம்பக்கத்தார்கள் முதலியவர்களுடைய வாழ்க்கையில் ஒருவனுக்கு அக்கறை இருக்குமானால் அவர்கள் வாழ்விலும் மனநிறைவு தராத தொல்லைகள் இருப்பதை உணருவான். அந்த உணர்ச்சியும் அவனுக்கு வாழ்க்கையைப்பற்றிய சரியான மனப்பாங்கை உண்டாக்கும்.

பற்றற்ற நிலையைக் கடைபிடித்து ஒருவன் தனது கடமைகளைச் செய்வானானால் அவனுடைய மனம் எந்த விதமான எதிர்ப்பாலும், இடையூறாலும், தோல்வியாலும் துன்பப்படாது என்று நமது நாட்டுச் சான்றோர்கள் கூறியுள்ளார்கள். இவ்வாறான ஒரு பற்றற்ற நிலை எளிதில் கைகூடாது என்றாலும் அதை அடைவதற்கு என்றும் முயற்சி செய்வது நல்லது. சமயப் பற்றுடையவர்கள் தமது சமயக் கொள்கைக்கு ஏற்றவாறு இறைவனிடம் தமது வாழ்க்கையையே ஒப்படைத்துவிட்டு, "நன்றே செய்வாய் பிழை செய்வாய்;

நானே இதற்கு நாயகமே" என்ற மனப்பாங்கோடு வாழ்க்கையினை நடத்துவதும் மன நலத்திற்கும், மன அமைதிக்கும் மிகச் சிறந்த வழியாகும். சமயப்பற்று இல்லாதவர்களும் தம்மைத்தானே ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியின் பயனாக வாழ்க்கையை நடத்தத் தொடங்கினால் மனநலம் சிறக்கும். இதுவே வாழ்க்கையை வெற்றிப் பாதையில் செலுத்துவதற்கும், இன்னல்களை இன்முகத்தோடு ஏற்பதற்கும் மனநலம் கெடாமல் இருப்பதற்கும் நல்ல வழி. மனத்தைப் பற்றி இந்நூலிலே இதுவரை அறிந்து கொண்டவைகளெல்லாம் இதற்கு உதவியாக நிற்கும் என்பது என்னுடைய கருத்து.

இக்காலத்திலே மனநலம் குலைந்தோர் பெருகி வருவதால் உளநோய் மருத்துவம், உளவியல் சிகிச்சை முதலியன தோன்றியிருக்கின்றன. மனநலம் குறைந்தவர்களென்றால் அவர்களெல்லாரும் பைத்தியமாகவோ, ஹிஸ்டீரியா முதலிய நோய்வாய்ப்பட்டிருபபவர்களாகவோ இருப்பவர்கள் என்று எண்ணி விடக்கூடாது. சாதாரணமாக வாழ்க்கை நடத்துபவர்களிடத்தும் இந்த மனநோய் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ இருக்கலாம். அவர்கள் தங்களைத் தாங்களே தெளிவாகப் புரிந்து கொள்ளாததினாலேயே இந்நோய் தோன்றுகிறது. அவ்வாறு புரிந்து கொள்ளுவதும் எளிதன்று என்பது முன்னாலேயே கூறப்பட்டுள்ளது. ஒருவன் தன்னுடைய குறைபாட்டைப் பொதுவாக மற்றவர்கள் நோக்கும் கோணத்தை விட்டு வேறு ஒரு கோணத்திலே நோக்கி அது தனது தனித் திறமை என்றுகூட எண்ணிக்கொள்ளும்படி மனமே செய்துவிடும். பலபேருக்கு மேலாக ஒரு நிறுவனத்தில் உதவி வகிக்கும் ஒருவர் முன்கோபியாக இருக்கலாம்.

ஆனால் அவர் தாம் முன்கோபி என்பதைப் புரிந்து கொள்ளாமல், ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலை நாட்டுவதில் கண்ணுங் கருத்துமாக இருப்பவர் என்று எண்ணிக்கொள்ளுவார். மனக் கோளாறுகள் எல்லாம் நனவிலி மனப்பகுதியில் ஏற்படும் சிக்கல்களை விடுவிக்காததாலேயே உண்டாகின்றன என்றும் அதற்குப் பிராய்டு வகித்த மனப்பகுப்பியல் என்ற புகழ் பெற்ற முறையையும் நாம் முன்பே தெரிந்திருக்கிறோம்.

உளவியல் சிகிச்சையின் நோக்கங்களைக் கீழ்க்கண்டவாறு வகுத்துக் கூறலாம். மன நோயாளிகள் பொதுவாக வாழ்க்கையைப்பற்றித் தவறான கருத்துடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் காரணமில்லாது சில வெறுப்புக்களையும் உடையவர்களாக இருக்கலாம். தமக்கு நேர்கின்ற சிறிய துன்பங்களையும் பெரியனவாக நினைத்துக்கொள்ளலாம். உளவியல் சிகிச்சை இவற்றை மாற்ற முயல்கிறது. சிலர் உடலுக்கு ஏற்படும் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளும் வல்லமை இல்லாதவர்களாக இருப்பார்கள். அதுபோலவே சிலருக்கு மனக்கவலையைப் பொறுத்துக்கொள்ளும் வல்லமை குறைவாக இருக்கும். இந்த வல்லமையைப் பெருக்குவதும் உளவியல் சிகிச்சையின் நோக்கமாகும். மன நோயாளிகள் தங்களுக்கு இயல்பாக அமைந்துள்ள திறமைகள், குறைபாடுகள் முதலியவற்றை நன்றாக அறியாதவர்களாக இருப்பார்கள். அவற்றை உணர்ந்து தங்களுடைய ஆளுமையின் தரத்தை அறிந்து கொள்ளும்படி செய்வதுவும் சிகிச்சையின் மற்றொரு நோக்கமாகும். நோயாளிகளின் தன்னம்பிக்கையை வளர்ப்பதும், வாழ்க்கையை இன்பமும் மனநிறைவும் பெறுமாறு செய்வதுவும் இந்தச் சிகிச்சையின் முக்கியமான முயற்சியாகும்.

நமக்குப் பெருமை

அண்மையிலே நான் ஒரு திரைப்படக் காட்சியைப் பார்த்தேன். மறைமனத்திலே ஏற்பட்டுள்ள சிக்கலை அடிப்படையாகக் கொண்டு, அந்தப் படம் உருவாகியிருக்கிறது. உள்ளத்தைக் கவரும் கதை அது. அதிலே ஓரிடத்திலே ஒன்றுக்குப் பின் ஒன்ருக எத்தனையோ கதவுகள் திறக்கப் படுவது போல ஒரு காட்சியைக் கற்பனை செய்திருக்கிருர்கள். முதலில் ஒரே கதவுதான் முன்ஞல் தோன்றுகிறது; அது திறக்கவில்லை. உள்ளே மற்றொரு கதவு. அது திறந்ததும் மற்றொரு கதவு. இப்படியே கதவுகள் ஒன்றுக்குப் பின் ஒன்ருகத் தோன்றுகின்றன. அவற்றிற்கு முடிவே இல்லை போலக் காண்கிறது.

மனத்தின் பல நிலைகளையும், ஆழத்தையும் இவ்வாறு உருவப்படுத்தி அந்தக் காட்சியிலே காட்டியிருக்கிருர்கள். மனம் அத்தனை மாயமானது. அதன் விந்தைச் செயல்களையெல்லாம் பொதுப்படையாக இதுவரை ஆராய்ந்தோம். மனம் என்ருல் என்ன என்று திட்டமாக எடுத்துச் சொல்ல முடியாவிட்டாலும் அதன் செயல்களை ஒருவாறு தெரிந்துகொள்ள முடிந்தது. அதன் முக்கிய பகுதிகளாகிய நனவு மனம், நனவிலி மனம், நனவடி மனம் (வெளி மனம், மறை மனம், இடை மனம்) எவ்வாறு வேலை செய்கின்றன என்றும் பார்த்தோம். பகுதிகள் என்று கூறும்போது உண்மையில் இப்படிப் பகுதிகள் இல்லை என்றும் மனம் முழுமையானது என்றும் கண்டோம்.

இந்த மனத்தின் பெருமையைப்பற்றியும், மாயத்தைப்பற்றியும் எடுத்து விளக்கிக் கவிஞர்கள் கவிதை புனைந்திருக்கிறார்கள்; அடியார்கள் பாடியிருக்கிறார்கள். மனக் குரங்கு என்றுகூடப் பழித்துக் கூறியிருக்கிறார்கள். தத்துவப் பெரியார்களும் மனத்தை அடக்க முடியவில்லையே என்று வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மனத்தினாலேயே மனிதனுக்குத் தனிப்பட்ட பெருமை ஏற்பட்டிருக்கிறது. மனம் என்பதொன்றில்லாவிட்டால் அவனுக்குப் பெருமையே இல்லையென்று கூறலாம். அதன் உதவியாலேயே அவன் எத்தனையோ வியப்புக்குரிய செயல்களையெல்லாம் சாதித்திருக்கிறான். ஆனால், அது அவனைக் குழியில் தள்ளிவிடவும் செய்யும். மறை மனத்திலே மறைந்து கிடக்கும் இச்சைகள் பகுத்தறிவையும், மனச் சான்றையும் ஏமாற்றிவிட்டு மேலெழுந்து ஆதிக்கம் செய்யத் தொடங்கிவிடலாம். அதை உணர்ந்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நமது செயல்களையும், நோக்கங்களையும் அடிக்கடி அலசி ஆராய்ந்து மதிப்பிடப் பழகிக் கொள்ள வேண்டும். இது எளிதன்று; ஏனெனில் அதற்கும் அந்த மனத்தையே நம்பவேண்டியிருக்கிறது. அதற்குத்தான் மனத்தைப் பற்றிய அறிவு தேவைப்படுகின்றது.

மனத்தின் தன்மைகளை உணர்ந்துகொண்டு அதைச் சரிவரப் பயன்படுத்தி நடந்தால் வாழ்க்கையிலே வெற்றியடையலாம். கனவும், பகற்கனவும் மனத்தின் தன்மைகளை அறிய உதவுகின்றன. இயல்பூக்கங்கள், உள்ளக் கிளர்ச்சிகள், நினைவாற்றல், கற்பனை ஆற்றல் ஆகியவற்றின் இயல்புகள், பயன்கள் ஆகிய

வற்றை அறிந்துகொள்வதாலும் மனத்தின் தன்மைகள் தெளிவாகின்றன.

மனத்தைப்பற்றி இன்னும் எவ்வளவோ விரிவான ஆராய்ச்சிகள் செய்யலாம். அவற்றிற்கெல்லாம் இங்கு இடமில்லை. பொதுப்படையாக எல்லாருக்கும் தெரிய வேண்டிய அடிப்படையான சில முக்கிய விஷயங்களையே இங்கு எடுத்துக் கூற விரும்பினேன்.

பிறக்கும்போது மனம் என்று ஒன்று தனிப்பட இல்லை என்று சிலர் கூறுகிறார்கள். சில மறிவினைகளை மட்டும் உடையவனாக மனிதன் உலகத்திலே தோன்றுகிறான்; அனுபவங்களின் மூலமாக மனம் சிறிது சிறிதாக உருவாகிறது என்பது அவர்களுடைய வாதம்.

இக் கொள்கைக்கு எதிராக வேறொரு கொள்கையுண்டு. மனம் என்பது பல வகையான திறமைகளுடன் பிறப்பிலே இருக்கிறது என்றும் அது அனுபவத்தால் மலர்ச்சியடைகிறது என்றும் அக் கொள்கையினர் கூறுகின்றனர்.

ஒவ்வொரு செங்கல்லாக அடுக்கிக் கட்டி ஒரு கட்டடம் உருவானது போல மனம் உருவாகிறது என்பது ஒரு கொள்கை.

ஆலமரத்தின் சிறு விதைக்குள்ளேயே அந்தப் பெரிய மரம் முழுவதும் மறைந்திருந்து பின்னால் வெளிப்படுவதுபோல மனம் மலர்ச்சியடைகிறது என்பது வேறொரு கொள்கை.

ஏதாவதொரு உயிரினத்தின் மறிவினைகளெல்லாம் ஒரே தன்மையில் அமைந்திருக்கின்றன என்று கண்டோம். மனித இடத்து மறிவினைகளும் அவ்வாறுதானிருக்கின்றன. அவ்வாறிருக்கும்போது ஒரே விதமான

சூழ்நிலையில் ஒரே விதமான அனுபவங்களைப் பெறும் குழந்தைகள் வெவ்வேறு விதமாகச் செயல் புரிவதற்கும், மனப்போக்குக் கொண்டிருப்பதற்கும் காரணம் என்ன? வெவ்வேறு வகையான இயல்புகளுடன் மனம் அமைந்திராவிடில் வேறு வேருன செயல்கள் நிகழ முடியாதென்பது இக் கொள்கையாரின் முடிபாகும். பெற்ருேர்களின் வழியாக வரும் பாரம்பரிய அமைப்பினுல் வெவ்வேருன இயல்புகள் காணப்படுகின்றன என்றும், இவற்றிற்கெல்லாம் மூலகாரணமாக முற்பிறவி வினைகள் நிற்கின்றன என்ற தத்துவக் கருத்தும் கூறப்படுகின்றன. பல பிறப்புகள் உண்டு என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ளாதவர்களும் உண்டு.

இவ்வாறு அடிப்படைக் கருத்துகளில் மாறுபாடுகள் இருந்தாலும் குழந்தையின் ஐந்து அல்லது ஏழு வயதிற்குள்ளாகவே அதன் பிற்கால வாழ்க்கையின் போக்கிற்கு வேண்டிய பொதுவான மன அமைப்பு ஏற்பட்டு விடுகிறது என்பதில் பெரும்பாலும் கருத்தொருமை காணப்படுகிறது. மனம் எவ்வாறு உருவாகியுள்ளது என்பதை முடிவாக அறுதியிட்டுக் கூற முடியாத நிலைமையிலும் இக் கருத்தை ஏற்றுக் கொள்வதில் தடையொன்றுமில்லை. அனுபவங்களின் மூலமும் சூழ்நிலையின் மூலமும் மனம் என்பது சிறிது சிறிதாகச் சேர்ந்து புதிதாக உருவெடுத்தாலும் அல்லது அவற்றின் மூலமாக மனம் மலர்ச்சியடைந்தாலும் விளைவொன்றுதான். ஆதலால் மனத்தின் தோற்றத்தைப் பற்றிய விவாதங்களில் தலையிடாமல் அதன் தன்மைகளை அறிந்துகொள்ள முயல்வது இன்றியமையாததாகும்.

மனம் நமக்குத் தனிப் பெருமை என்று மீண்டும் கூறுகிறேன். மற்ற உயிரினங்களுக்கு மனம் உண்டு

என்று வைத்துக்கொண்டாலும் அது மனிதனுக்குள்ள மனத்தைப்போல அத்தனை நுட்பமாகத் தொழில் செய்வதில்லை. மனிதனுடைய மனம் அத்தனை நுட்பமானது; பரிணாம ஏணியிலே ஏறி ஏறி, நுண்மை பெற்றுப் பெற்று அது விரிவடைந்திருக்கிறது என்று கூறலாம். மனிதனுடைய மனம் ஒரு பெரிய விந்தை. அதை முற்றிலும் அறிந்துகொள்வது மிகவும் அரிது. அறிந்துகொண்ட அளவிற்கு நல்லது.

உளவியல் என்ற அறிவியல் துறை தத்துவத்திலிருந்து தனியாகப் பிரிந்து இக்காலத்தில் விரிவாக வளர்ந்து வருகின்றது. அதைப் பற்றிய முக்கியமான கருத்துக்களை கவிஞர் பெ. தூரன் அவர்கள் தெளிவாகவும் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையிலும் தமிழில் எழுதும் ஆற்றல் வாய்ந்தவர் என்று இவர் நூல்களைப் படித்த பலரும் பாராட்டியுள்ளனர்.

இவர் எழுதிய வேறு உளவியல் நூல்களாவன:

குழந்தை உள்ளம்

குழந்தை மனமும் அதன் மலர்ச்சியும்

அடி மனம்

தாழ்வு மனப்பான்மை

குமரப் பருவம்

பாரம்பரியம்

இவர் எழுதிய கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், குழந்தை இலக்கியம் முதலான வேறு பல நூல்களின் விவரங்களைப் பாரி நிலையத்தாரிடமிருந்து தெரிந்துகொள்ளலாம்.

Jacket Printed at Neo Art Press, Madras - 2